Registered as a News Paper
பக்கம் - 24

# ஈழநாதம்

விலை: 16.00

வெள்ளிநாதம் Weekly

நாதம் - 16 | வெள்ளி - 08 | 15 - 21 - ஏப்ரில் - 2005



## கவனிக்கப்படுமா நன்னீர் மீன்பிடி...





## மக்களின் கோபங்கள்





## சீனாவின் நகர்வு

## படித்ததில் பிடித்தது

### இழந்துபோன கனவுகள்

இங்கே தான்
உயிர் மூச்செறிந்த தொருகாலம்
அச்சம் அப்பி
நாகூட எழ முடியாது
இன்றும் கலந்துள்ளது.

என்னுடன் இருந்த
முகங்களை நினைத்துப் பார்க்கிறேன்
கன்னம் வீங்கி
இரத்தம் ஒழுகும்
முகங்கள் எனக்குள் பிடிபடாது
கை நழுவிப்போகிறது.

நிதானித்தும்
இருபத்தி மூன்று முகங்களும்
அசைவொன்றைக் காட்டி
மயிர்க் கூச்சலெறிந்து
மறைந்தது.

என்மகனே அப்பாவின்
துயர்படிந்த இரத்தக் கறைகளைப்பார்.

இது உன் பொக்கிஷம்
அந்நியனின் ஈனக்கரங்களினால்
உன் தேச விடுதலைக்கு
சிந்திய விலையற்ற பொக்கிஷம்.

இது சிறிதொரு பயணமல்ல
வேள்வித் தீயை ஏந்திக் கொண்டு
காடையும் கரம்பையும்
ஆற்றையும் கடலையும்
கடந்து வந்த பெரும் பயணம்.

நீ பெரியவனாகிவிட்டாய்,
இழந்துபோன கனவுகளை மீட்டெடுக்க,
தயாராக இரு.

ஆங்கிலத்தில்:~பாத்திமா நஜீம்
தமிழில் இ.றஜித்

### முப்பரிமாணங்கள்

சாரதி அறையில்
இயந்திரத்தின் கடவுள்
தலையில் தொப்பி
உடல் மூடிய மேலாடையுடன்
ஆடு தண்டின் இரகசியத்தை
கையில் வைத்திருக்கிறான்.

பெட்டிகளிலே
முதல் வகுப்புக் கடவுள்
சீர்படுத்திய காற்றில்
திட்டங்களை தீட்டுகிறான்.

பக்கத்து
புகையிரதப் பாதையில்
பெட்டிகளின்
உருக்குத் தகடுகளில்
வெறும் கால்கள் படிந்திருக்க
மூச்சுப்பை
வெடித்துவிடப் போவதுபோல்
உழல்கிறான்
கைவண்டியின் கடவுள்.

ஆங்கிலத்தில் – ஜோஸ் கிறவெய்றின்கா
தமிழில் – வின்சென்ற் புளோறன்ஸ்

## காரசாரம்

'விவசாயஞ் செய்யிறவன் கடைசியில கணக்குப்பாத்தா மாடுசாய்க்கிற கம்புதான் மிச்சம்'

என்று கூறினாலும் இன்றைய நிலையில் நெற்செய்கை இலாபமான தொழில்தான் என்ன நெல்லை விற்று பெரும்பணத்தை பெறுவதால் அல்ல வருசம் முழுக்க அடுப்புப்புகையும் அதனால்தான். மற்றப்படி இன்றைய விவசாயிகள் படுந்துயரம் சொல்லும் தரமன்று. சென்றபோக அறுவடை நெல் இன்னும் கட்டிப்போட்டபடி வீட்டுக்குள் இருக்கிறது. இந்தப் போகம் சூட்டடிப்பு நடக்கிறது. இந்த நெல்லும் விற்கமுடியாது. கூலியோ விசம்போல ஏறுகிறது. அரிவிவெட்ட ஆட்கூலி ஐந்நூறு ரூபா, அடிப்புக்கு ஏக்கருக்கு ஐயாயிரம் வேண்டும். இதில் உழவுச் செலவு குத்தகை என்று பார்த்தால் வரவும் செலவும் சரியாகிவிடும். அதே நேரம் நெல்லைக் கட்டிவைத்துக் கொண்டு கூலி எப்படிக்கொடுப்பது.

நெல்லை விற்பதற்கு விவசாயிகளுக்கு வழி தெரியவில்லை. அதே சமயம் சிறுபோக விதைப்பு மழை பெய்து முடிகிறது. நெடுங்கேணி, கரப்புக்குத்தி விஞ்ஞானங்குளம் பகுதி விவசாயிகளின் நெல்லை வவுனியாவுக்குக்கொண்டு சென்று விற்கமுடியவில்லை. உள்ளூரிலும் விற்கமுடியவில்லை. "இந்த நிலை நீடித்தால் இன்னும் அரிசிவிலை இறங்க வில்லை. ஆனால் உற்பத்தி தேங்குகிறது. சரியானமுறையில் இன்னமும் உற்பத்தி பயன்படுத்தப்படவில்லை. அரிசி காரணம் உற்பத்திச் செலவை ஈடுகட்டுமளவுக்குச் சந்தைவாய்ப்பு அல்லது சந்தை விலை இல்லாமற் போனதுதான். இன்றைய தென்னிலங்கை மரக்கறிகளுக்கு நாம் மனமுவந்து கொடுக்கும் விலையை உள்ளூர் விவசாயிகளுக்குக் கொடுக்கவில்லை. கத்தரிக்காயை உற்பத்தி செய்து விற்கவந்தபோது அதன் வீழ்ச்சியடைந்த விலை காரணமாக அதை மாடுகளுக்குக் கொட்டிய விவசாயிகளை எனக்குத் தெரியும். மரவள்ளியை உற்பத்திசெய்துவிட்டுச் சந்தையில் இரண்டு ரூபாவுக்கும் விற்கமுடியாமல் கஷ்டப்பட்ட விவசாயிகள் இருந்தனர். இன்று மரவள்ளிக்கிழங்கு யாழ்ப்பாணத்திலிருந்து வருகிறது. விலையும் ஒரு கிழங்கு இருபது முப்பது ரூபாய். ஆம் அதன் எடை அப்படி. மரவள்ளித்தடியென்பது வன்னியில் அருமருந்தாகிவிட்டது. மரவள்ளி நடக்கூடாது எனக் கட்டளையிட்ட ராணுவமும் ஒரு காரணம். உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவித்து உள்ளூர் விவசாயத்தை வளர்த்து உள்ளூர் மூலவளங்களின் உயர் பயன்பாட்டைப் பெறுவதற்கு ஆக வேண்டியதையெல்லாம் சம்பந்தப்பட்டவர்கள் கவனித்தால் என்ன? சந்தை மட்டும் ஒழுங்குற நடந்தால், நடப்பதால் பெறுமதியில்லை. சந்தை என்பது உற்பத்தியாளர்கள் உள்ளூர் உற்பத்தியாளர்களின் உபயோகமான ஒருதலமாக மாறவேண்டும். வெளியிலிருந்து வரும் பொருட்கள் எம்மால் யாளர்கள் திணறுவதைக் காணக்கூடியதாகவும், இடையில் கோழிகள் தட்டுப்பாடாகிவிட வெளியிலிருந்து கோழிகளைக் கொள்வனவு செய்வதும் நடைபெறுகிறது. இதே போன்று வன்னியில் கிளிநொச்சி மாவட்டத்தில் மட்டும் தொண்ணூறு ஆயிரத்துக்குமதிகமான முட்டைக் கோழிகள் நாட்டுக்கோழி நீங்கலாக வளர்க்கப்படுகின்றன. முட்டை விற்பனை வீழ்ச்சியடைந்துவிட்டது. மறுபக்கம் போசாக்குக் குறைபாடும் நிலவுகின்றது என்ற தகவல் வருகிறது. கோழித்தீன், மருந்து, கூட்டுச்செலவு என்பன ரெட்டித்துப் போயிருக்கும் போது முட்டை விலை மட்டும் முன்னிருந்ததைவிடப்பாதியாகக் குறைந்துவிட்டது. கொஞ்சம் வசதியான உற்பத்தியாளர் தமது பண்ணை முட்டைகளை யாழ்ப்பாணத்துக்கு ஏற்றிச் சென்று ஒரு முட்டை ஐந்து ரூபாவாக விற்றதை மனவருத்தத்துடன் கூறினார். இரண்டாயிரம் கோழி வளர்ப்பவருக்கும் இருநூறு கோழி வளர்ப்பவருக்கும் ஒரு தடவை போனால் ஒரு தடவை வரலாம். ஐம்பது கோழிகளைத்தனது வீட்டிற்கு ஒரு அபிவிருத் தியைக்காண வளர்க்கும் ஒருவர் அதுவும் உதவி நிறுவனங்களின் ஒத்துழைப்புக்கடன்மூலம் பெற்று வளர்ப்பவர்கள் அதை என்ன செய்வது. வழமையாக பணவசதி படைத்தோர் சந்தையின் ஏற்றத்தாழ்வை நிர்ணயிக்கும் போது போட்டிகளை ஏற்படுத்தி விலை உயர்வை நிர்ணயித்து அதன்மூலம் போட்டி உபரி உற்பத்தியாளர்களைத் தலையெடுக்கவிடாமல் செய்வதே வழக்கம். முட்டை உற்பத்தி இறைச்சி உற்பத்தி என்பவற்றுக்கான கேள்விகளைச் செயற்கையாக ஏற்படுத்தும் வணிகப்பண்பை எமது அரசோ ஊடகங்களோ கொண்டிருக்க

## சொல்லாமல் இருக்கமுடியவில்லை?

ஆலைகளின் பற்றாக்குறை ஒருபுறம், மின்சாரம் இல்லாமை மற்றொருபுறம், கொள்வனவு செய்ய முதலின்மை, களஞ்சியமின்மை என்பன வேறுபுறங்களாக உள்ளன. எனினும் நகரப்பகுதிக்கடைகளில் சைனா அரிசி, கொழும்புச் சம்பா என்ற பெயர்களில் அரிசி விற்பனையாகிறது. கொழும்பில் சம்பா விளைகிறது என்பதே ஆச்சரியம்தான். எங்களை எங்கடபாட்டில எதையுஞ்செய்யவிடுங்கோ என்ற விவசாயிகளின் பின்னால் பெரிய சோக வரலாறே இருக்கிறது.

"போன வரியம் தாலிக்கொடிய அடகுவைச்சு வெள்ளாமை செய்தார். இந்த வரியம் வட்டிகட்டிமாளாதெண்டு வித்துப்போட்டுச் செய்தார். எனக்கு கொடி எடுத்துத்தரயில்லையோ நடக்கிறதப் பாருங்கோவன்" என்ற பெண்ணின் ஆத்திரத்துக்குப் பதில் சொல்லமுடியாமல் மௌனங்காத்தார் கமக்காரர்.

சிறுபோகச் செய்கைக்கு ஒரு ஈவுப்பங்கு எடுத்துவிடப்படாதபாடு படுகின்றனர். நிலமற்ற விவசாயிகள் பணத்தை முதலீடு செய்து இரண்டு மூன்று பெயரில் காணிகளைப் பெற்றுப்பின் ஐயாயிரம் ரூபாவுக்கு வேறு நபர்களுக்கு மாற்றம் செய்கின்றனர். மல்லாவியில் ஏக்கர் ஏழாயிரம் ஏட்டாயிரமும் கொடுத்து வாங்கியுள்ளனர். காணிகளில் பிரச்சினைகளிருந்தாலும் கொடுப்பவர் உடனடி லாபத்துக்கு காணியைக் கொடுத்துச் சம்பாதிப்பவர்களை யார் கட்டுப்படுத்துவது. பனையால விழுந்தவனை மாடேறி மிதிச்சதுபோல விவசாயிகளின் துயரம் தொடர்கிறது. மரக்கறிப் பயிர்ச்செய்கை ஓரளவு கைவிடப்பட்ட நிலைக்குள் தள்ளப்பட்டுவிட்டது. உற்பத்திசெய்ய முடியாதவைகளாக இருக்கவேண்டும் என்பதற்காக கழிவுப்பொருட்களை உற்பத்திசெய்யக் கூடாது. பொலித்தீன் பைகளில் அவை புழக்கத்துக்கு வந்தபோது இருபத்தெட்டுறாத்தல் பொருளைக் கொண்டுசெல்ல முடிந்தது. இன்றைய பொலித்தீன் பையை விரிப்பதற்காக ஊதினால் கிழிந்துபோகிறது. இப்படிப் பட்ட உற்பத்திகள் தேவையா?

கால்நடை வளர்ப்பு என்பது விவசாயத்தின் ஒரு பகுதி என்றாலும் பயிர்ச்செய்கைக்குத் தேவைப்படுவது போல் அவ்வளவு தொகையான நிலம் தேவைப்படுவதில்லை. எனவே ஆடு, மாடு வளர்ப்பைவிட கோழி வளர்ப்பு பெருமளவு விரும்பிச் செய்யப்படுகிறது. பாரம்பரியமாக நாட்டுக் கோழிகளையே வளர்த்து வந்த மக்கள் நவீனரகக் கோழிகளை வளர்த்து பெருமளவு லாபம் பெறக்கூடியதாக இருந்தது. எனினும் படிப்படியாக கோழி வளர்ப்போர் தொகையை ஊக்குவிப்பதற்காக இறக்குமதி செய்யும் கோழிக்குஞ்சுகளுக்கு வரிவிலக்கும் அளிக்கப்பட்டிருக்கிறது. விளைவு பெருந்தொகையான புறொயிலர்களும், முட்டைக்கோழிகளும் இறக்குமதிசெய்து விநியோகிக்கப்படுகின்றன. ஒழுங்கமைவின்றி குஞ்சுகள் வந்தால் எல்லாம் ஒரேயடியாக வரும். வராமல் விட்டால் நீண்ட நாட்கள் வராது. புறொயிலர் இறைச்சிக் கோழியைப் பொறுத்தவரை அது குறுகியகால அறுவடைக்குரியது. எனவே வன்னிமக்களின் அன்றாடத் தேவைகளைக் கணக்கெடாது குத்துமதிப்பாகக் கொண்டுவந்து குஞ்சுகளைக் கொட்டிவிட்டு விற்பனைச் சமயத்தில் விற்கமுடியாமல் உற்பத்தி வில்லை. முதலில் உங்களுக்குத் தெரியுமா? முட்டை விற்பனை தேக்கமடைந்தபோதுதான் முட்டையடித்தல் என்ற சம்பிரதாயம் ஏப்ரல் முட்டாள் தினத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. வாழ்த்துப் பொருட்பரிசுகளின் விற்பனையைக் கூட்டிவிட காதலர்தினம் விளம்பரப்படுத்தப் பட்டது. உண்மையில் வன்னிக் குழந்தைகள் போசாக்கு நிலையில் உயரவில்லை. என்றாலும் பால், முட்டை, இறைச்சி போன்ற உற்பத்தியாளர்கள் எதுவித நன்மையும் அடையவில்லை. ஒரு லீட்டர் பாலை பதினைந்து ரூபாவுக்கு வாங்க முடியாதவர்கள் ஒரு லீட்டர் தண்ணீரை முப்பத்தைந்து ரூபாவுக்கு வாங்குகிறார்கள். ஒரு முட்டையை ஆறு ரூபாவுக்கு வாங்கமுடியாதவர் ஒருகிலோ ஒருசத்துமற்ற கோவாவை நாற்பது ரூபாவுக்கு வாங்குகிறார்கள். திரிபோசாமாவுக்கும் கோன்சோயாவுக்கும் வரிசையில் நிக்கிறார்கள். எந்த உணவு விடுதியின் முகப்பிலும் 'சுடச்சுட ஒரு கப் மாகிசூப்' என்ற விளம்பரம் தொங்குகிறது. நாங்கள் வளர்க்கும் கோழியில் உந்த சூப் செய்யமுடியாதா? எங்கள் மண்ணில் எந்தத் தானியம் விளையாது அவற்றைப் பதப்படுத்தி பொட்டலம் பண்ண முடியாதா ஏழை மக்கள் ஒருவழியாலும் முன்னேற முடியாத பொருளாதாரத் திட்டங்களை ஏன் வகுக்க வேண்டும். வெளி மாவட்டப் பொருட்களின் பாவனையை ஊக்குவிக்கும் விளம்பரப் பலகைகளை வானளாவ வளர்ந்து விட்டு சுதேசியம் பேசுவது சரியா? சுதேசியம் சாத்தியமா?

மாயா

# சீனாவின் நிதானமான நகர்வு

***இலங்கை விஜயத்தை முடித்துக்கொண்டே சீனப்பிரதமர் இந்தியா சென்றுள்ளார். எனவே இலங்கைக்கு அடுத்த படியான நிலையையே சீனா இந்தியாவுக்கு கொடுத்திருக்கின்றதென்பதை அவரது விஜயம் உணர்த்தியுள்ளது. இலங்கை இனப்பிரச்சினையோடு அல்லாதுவிட்டாலும் இலங்கையுடனான உறவில் சீனா அதிகமாக நெருக்கத்தினை வைத்துக்கொள்ள விரும்புகிறது.***

-ஐங்கரன்-



ரணில் விக்கிரமசிங்க



சந்திரிகா



சீனப்பிரதமர்

சீனப் பிரதமரின் இலங்கை விஜயம் ஆருடங்களையும், நம்பிக்கைகளையும் அதிகரிக்க வைத்துள்ளது. சுனாமியின் அழிவுகளில் மிகப்பிந்திய அரசியலாக பார்க்கக்கூடியதாக சீனாவின் நகர்வு அமைந்திருக்கின்றது. அவசரமின்றி நிதானமாக நியமமாகத் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டுள்ள வருகையாகவே அமைந்திருந்தது. அத்தோடு மிக பெரிய ஆலோசகர்கள், பணிப்பாளர்கள், கண்காணிப்பாளர்களென 200 பேருக்கு மேற்பட்டவர்கள் சீனப் பிரதமரோடு வருகை தந்திருந்தனர். சீனப்பிரதமரின் இலங்கை வருகையும், ரணில் விக்கிரமசிங்கவின் இந்திய விஜயமும் சமகாலத்தில் நிகழ்ந்ததோடு இந்தியாவுக்கான சீனப்பிரதமரது பயணம் இரண்டாவது தரத்தையே பெற்றிருந்தது. இவற்றின் அரசியல் நகர்வுகளை பரிசீலிப்பதே பொருத்தமானது.

சீனா-இலங்கையோடு நீண்டகால உறவைப் பேணிவருகின்றது. அரிசி-றப்பர் உடன்படிக்கை என்பது மிக நீண்டகால உடன்படிக்கையாக அமைந்திருக்கின்றது. இது சீனாவுக்கும் இலங்கைக்குமான நெருக்கத்தை காட்டப்போதுமானது. 100 ஆண்டுகால உடன்படிக்கை ஊடாக பரஸ்பர இரண்டு அரசுகளும் தமது உறவு நிலையை வலிமையானதாகவும், பலமுடையதாகவும் ஆக்கிக்கொண்டன. அந்தவகையில் மட்டுமன்றி இலங்கையின் இராணுவ தளபாடங்களுடனும் கடற்படை கப்பல்களோடு-சீனாவுக்கு அதிக தொடர்பு இலங்கையோடு இருக்கின்றது. சீனாவின் சிறியரகக் கப்பல் ஒன்றுடன் 14 சீனர்கள் காணாமல் போனமையே இறுதியாக நிகழ்ந்த சம்பவமாகும். இதன்பின்பு தென்னிலங்கையில் வளர்ந்துவரும் ஜே.வி.பிஐ சீனாவில் நடந்த அரசியல் மாநாட்டுக்கு அழைத்தமை அதிக சர்ச்சையை உருவாக்கிய சம்பவமாக அமைந்திருந்தது. ஆனால் ஜே.வி.பியின் வளர்ச்சியுடன் மிக ஆரம்பகாலத்திலிருந்து அதிக தொடர்பினைக் கொண்டிருந்த பிரதான நாடு சீனாவாகும். சீனப்பாணியிலேயே பல புரட்சிகளை செய்யத்திட்டமிட்ட ஜே.வி.பி தோற்றுப்போனவற்றையும் குறிப்பிட்டாகவேண்டும்.

சீனப் பிரதமர் ஏனைய நாட்டுத் தலைவர்களையும் போன்றே சுனாமியின் பாதிப்புக்களை தென் இலங்கையின் பக்கம் நின்று பார்த்துவிட்டு சென்றுவிட்டார். அத்தகைய பார்வைக்கு அரசியல் அர்த்தம் கொடுப்பது அவசியம் என்பதோடு அத்தகைய நோக்கமே அவர்களிடம் மேலோங்கியிருந்தது. அதாவது தென் இலங்கை அரசியல் தலைமையை திருப்திப்படுத்துவதே சீனப் பிரதமரது விஜயத்தின் நோக்கமாக இருந்தது. குறிப்பாக 600 மில்லியன் ரூபாக்கள் இலங்கை அரசாங்கத்திற்கு வழங்குவதுடன் ஆறு உடன்படிக்கைகளிலும் கைச்சாத்திட்டிருந்தது. அவை ஆறும் தென் இலங்கையின் அபிவிருத்தியை அதிகம் இலக்குவைத்ததாகவே அமைந்திருந்தன. இது தென்னிலங்கைக்கும் சீனாவுக்குமான உறவாகவே காணப்பட்டது.

இவ்வாறு சீனா ஏன் நகர்வுகளை மேற்கொண்டதென விளங்கிக்கொள்ளவேண்டும். சீனாவுக்கு இந்தியாவுடனும், அமெரிக்காவுடனும் நீண்ட காலமாக இல்லாதுவிட்டாலும் குறுகிய காலத்திலாவது பகைமை உடைய நாடாகவுள்ளது. சீனாவின் பகைமையால் இந்தியாவை விட அமெரிக்காவே அதிகமாக எரிச்சலையும், ஆத்திரத்தையும் அனுபவித்துவருகின்றது. தனது அரசியல்-பொருளாதார-இராணுவ நலன்களை பூர்த்திசெய்ய முடியாது. அமெரிக்கா பல பிராந்தியங்களில் திண்டாடுகின்றது. அவ்வாறே வெளியே எதையும் அலட்டிக்கொள்ள முடியாது. ஆனால் சீனாவுடன் பகைமையை கொண்டிருக்கும் நாடாக இந்தியா விளங்குகிறது. இரண்டு நாடுகளதும் அதாவது அமெரிக்கா, இந்தியா என்பவற்றின் நடவடிக்கையால் இலங்கை அரசாங்கமும் இலங்கை இனப்பிரச்சினையும் இழுபறிப்பட்டுக்கொண்டிருக்கின்றன. இந்த இழுபறியில் சிறிலங்கா அரசாங்கம் இக்கட்டில் மூழ்கியிருப்பதுடன், கூட்டமைப்பு அரசாங்கத்துக்குள்ளேயே முரண்பாடுகள் அதிகரித்துள்ளன. இதில் ஜே.வி.பி மீதான சனாதிபதியின் ஆக்ரோசமான (வாயளவில்) பாய்ச்சல் படிப்படியாக அதிகரிப்பதுடன் ஜே.வி.பி மீதான அழுத்தமும் அதிகரித்துவருகிறது. இந்தச்சந்தர்ப்பத்தில் சீனாவின் வருகை சிறிலங்கா அரசாங்கத்தை அதிக அளவில் நெருக்கடிக்குள்ளாக்க முயலும் அமெரிக்க-இந்திய இழுபறியையும் ஜே.வி.பி சந்திரிகா முரண்பாட்டையும் தீர்க்கக்கூடியதாக அமையுமென எதிர்பார்த்தே சீனா நகர்ந்தது. இந்தியா தனது செல்லப்பிள்ளை ஜே.வி.பி என நினைத்துக் கொண்டிருக்க, சீனா அதைத் தட்டிச்செல்லும் சம்பவமாகவே இதுவுள்ளது.

நெருக்கடியான நேரத்தில் இலங்கை அரசாங்கத்தை பாதுகாத்ததன் மூலம் சிறிலங்காவை தனது பக்கம் இழுத்துவிடலாமென சீனா கணக்குப் போட்டுள்ளது. இந்துசமுத்திரப் பிராந்தியத்தில் ஸ்திரமடைந்துவரும் சீனா இலங்கையின் உறவை அதிகம் பேணவே முயற்சிக்கும் என்பதில் எந்தவிதமான சந்தேகமும் கொள்ளத்தேவையில்லை. அது அமெரிக்காவினதோ, இந்தியாவினதோ நெருக்கத்தைவிட தனது நெருக்கத்தை அதிகமாகப்பேணவே விரும்பும். அதற்காக இந்தியா மாதிரியோ அமெரிக்கா மாதிரியோ சீனா செயல்படுவதில்லை. அவ்வாறு செயற்படவும் முயற்சிக்காது. அது சீனாவின் ஆக்கிரமிப்பு அல்லது உறவுநிலை சார்பான காரணியுமல்ல. எனவே சீனாவின் அணுகுமுறையையும், நடவடிக்கையையும் இத்தகைய நகர்வுகளுக்குள்ளாலேயே அவதானிக்கவோ, கண்டுகொள்ளவோ முடியும்.

இலங்கை விஜயத்தை முடித்துக்கொண்டே சீனப்பிரதமர் இந்தியா சென்றுள்ளார். எனவே இலங்கைக்கு அடுத்தபடியான நிலையையே சீனா இந்தியாவுக்குக் கொடுத்திருக்கின்றதென்பதை அவரது விஜயம் உணர்த்தியுள்ளது. இலங்கை இனப்பிரச்சினையோடு அல்லாதுவிட்டாலும் இலங்கையுடனான உறவில் சீனா அதிகமாக நெருக்கத்தினை வைத்துக் கொள்ளவிரும்புகிறது.

அமெரிக்கா சீனாவுக்கு எதிரான யுத்த நிலை பொருளாதார நிலைகளை திறக்கும் போது சீனாவும் மௌனமாக செயற்படாது அதற்கு மறுவளமாகச் செயற்பட ஆரம்பித்துள்ளது. வடகொரியா, தாய்வான் அரசியலில் அமெரிக்காவின் நகர்வுக்குப் பதில் நகர்வாகவே இலங்கை விடயத்தை சீனா பார்க்க விரும்புகிறது. இது இந்தியாவுக்கு மட்டுமல்ல அமெரிக்காவுக்கு தலைவலியை ஏற்படுத்தும் அரசியலாகவுள்ளது.

இதில் ரணில் விக்கிரமசிங்கவின் பங்கு எப்படி உண்டு என்பதையும் அளவிடுதல் வேண்டும். ரணிலின் இந்தியப் பயணம் சனாதிபதியின் நடவடிக்கையை எதிர்த்து முறையிடுவதற்கானதென ரணில் முதலிலேயே குறிப்பிட்டிருந்தார். இதனால் சீனப்பிரதமர் இலங்கைக்கு வரும்போது இந்தியாவில் ரணில் இருந்தது மட்டுமல்லாது வர்த்தகம், பாலம் அமைப்பு, கப்பல் போக்குவரத்து என்பதைப்பற்றி இந்தியப் பிரதமரோடும், பாதுகாப்பு, பெற்றோலியம், வெளிவிவகார அமைச்சுக்களுடன் கலந்துரையாடியுள்ளார் ரணில் விக்கிரமசிங்க. அப்படி ஆழமாக ஆளும் தரப்பு போன்று ரணில் கலந்துரையாடியமைக்கான காரணம் சீனாவுடன் சந்திரிகா குமாரங்க நெருக்கமடைந்துவருகிறார் என்பதையும் அதனால் இந்திய ஆட்சியாளர்கள் உசாரடையவேண்டும் என்பதையுமே நினைவுபடுத்துவதாக ரணில் நடந்துகொண்டார். இதனால் ரணிலுக்கு இரண்டு இலாபங்கள் நேரடியாக இந்தியாவை திருப்திப் படுத்தியதுடன் மறைமுகமாக ஒப்பீட்டிப்படையில் அமெரிக்காவையும் திருப்திப்படுத்திவிட்டார்.

எனவே சீனப் பிரதமரது இலங்கை வருகை தென்னிலங்கையை திருப்திப்படுத்தினாலும் தென்னிலங்கை பிராந்திய மட்டத்திலும், சர்வதேச மட்டத்திலும் அதிருப்தியையே எதிர்நோக்கவுள்ளது. ஜே.வி.பி கணிசமான நிமிர்வை பெற்றிருப்பதுடன் மீண்டும் ஒரு தடவை சிங்கள அரசியல் தலைமை இந்தியாவை ஏமாற்றிவிட்டது.

# கவனிக்கப்படவேண்டிய நன்னீர் மீன்பிடி

நன்னீர் மீன் பிடி தொழிலிலும் எமது பிரதேச மக்கள் கணிசமான அளவு ஈடுபட்டு வருகின்றனர். கடல் உணவுப் பொருட்களில் உள்ள கனியுப்புகளை நன்னீர் மீன்களில் எதிர்பார்க்க முடியாது. ஆனால் வேறுபாடான கனியுப்புகளும், கொழுப்புச் சத்துகளும் நிறையவே கொண்ட போசாக்கு மிக்க உணவாக இதனை எமது சமூகம் புரிந்து கொண்டமையால் தற்போது அதற்கான கேள்வி அதிகமாக உள்ளது.

இந்நிலையில் நன்னீர் மீனவர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளை அறியும் நோக்குடன் இரணைமடு நன்னீர் மீன் பிடி கூட்டுறவுச் சங்கத் தலைவர் கா.நாகேந்திரகுமார் அவர்களை சந்தித்தோம்.

இருபத்து மூன்று வருடங்களாக தொழிலில் ஈடுபட்டு வருகிறோம். ஆனால், இன்று வரைக்கும் எந்தவித மானிய அடிப்படையிலான உதவிகளும் எமக்கு கிடைக்கவில்லை. அண்மையில் ஒரு அரசசார்பற்ற நிறுவனத்தால் கொஞ்சம் வலைகள் கிடைத்தன. அதை பயன்படுத்துவதற்குக் கூட எம்மிடம் வள்ளங்கள் இல்லை. அறுபது தொழிலாளர் இருக்கின்ற எங்கட சங்கத்தில இருக்கின்ற வள்ளங்களோ ஆறுதான். இதனால் பல தொழிலாளர்கள் ஏனைய வேலைகளுக்கு சென்றுவிட்டார்கள். மேலதிகமாக ஒன்பது வள்ளங்கள் உள்ளன. அவை சேதம்



அடைந்த நிலையில் இருக்கின்றன. எங்கட சங்கத்தின் மூலம் திருத்திக்கொடுப்பதற்கு போதியளவு நிதி இல்லை. வைத்திருந்த ஒரு சிறியளவான தொகையினை மீள் குடியேறிய மீனவர்களுக்குக் கடனாக வழங்கியுள்ளோம். நாங்கள் எதிர்பார்ப்பது எல்லாம் என்னவென்றால் அரசிடமும் சரி, ஏனைய நிறுவனங்களிடமும் சரி, நன்னீர் மீனவர்கள் பக்கமும் உங்கள் கடைக்கண் பார்வையாவது செலுத்துங்கள் என்று.

இதைவிட மிக முக்கியமான பிரச்சினை என்னவெனில் இரணைமடு குளத்தில் மீன் வளங்கள் அருகிக்கொண்டு செல்கின்றன. 1976ஆம் ஆண்டு கோல்டன் இன மீன் குஞ்சுகளை கொண்டு வந்து குளத்தில் விட்டனாங்கள். அதை பயன்படுத்தியே இன்று வரை தொழிலைச்செய்து வருகிறோம். இதைவிட மற்றொரு பிரச்சினை விவசாயத்திற்காக நீரைத் திறந்துவிடுகின்ற கால்வாய்கள் (துருசு) மூலம் ஏராளமான மீன் குஞ்சுகள் வெளியேறுகின்றன. அவ்வாறு வெளியேறிய மீன்கள் பல பிரதேசங்களில் உள்ள வாய்க்கால்களில் இறந்து காணப்படுவதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

இதனைத் தடுப்பதற்கு அவ் இரண்டு கால்வாய் துவாரங்களுக்கும் உலோக வலையை தடுப்பாகப் பயன்படுத்த உதவி செய்யுமாறு நான்கு வருடங்களுக்கு முன் கிளி.மாவட்ட அரச அதிபரிடம் வேண்டுகோள் விடுத்தோம். அவரும் நீர்ப்பாசனத் திணைக்களத்திடம் கூறியுள்ளதாகக் கூறினாரே தவிர இன்று வரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஆரம்ப காலங்களில் ஒரு வள்ளத்திற்கு ஐம்பது கிலோ அளவில் மீன் பிடிக்கக் கூடியதாக இருந்தது. ஆனால் இப்போது ஒரு வள்ளத்திற்கு ஐந்து கிலோ அளவில்தான் மீன் பிடிக்கக்கூடியதாக இருக்கின்றது என தங்களது பிரச்சினைகளை விபரித்தார் நன்னீர் மீன்பிடி கூட்டுறவுச் சங்கத் தலைவர்.

அதிகளவான போசாக்கு நிறைந்த இந் நன்னீர் மீன்கள் இன்று பலர் மத்தியில் நல்ல வரவேற்பினைப் பெற்றுள்ளன. சிலர் இதில் நல்ல போசாக்கு உண்டு என்பதனை அறிந்தும் ஏதோ ஒரு கௌரவம் காரணமாக உணவில் சேர்த்துக்கொள்வதில்லை. இது ஒரு புறம் இருக்க முழுநேர மீனவர்களாக மீன்பிடித் தொழிலையே நம்பி இருக்கின்ற இவர்கள் பெரும்பாலும் வசதி வாய்ப்புக்கள் குறைந்தவர்களே. எனவேதான் இவர்களது பிள்ளைகளின் கல்வி மற்றும் குடும்ப மேம்பாட்டிற்காக இவர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளை தீர்ப்பது பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளின் கடமையல்லவா. இவர்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகள் எல்லாம் தீர்த்து வைக்கக் கூடிய இலகுவான பிரச்சினையே. எனவே இவர்களது வாழ்விலும் ஒளியேற்ற உரிய அதிகாரிகள் அக்கறை எடுக்கவேண்டும் என்பது அனைவரதும் எதிர்பார்ப்பும் கூட.

இப்போது எல்லாம் நன்னீர் மீன்பிடித் தொழிலில் புதிய தொழில்நுட்பங்களை பயன்படுத்தி அவற்றை மேம்படுத்தி வருகின்றனர். தென்னிலங்கையிலும் கூட இவ்வாறே நடைமுறைகள் உள்ளன. ஆனால் எமது பிரதேசத்தைப் பொறுத்தவரை போதியளவான குளங்கள் இருந்தும் நன்னீர் மீன்பிடித் தொழிலை மேம்படுத்துவதற்கான திட்டங்கள் ஏதேனும் இன்று வரை எடுக்கப்படவில்லை.

எமது குளங்களில் பல இன நன்னீர் மீன் உள்ளன. அவற்றை துறைசார் நிபுணர்களின் ஆலோசனைப்படி அவற்றின் எண்ணிக்கையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கலாம். அல்லது வேறு இடங்களில் இருந்து மீன் குஞ்சுகளை பெற்று எமது குளங்களில் விட்டு அதன் எண்ணிக்கையை அதிகரிக்கலாம், இல்லையெனில் இனிவரும் காலங்களில் எமது குளங்களில் உள்ள நன்னீர் மீன் அழிந்துவிடும் நிலை கூட ஏற்படலாம். எனவே நன்னீர் மீன்பிடித் தொழிலை நவீனமுறைகள் மூலம் வளர்ச்சி அடையச் செய்வதோடு நன்னீர் வளங் களையும் பாதுகாக்க நடவடிக்கைகள் எடுப்பது சிறப்பானதாக இருக்கும் அத்தோடு அம் மீனவர்களின் வாழ்க் கைக்கும் ஒளியேற்றினதாகவும் அமையும்.

# சிறுதுளிதான் பெருவெள்ளம்



எமது தாயக பொருளாதாரம், கடல்வளம், விவசாயம், விலங்குவேளாண்மை போன்றவற்றையே பெரிதும் நம்பி இருக் கின்றது. அதனால் இத்துறைகளை மேம்படுத்து வதோடு மட்டுமல்லாமல் இவற்றில் ஏற்படுகின்ற வீண்விரயங்களை இயன்றளவு தவிர்க்க வேண்டும். அப்போதுதான் தாயகப் பொருளாதா ரத்தினை அபிவிருத்தியை நோக்கிக் கொண்டு செல்ல முடியும்.

"எவன் ஒருவன் திட்டமிடாமல் செயற்படுகின்றானோ அவன் திட்டமிட்டே தோல்வியைத் தழுவிக்கொள்கிறான்" இது எல்லாவற்றுக்கும் பொருந்தும்; திட்டமிடல் என்பது எல்லாவற்றுக்கும் அவசியமானதே.

வன்னிப் பெருநிலப்பரப்பை பொறுத்த வரை விலங்கு வேளாண்மைக்கு ஏற்ற பிரதேசம் அதிலும் மாடு வளர்ப்பு குறிப்பிடத்தக்கது. ஆனால் இங்கு பிரச்சினை என்னவென்றால் பெரும்பாலான பசுப்பால் சந்தைக்கு வருவ தில்லை. பால் கொள்வனவில் ஈடுபடுகின்ற வர்கள் பெரியளவிலான மாடுகள் வளர்ப்ப வர்களிடம் மட்டும் சென்று கொள்வனவு செய்து வருகின்றனர். ஒருசில மாடுகள் வளர்ப்ப வர்களிடம் கொள்வனவாளர்கள் செல்வ தில்லை. இதனால் அவர்கள் தங்கள் தேவைக்கு மாத்திரம் எடுத்துவிட்டு மிகுதியை விட்டுவிடுகின்றனர். நாம் ஒன்றைக் கவனத்தில் எடுக்கவேண்டும். அதாவது சிறுதுளிதான் பெருவெள்ளமாக மாறும் என்பதனை; சாதார ணமாக 10 லீற்றர் பால் விற்பனை செய்கின்ற ஐந்து பேரிடம் மட்டும் 50 லீற்றர் எடுத்துவிட்டு வர ஏனைய இடங்களில் 50 வீடுகளில் 100 லீற்றர் பால் சந்தைக்கு வராமலே போய் விடுகின்றது.

இது தொடர்பாக பலர் எமக்கு கூறும்போது முன்பு அர்ச்சுனா பால்சாலை பல பிர தேசங்களில் இருந்ததாகவும் அவற்றுக்குத் தாங்கள் சென்று வழங்கி வந்ததாகவும் ஆனால் இப்போது அதுவும் இல்லை என்றும் அதனால் பால் அதிகளவு எடுக்கும் வாய்ப்பு இருந்தும் தாங்கள் எடுப்பதில்லை எனவும் கூறுகின்றனர்.

ஒரு நிறையுணவான பால் இவ்வாறு பயன்படாமல் போவது விரும்பத்தக்கது அல்ல.பாலை மூலப்பொருட்களாகக் கொண்டு பல முடிவுப்பொருட்களை கொள்ளலாம். உதாரணமாக ஜோகட் மற்றும் இனிப்பு வகை கள், ஏன் சிறிலங்காவின் வெளிசரலையில் பாலினை பயன்படுத்தி முகத்திற்குப் பயன் படுத்தப்படும் பௌடர் கூட பெற்றுக் கொள்ளும் புதிய முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

எனவே நாம் அவ்வாறான தொழில் நுட்பத்தை பெற்று இங்கும் பயன்படுத்தினால் எமது பொருளாதாரம் வளர்ச்சி அடைவதோடு மக்களின் வாழ்க்கைத் தரமும் உயரும்.

# பாதிக்கப்படும் கோழி வளர்ப்போர்

இன்று உள்ளூர் உற்பத்தியில் ஈடுபடுகின்ற உற்பத்தியாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இவர்களில் பலர் தொடர்ந்தும் அத் தொழிலில் ஈடுபடவிரும்பவில்லை. காலப்போக்கில் அவர்கள் வேறு தொழில்களை நாடவே விரும்புகின்றனர்.

இதற்கான காரணம் குறிப்பிட்ட சில தொழில்களில் அதிகளவான உற்பத்தியாளர்கள் ஈடுபடுவதால். குறிப்பிட்ட பொருளின் நிரம்பல் சந்தையில் அதிகளவாக இருக்க அதற்கான கேள்வி குறைவடைகின்றது. பொருளியல் கோட்பாட்டின் படி ஒரு பொருளின் நிரம்பல் அதிகரிக்க அப் பொருளின் கேள்வி குறைவடைந்து விலை வீழ்ச்சி அடையும். இந்நிலைமைதான் இன்று சில உள்ளூர் பொருட்களுக்கு ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான நிலைமைகளை தடுத்து உள்ளூர் உற்பத்திகளை பாதுகாக்க குறிப்பிட்ட பொருட்கள் சார்பாக கட்டுப்பாட்டு விலைகளை விதித்தல், உற்பத்தியாளர்களுக்கு மானியம் வழங்கல் போன்ற நடவடிக்கைகளோடு போதியளவு சந்தை வாய்ப்பும் ஏற்படுத்திக்கொடுக்கப்படவேண்டும். இதன் மூலம் உற்பத்தியாளர்கள் பாதுகாக்கப்பட்டு உள்ளூர் உற்பத்தி தொடர்ந்து மேற்கொள்ளப்படும். ஆனால் இங்கு கவனிக்கப்பவேண்டிய விடயம் என்னவெனில் உற்பத்திகளுக்கான மூலப்பொருள், கூலி மற்றும் ஏனைய செலவுகள் நாளாந்தம் அதிகரித்துச் செல்லவும் இப்பொருட்களைப் பயன்படுத்தி பெறப்படும் முடிவுப் பொருட்களின் விலை நாளுக்குநாள் குறைந்து கொண்டு செல்கிறது.

இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களின் வரிசையில் கோழி வளர்ப்பவர்களின் நிலைமையும் பரிதாபமாக உள்ளது.

1275 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட கோழித்தீனி இன்று 1390 ரூபாவுக்கு உயர்ந்துள்ளது. இதைவிட பராமரிப்புச் செலவு மருத்துவச்செலவு என கணிசமான செலவுகள் ஒருபுறம். இவை எல்லாவற்றையும் சேர்த்து நோக்கும்போது முட்டையிடும் கோழி ஒன்றுக்கு சராசரியான நாள் ஒன்றுக்கு 05 ரூபா செலவு ஏற்படுகிறது. ஆனால் முட்டை சந்தையில் 4.50 ஆகவும், 05ஆகவும் கொள்வனவாளர்களால் கேட்கப்படுகின்றது.
இந்நிலையில்தான் அவர்கள் கோழி வளர்ப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

முட்டையை தொடர்ந்து வைத்திருந்தால் பழுதடைந்துவிடும் என்ற காரணத்தால் நட்டமாக இருந்தாலும் பரவாயில்லை என்ற நோக்கில் விற்று வருகின்றனர் இவ்வாறான ஒரு நிலை அவர்களது அம் முயற்சி சார்பான ஆர்வத்தை துண்டித்துவிடுகிறது.

இந்நிலையில் எடுக்கப்போகும் நடவடிக்கை மக்களையும் பாதுகாத்ததாக அமைவதோடு உற்பத்தியாளர்களையும் பாதுகாத்ததாக இருக்க வேண்டும். கோழி வளர்ப்பில் ஈடுபட்டுள்ள உற்பத்தியாளர்களை போன்றே இன்று பல உற்பத்தியாளர்கள் பாதிக்கப்படுகின்றனர். இது ஒரு சமநிலையான சந்தையை ஏற்படுத்தாது. இதனால் சந்தையில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டிய தருணமாக இது காணப்படுகிறது.



— சுழியன்



# தென் தமிழீழத்தை விழுங்க முயலும் நிழல் யுத்தம்

**புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட காலத்திலிருந்தே வடக்கு-கிழக்கு பகுதிகளில் அமைதி நிலையை குழப்பும் நடவடிக்கைகள் அந்தந்தப் பிரதேசங்களின் களநிலைக்கேற்ப தூண்டிவிடப்பட்டுக் கொண்டிருந்தன. யுத்தம் நிறுத்தப்பட்ட காலத்தில் கட்டவிழ்த்துவிடப்பட்ட யுத்தமாக இது அமைந்தது.**

திருமலையை நோக்கி திரும்பியிருக்கிறது நிழல் யுத்தத்தின் நகர்வுமுனை. மட்டக்களப்பு- அம்பாறை மாவட்டங்களின் அமைதியை முற்றாகவே சீர்குலைத்து விட்டுள்ள இந்த நிழல் யுத்தம் இப்போது திருமலை மாவட்டத்துக்கு நகர்த்தப்பட்டுள்ளது. அல்லது விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட காலத்திலிருந்தே வடக்குகிழக்கு பகுதிகளில் அமைதி நிலையை குழப்பும் நடவடிக்கைகள் அந்தந்தப் பிரதேசங்களின் களநிலைக்கேற்ப துாண்டிவிடப்பட்டுக் கொண்டிருந்தன. யுத்தம் நிறுத்தப்பட்ட காலத்தில் கட்டவிழ்த்துவிடப்பட்ட யுத்தமாக இது அமைந்தது.

இந்த நிழல் யுத்தத்துக்கான மிக வாய்ப்பான சூழலாக மட்டக்களப்பில் 2004 மார்ச் மாதத்தில் ஏற்பட்ட குழப்ப நிலையை சிறிலங்கா படைத்தரப்பு மிக வாய்ப்பாகப் பயன்படுத்திவருகிறது. தான்செய்து வந்த அனைத்துப் 'பின்கதவு வேலை' களையும் சாட்டிவிடக் கூடியதாக ஒரு பெயர் அவர்களுக்குக் கிடைத்துவிட்டதில் சிறிலங்காப் படைத்தரப்பு, குறிப்பாக இராணுவப் புலனாய்வுத்துறை மிகுந்த மகிழ்ச்சியும் உற்சாகமும் அடைந்துள்ளது.

அந்தப்பெயரைப் பாவித்தபடி தனது காய்களை வேகமாக நகர்த்திவருகிறது. சிறிலங்கா இராணுவப் புலனாய்வுத்துறை மட்டக்களப்பு மாவட்டத்தில் மையம்கொண்டிருந்த இந்த நிழல் யுத்தம் பின்னர் அம்பாறைக்குப் பறந்து தற்போது திருமலைக்கு- குறிப்பாக ஈச்சிலம் பற்றுப் பகுதிக்கு நகர்ந்திருக்கிறது.

ஈச்சிலம் பற்றுப் பகுதி திருமலை மாவட்டத்தின் தென் எல்லையாக அமைந்துள்ளது. இது விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலிருக்கிறது. இதற்கு தெற்கே அமைந்துள்ள வாகரைப் பிரதேசமும் புலிகளின் கட்டுப்பாட்டிலிருக்கிறது. அது மட்டக்களப்பு மாவட்டத்துள் வரும் பகுதி. வாகரையைத் தொட்டுக் கொண்டிருக்கிறது. பொலநறுவை மாவட்டத்தின் வெலிக்கந்தைப் பிரதேசம் இது இராணுவக் கட்டுப்பாட்டிலிருப்பதுடன் வடமத்திய மாகாணத்துக்குள் அடங்குகிறது.

இப்போது உங்களுக்கு ஏதோ புரிவதுபோல இருக்கும். உண்மையில் நடப்பது அதுதான். வெலிக்கந்தையில் மையப்படுத்தப்பட்டுள்ள சிறிலங்காப்படைப புலனாய்வுத்துறையின் கொல்லும் ( )களின் செயற்பாடுகளுக்( )ற்படக்கூடிய அச்சுறுத்தல்களைக் குறைக்க படைத்தரப்பு முயற்சிக்கிறது.

அதேவேளை வாகரை மற்றும் ஈச்சிலம்பற்று, மூதூர் கிழக்குப் பகுதிகளில் புலிகளின் நிர்வாக நடவடிக்கைகளைச் சீர்குலைப்பது அதன் அடுத்த இலக்காகும். இவ்வாறான இலக்கு எட்டப்பட்டால் முழுத்தென் தமிழீழத்தையுமே (இலங்கைத் தீவின் கிழக்கு மாகாணத்தையே) நிச்சயமற்ற சூழலின் விளிம்பில் வைத்திருக்கமுடியும். அவ்வாறான ஒரு பதற்றமான சூழல் தமிழர் தரப்பை முழுமையான தற்காப்பு நிலைக்குள் தள்ளிவிடும். புலிகளில் வளங்களில் பெரும்பகுதி தற்காப்புக்காகத் திசை திருப்பப்பட்டால் அவர்களது செயற்பாடுகளை முடக்கலாம். நடமாட்டங்களை குறிப்பாக புலிகளின் முக்கிய உறுப்பினர்களின் நடமாட்டங்களை மட்டுப்படுத்தலாம். அதனூடாக மக்களுக்கும் புலிகளுக்குமான ஊடாட்டத்தைக் குறைத்து இடைவெளியை உருவாக்கலாம் எனப் படைத்தரப்பு எதிர்பார்க்கிறது.

தொடர் ஊடுருவல்கள் மூலமாகப் புலிகளை நெருக்கடிக்குள் தள்ளினால், தவிர்க்கமுடியாதபடி பாதுகாப்பு ஏற்பாடுகளை அவர்கள் அதிகரிக்க நிர்ப்பந்திக்கப்படுவர். இதுவும் மக்களுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தும். அதனால் புலிகளுக்கும் மக்களுக்குமிடையே இடைவெளியை ஏற்படுத்துமென கணக்குப்போடுகிறது படைத்தரப்பு.

எனவேதான் வெலிக்கந்தையை முகங்கொள்ளும் வாகரையின் முதுகுப்புறமாகக் களத்தைத் திறந்திருக்கிறது இராணுவப் புலனாய்வுத்துறை இதற்காக மஹிந்தபுர, அலி ஒலுவில, அல்லை ஆகிய இராணுவமுகாம்களில் தனது துணை இராணுவக் குழு உறுப்பினர்களைத் தங்கவைத்து விட்டு இலக்குத் தேடிக்கொண்டிருக்கிறது அது.

அலிஒலுவிலச் சந்தி, மூதூருக்கும் கந்தளாய்க்குமான வீதிகள் சந்திக்கின்ற கேந்திர முக்கியம் வாய்ந்த பகுதி. இது சிறிலங்கா இராணுவத்தின் கட்டுப்பாட்டிலிருக்கிறது. இதற்குத் தெற்கே உள்ள மஹிந்தபுர படைக் கட்டுப்பாட்டுப் பகுதியின் எல்லை அங்கு பலமான முகாமொன்று உள்ளது.

இதன் பாதுகாப்பு வேலிக்கு அருகாக நகர்ந்த சிங்களம் மட்டும் பேசியமூவர் அடங்கிய ஒன்பது பேர் கொண்ட குழுவே புலிகளின் பூநகர் சோதனைச் சாவடி மீது தாக்குதல் நடத்தியிருந்தனர்.

மஹிந்தபுரவிற்கு வடக்காக கந்தளாய் வீதியில் உள்ள அல்லை இராணுவ முகாமில் இலக்குத் தேடிக் காத்திருக்கின்றது துணை இராணுவக் குழு ஒன்று. அந்த இரட்டைக் கோபுர முகாமுக்கு அப்பால் அலி ஒலுவில வரையான பகுதி வயல் வெளியும், பற்றைகளும் நிறைந்த பதுங்கித் தாக்குதலுக்கு வாய்ப்பான இடமாகும்.

மூதூர் பிரதேசத்தின் அரசியற் பின்னணியில் மற்றொரு அம்சம் அங்கு செறிந்து வாழும் முஸ்லிம் மக்களாகும். மூதூர், கிண்ணியாவில் வாழும் முஸ்லிம் மக்களைச் சீண்டிவிட்டு தமிழர்கள் குறிப்பாக விடுதலைப் புலிகள் மீது அவர்களை திசை திருப்பிவிடும் சம்பவங்கள் எதிர்காலத்தில் எதிர் பார்க்கக் கூடியவையாகும். இதனை வாகரை கிருமிச்சை சந்திக்கண்மையில் ஓட்டமாவடியைச் சேர்ந்த முச்சக்கர வண்டிச் சாரதி கடத்தப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்துடன் இணைத்து நோக்குதல் வேண்டும். இதனை அடுத்து ஓட்டமாவடியில் மூன்று நாட்கள் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன. தமிழ் முஸ்லிம் உறவு மேம்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் காலங்களிலெல்லாம் இவ்வாறான கொலைகள் நடைபெற்றுக்கொண்டே இருக்கின்றன. இதனையே அந்தந்த இடங்களின் கள நிலவரத்திற்கேற்ப குழப்பங்களை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என முற்பகுதியில் குறிப்பிட்டிருந்தேன்.

எனவேதான் மூதூர் கிண்ணியாவில் அடுத்துவரும் நாட்களில் ஏதாவது கைங்கரியங்களை புரிந்துவிட்டு அதனைப் புலிகள் மீது சாட்டி முஸ்லிம் மக்களைத் தூண்டிவிடும் நடவடிக்கையில் படைப்புலனாய்வுத் துறையோ, துணை இராணுவக் குழுக்களோ இறங்கக் கூடும்.

தமிழ் முஸ்லிம் மக்கள் விழிப்பாக இருக்கவேண்டிய காலம் இது. இல்லையேல் விழித்திருக்க விழிதோண்டும் நடவடிக்கைக்காக வேகமாக இயங்கும் பட்டாளங்களின் கோரப் பிசிக்கு மேலும் சிலரோ பலரோ பலியாக நேரலாம்.

**பு.சத்தியமூர்த்தி**



## விசுக்விசுக் விசாலாச்சி

விடியக்காத்தால எழும்பி எப்பன் நிம்மதியா மூச்சு விடுவமெண்ண வெறுவாய்க்கில கெடுவார் வெடி வச்ச செய்திதானெல்லோ காதிலவிழுது. "தன்ர பிள்ளை செய்யிறதெல்லாங் குறும்பு- அடுத்தவளின்ர பிள்ளை செய்யிறதெல்லாம் அக் குறும்பு" எண்டவனாரோ சொன்னமாரி- எப்பிடி திருக்கணாமலைக் கடலுக்க வந்து படகுக்கு சுட்டதோட புலியள் ஒப்பந்தத்தை மீறிப் போட்டினமெண்டு போர் நிறுத்தக் கண்காணிப்புக் காறி திருவாய் மலர்ந்தருளியிருக்கிறா... அவவுக்கு ஒரு 'சவாஸ்' போடத்தான் வேணும். இல்லத் தெரியாமத்தான் கேக்கிறன் உந்தத் திருக்கணாமலைக்குமங்கால சர்வதேசக் கடல் பரப்புக்க விடுதலைப்புலியளயும் அவயட கப்பலுகளையும் எத்தினை... தரம் திரத்தித் திரத்தி முழுகடிச்சவை. ங... அந்த நேரமெல்லாம் உவை வெள்ளிபாத்தவையே. அதுதான் போகட்டும் மட்டக்களப்புக்கால வெளிக்கிட்டு இராணுவக் கட்டுப்பாட்டுக்க போய் ஒரு ஆயுதக்குழு முகாம் போட்டிருக்கு பச்சைப் பாலனொருதன் சென்றியில நிக்கிறான். இப்ப உந்த ஒலரா ஒட்டுண்ணியோ, சருகுண்ணியோ பேரும் வாயில வருதில்ல, எங்கபோனவர் எட விடுதலைப் புலியள்தான் பாலகரைப் படையில சேர்க்கினமாம். இஞ்ச சூப்பிப் போத்தலும் ஏணையுங்கட்டிவச்சிருக்கு கொணந்து போட்டாட்ட எனக்கு வந்துதெண்டா. அதுசரி கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்க எவரும் ஆயுதத்தோட திரியக்கூடாதெண்டு போட்டு உங்கட பாதுகாப்புக்க உங்கட அனுமதியோட வந்தவையமட்டும் சுட்டுக் கொல்லலாமோ அந்த நேரம் எங்க போனதுந்த வாய்.

உறுட்டி உறுட்டி அறிக்கை விடுறியள். குட்டக் குட்ட குனியிறவனும் மடையன். குனியக்குனியக் குட்டுறவனும் மடையன். நீங்களென்ன போர் நிறுத்தத்தை கண்காணிக்கவே வந்த நீங்கள். இதுகுமொரு புதுக்கதைதான். மட்டக்களப்பில கௌசலியனயும் மற்றாக்களையுஞ் சுடயுக்க உங்களக் கூட்டிக்கொண்டே வந்தவை. ஏற்கெனச் சொறிஞ்சு போட்டு. உங்களையுங் கூட்டிக்கொண்டு வந்திட்டினம். நீங்கள் ரெண்டு தரப்புக்கும் நடுவா நிக்க வேண்டிய ஆக்கள். அவன் சாணக்கியன் தருமசாத்திரத்தில போட்டமாரி- சூத்திரன் கொலை செய்தாக் கொலைக்கு கொலை தண்டனை. வைசியன் கொலை செய்தா பொருளப்பறிக்கலாம் சைத்திரியன் கொலை செய்தா அதை தண்டலையா மாத்தோணும். பிராமணன் கொலை செய்தா விசாரிக்கக் கூடாது.

பண்ணிப் பாருங்கோவன் சுத்தி சுத்தி முகாமுக்க குண்டெறிவாங்கள் பக்கத்து வேலிக்கதான் குடியிருப்பியள்-அது குருக்குசுவினாக் குத்தமில்லையெண்டு போட்டு போர்வைய இழுத்து மூடிப் படுத் திருவியள். அல்லது எங்கயோ பொம்பிளப் பிள்ளையளத் தூ.... சொல்லவும் வெக்கமாக் கிடக்கு. ஆயுதத்தோட அதுகள் நிக்கயுக்க நிண்டடத்தையும் நனைச்சுப் போட்டு ஓடினவை. அதுகளை ஒட்டி நிண்டு அடிச்சு வீரங்காட்டினவையப் புடுங்கி அடுக்கிப்போட்டியளே... இல்லை இப்ப முந்தாநாள் போல அடி வளவுக்க குவேனியையும் சசியையும் ஆயுதமில்லாம வரக்க, வேணுமெண்டே துண்டில பதிஞ்சு விட்டு, பிறகாலயே ஆளனுப்பிச் சுட்ட நேரம் என்ன நித்திரையாவே கிடந்த நீங்கள்.

என்னத்தச் சொல்லடா நான் உவளவில, நாக்கப் புடுங்கிறமாதிரித்தான் நாலு கேள்வி கேட்டாலும் ஏதும் ரோசம் வருமெண்டு பாக்கிறியே... எல்லாங் காரியச் செகிடுகளடா. நீ என்னதான் கத்து ஆர்ப்பாட்டம் பேரணி அது இதெண்டு அசையோணுமே. என்ர இதுக்குச் சொல்லெண்டு போவினை. அவை ஆர்...எங்கயோ ஒரு பக்கத்தால ஏலாத நாடுகளைப் பிடியுக்க வச்சுக் கொண்டு காலத்தை ஓட்டுறவை தானே. முதல் கப்பல்ல ஆயுதமனுப்புவினம். அடுத்தகப்பல்ல நிவாரணம் கொண்டு வருவினம். பிள்ளையையும் கிள்ளிவிட்டுத் தொட்டிலையும் ஆட்டுறது உவைக்கு கை வந்த கலை. பின்ன-நாடிடத்தை சண்டைய மூட்டி விட்டாத்தானே அவயட பிழைப்பு நடக்க. நீங்களுமிருக்கிறியளே வேள்விக்கு வளக்கிறகிடாய் கணக்கில. நிவாரணம் மறுவாழ்வு நீர்ப்பாசனம், அபிவிருத்திரோட்டு குளக்கட்டு எண்டு அவையளின் கலர் வலுப்புகள்ள கிறங்கிப் போயிற்றியள். எடேய் ஆரியக் கூத்தாடினாலுங் காரியத்தில கண்ணாயிருக்கோணும் பின்ன நாளைக்கு வேலிக்கால பாத்துக் கதைக்கிறவையோ சிரிக்கிறவையோ நமக்கு தவாயினம். எப்பவும் அரிவாளு மாடக்குடுவையுமாடும். அரிவாளுந்நிக்கக் குடுவையும் நிக்கும். கையடிச்சாத்தான் நமக்கு மரியாதை. வரட்டே மழைவரப் போகுது.

ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி. 15 . 04 . 2005
மின் அஞ்சல : weekly @ eezhanatham.com

# நியாயமான குரல்...!

"இலங்கையில் சிறுவர்களை படையணிகளில் சேர்த்துக் கொள்ளப்படுவதாகத்தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டானது முற்றிலும் அரசியல் நலன் சார்ந்ததாகவே உள்ளது" என அமெரிக்க மனித உரிமைகள் சட்டத்தரணியும் சர்வதேச கல்வி அபிவிருத்தி மற்றும் மனித உரிமைகள் திட்டத்தின் சிரேஷ்ர ஆணையாளருமான கரீன் பாக்கர் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் போராட்டத்தை கொச்சைப் படுத்தும் புலிகள் இயக்கத்திற்கு எதிராக சர்வதேச ரீதியில் அபகீர்த்தியை ஏற்படுத்துவதையும் நோக்காகக்கொண்டு சிறுவர் தொடர்பாக சர்வதேச மட்டத்திலிருக்கும் அக்கறைதொடர்பான பார்வையை தனது அரசியல் நலனுக்காக பயன்படுத்திவந்த சிறிலங்கா அரசுக்கு கரீன் பாக்கரின் கூற்றானது சாட்டையடியாக விழுந்துள்ளதுடன், யதார்த்த நிலையை சரியானவகையில் மதிப்பீடு செய்யப்பட்டதன்வகையில் தெரிவிக்கப்பட்ட கூற்றாகவும் உள்ளது.

இலங்கையில் சிறுவர்நலன் தொடர்பாக அறிக்கையிடும் நிறுவனங்கள்கூட நடுநிலை சார்ந்து உறுதிப்படுத்தும்வகையிலா முயற்சிகளைக்கூட மேற்கொள்ளாது புலிகள் இயக்கம் சிறுவர்களை படைகளில் சேர்க்கிறார்கள் என அறிக்கையிட்டுவந்தன.

மிக அண்மையில்கூட இந்த பிரச்சினை ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபைவரை இந்த விவகாரம் ஒலரா ஒட்டுனு அவர்களால் கொண்டுசெல்லப்பட்டிருந்தது.

ஆனால், இந்தக் குற்றச்சாட்டுத்தொடர்பாக கலந்துரையாடவும் அதுதொடர்பாக நல்ல முயற்சிகளை மேற்கொள்ளவும் புலிகள் இயக்கம் எப்பொழுதும் தயாராக இருந்தபொழுதிலும் அவை புலிகளோடு பேசாது பலமுறை ஒரு நிலை சார்ந்த குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.

இந்த நிலையில் இந்தப் பிரச்சினை தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கொபிஅனானுக்கும், ஒலரா ஒட்டுனுவுக்கும் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் அவர்கள் அனுப்பிவைத்த கடிதம் ஒன்றில் "...ஒருவிடுதலை இயக்கம் என்றமுறையில் போரினால் பாதிக்கப்பட்ட எமது எதிர்கால தலைமுறையினர் நல்வாழ்க்கை பெறுவதற்கு உதவக்கூடிய கண்காணிப்பு; அறிக்கையிடுதல்; அமைவாக நடத்தல் என்பவற்றில் நாம் மிகுந்த ஆர்வம்கொண்டுள்ளோம். அதேவேளை இந்த பிள்ளைகள் குறித்த தகவல்கள் குறியிலக்குக்கொண்டவையாக இருப்பதோடு, அரசியல் உள்நோக்கங்களை எட்ட அவை பயன்படுத்தகூடாது என்பதிலும் முனைப்பாக இருக்கிறோம" என சுட்டிக்காட்டியிருந்தார்.

அரசியல்துறைப்பொறுப்பாளர் இவ்வாறு சுட்டிக்காட்டியிருந்தமையானது சிறிலங்கா அரசினால் உண்மைக்கு புறம்பானவகையில் அரசியல் இலக்கை மட்டும் நோக்காகக்கொண்டே புலிகள் இயக்கத்திற்கு எதிரான மிக பெரிய பிரசாரம் மேற்கொள்ளப்பட்டது.

ஆனால் சிறுவர் தொடர்பாக உண்மையான அக்கறையும் ஆர்வமும் கொண்டவர்களானால் அரசு என்றவகையில் மேற்கொள்ள வேண்டிய சிறுவர் நல்வாழ்வுத் தொடர்பான வேலைத்திட்டங்களை எதனையும் முன்னெடுக்கவில்லை.

அத்தோடு, யுத்தகாலத்தில் சிறிலங்கா அரச படைகளால் பாடசாலைகள், சிறுவர் காப்பகங்கள் என்பன இலக்குவைத்து தாக்கப்பட்டன.

அத்தோடு அரச படைகள் சிறுவர்களின் பாதுகாப்பு, சிறுவர்களுக்குரிய உரிமைகள் என்பவற்றிற்கு முரணானவகையில் செயற்பாடுகளை மேற்கொள்ளும்போது மௌனமாக அங்கீகரித்து வந்தது.

இதனை உறுதிப்படுத்தும்வகையில் கரீன் பாக்கர் ஐக்கிய நாடுகள் சபையின் அறுபத்தாறாவது செயலமர்வில் கருத்து தெரிவித்துள்ளார்.

அரசின் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் நலன் குறித்த அக்கறையற்ற நிலை, சிறிலங்காப் படையினரின் தாக்குதல்களால் அவர்களது வீடுகளிலும், பாடசாலைகளிலும், விளையாட்டு மைதானங்களிலும் தாக்குதல்களுக்கு உள்ளாகியுள்ளதுடன் இத் தாக்குதல்களின்போது இந்த பிள்ளைகள் தமது பெற்றோர்களையும் இழந்துள்ளனர் என்பதையும் சுட்டிக் காட்டியுள்ளார்.

அத்தோடு படைக்கு சிறுவர்களை புலிகள் சேர்க்கிறார்கள் என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்ற அதேவேளை, அரச படையில் சேர்த்துக்கொள்வது தொடர்பாக எந்தவித கருத்துக்களும் எந்த அமைப்புக்களாலும் சுட்டிக்காட்டியிருக்கவில்லை என்பதையும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் சிறுவர்தொடர்பான இந்த பிரச்சினையை நியாயமானமுறையில் கரீன் பாக்கர் குறிப்பிட்டுள்ளதை சிறுவர் நலன் தொடர்பாக அக்கறைகொள்ளும் அமைப்புகளும் நாடுகளும் நிச்சயம் கவனத்தில்கொள்ளப்படவேண்டும்.

ஏனெனில் ஒருபக்க குற்றச்சாட்டுகளை சுமத்திக்கொண்டு அரசு சிறுவர் நலன்களை மீறிவந்ததுடன், மேற்கொள்ளப்படவேண்டிய பொறுப்புக்களையும் தட்டிக்கழித்துவந்தது.

அத்தோடு அரசு தான் தமிழ் பிள்ளைகளுக்கு ஏற்படுத்திய அவலத்தை தனக்கு சார்பான அரசியலாக்கி இலாபமீட்டமுனைந்த செயற்பாடானது இனியாவது உலகின் கண்களுக்கு நியாயபூர்வமான அணுகுமுறைக்கும் மாற்றத்துக்கும் உள்ளாகவேண்டும்.

அதுவே தமிழ்ப்பிள்ளைகளுக்கு நியாயமான வாழ்வை பெற்றுக்கொடுக்கும்.

# சூடுபிடிக்கும் விஜயங்கள்




அரசுக்கும் புலிகளுக்குமிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதன் பின்னர் இலங்கைக்கு சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகளின் விஜயங்கள் அதிகரித்தது.

அமெரிக்கா உட்பட இந்தியா வரையான இந்தப் பிரதிநிதிகளின் பட்டியல் நீண்டது.

ஆனால் விஜயம்செய்த எல்லா அரச பிரதிநிதிகளின் விஜயமும் ஏதாவதொருவகையில் சமாதான முயற்சியை பாதுகாக்கவேண்டும் என்ற அடிப்படையிலும் சமாதானம் தொடர்பான நம்பிக்கையை மேலும் வலுப்படுத்தும் வகையிலானதாகவுமே இருந்தது.

இந்தவகையில் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதன் பின்னர் இலங்கைக்கு அமெரிக்காவின் உயர் தலைவர்கள் பலர் பலமுறை விஜயம் மேற்கொண்டிருந்தனர்.

ஆனால் சிறிலங்கா அரசின் அசமந்த போக்கினால் சமாதான முயற்சி மெல்ல மெல்ல றபர்போல இழுபட இழுபட சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகளினது விஜயங்கள் வெறும் சம்பிரதாயபூர்வமான விஜயங்களாக நோக்கப்படும் ஒரு சூழ்நிலையே காணப்பட்டது.

இதற்கு ஒரு காரணம் சிறிலங்கா அரசு சர்வதேச நாடுகளின் சமாதான முயற்சி தொடர்பான ஆர்வத்தை உள்வாங்கிக்கொள்ளவில்லை.

அத்தோடு ஒருவரைக்கு அப்பால் இந்த நாடுகளும் அழுத்தங்களை போடவில்லை. இதுவும் அரசுக்கு சார்பான ஒரு நிலையாகவே காணப்பட்டது.

இந்த நிலையில் சுனாமிக்குப் பின்னரான சூழ்நிலையை பயன்படுத்த சர்வதேச நாடுகளின் உயர்தலைவர்களின் விஜயங்கள் இலங்கையின் பக்கம் திரும்பியுள்ளது.

இந்தவகையில் வரும்வாரங்களில் இலங்கைக்கு நோர்வே சமாதான ஏற்பாட்டாளர்களின் விஜயம் அமையவுள்ள சூழ்நிலையில் அமெரிக்காவின் தெற்காசிய விவகாரங்களுக்கு பொறுப்பான அமெரிக்காவின் பிரதிநிதி கிறிஸ்டினா றொக்காவின் விஜயமும் இடம்பெறவுள்ளது.

கிறிஸ்டினா றொக்கா ஏற்கனவே சமாதான முயற்சியை ஊக்குவிக்கும்வகையில் இலங்கைக்கு விஜயங்களை மேற்கொண்டுள்ளார்.

ஆனால் இப்போது அவரது விஜயமானது நோர்வே சமாதான முயற்சியாளர்களின் விஜயம் இடம்பெறவுள்ள சூழ்நிலையில் இடம்பெறுவதால் இது சமாதான முயற்சியோடு தொடர்புபட்டதாக கூறப்படுகிறது.

கிறிஸ்டினா றொக்காவின் விஜயத்தை சமாதான முயற்சியோடு தொடர்புபடுத்தி கூறப்படுகின்ற அதேவேளை கிறிஸ்டினா றொக்காவின் விஜயமானது சிலகேள்விகளையும் எழுப்பவே செய்கிறது.

அதாவது சமாதானமுயற்சியில் இந்தியா நேரடியாக பங்குகொள்ளவேண்டும் என்றகோரிக்கையானது, தென்னிலங்கையில் உயர்ந்துள்ளது.

இந்தநிலையில் கடந்தவாரம் இலங்கைக்கு சீனப்பிரதமரும் விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தமையை கவனத்தில்கொள்ள வேண்டும்.

சீனப்பிரதமரின் விஜயமானது சமாதான முயற்சிகளோடு தொடர்புபட்டதாக இல்லாமல் சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதியினை பார்வையிடுவதாக இருந்தபோதிலும் அவரது விஜயம் பிராந்திய ரீதியிலான போட்டியின் ஒரு நகர்வாகவும் நோக்கப்படுகிறது.

இந்த நிலையில் இலங்கையின் சமாதான முயற்சியில் இந்தியா நேரடியாக பங்குகொள்ளவேண்டும் என்ற கோரிக்கைகளும் சீனாவின் இலங்கை மீதான பார்வையும் அமெரிக்காவை விழிக்கச்செய்துள்ளதன் ஒரு பகுதியாகவே கிறிஸ்டினா றொக்காவின் விஜயத்தைப் பார்க்க வேண்டியுள்ளது.

இந்தியாவுக்கு இருக்கின்ற இந்து சமுத்திர பிராந்தியத்தின் மீதான பிடியையும் சீனாவுக்கு இருக்கின்ற இந்த பிராந்தியத்தின் முக்கியத்துவத்தையும் ஒருவகையில் மீறித்தான்

**சிறி .இந்திரகுமார்**

அமெரிக்காவின் பார்வையும் அதன் பங்கும் இந்த பிராந்தியத்தில் இருக்கின்றது.

இந்தச்சூழ்நிலையில் இந்த இரண்டு நாடுகளின் எந்த ஒரு நாட்டினதுமோ அல்லது சீனா அல்லது இந்தியா என்று எந்த ஒரு நாட்டினதும் செல்வாக்கு அதிகரிப்பதை இன்றைய ஒழுங்கமைவில் அமெரிக்கா ஒருபோதும் விரும்பாது.

இது அமரிக்காவின் இந்த பிராந்தியத்தின் மீதான தனது நிகழ்ச்சி நிரலில் பெரும் தடையாகவே பார்க்கும்

அந்தவகையில் அமெரிக்கா இலங்கை தொடர்பாக இந்தியாவையும் சீனாவையும் தொடர்புபடுத்தி பார்ப்பதன் ஒரு அங்கமாகவே இப்போது கிறிஸ்டினா றொக்காவின் விஜயத்தைப் பார்க்கலாம்.




*கிழக்கில் பொலிசாருடன் இணைந்து அதிரடிப்படை இராணுவம் பாதுகாப்பு-*
"ஆருக்குந்தப்பாதுகாப்பு உங்களுக்குத்தானே"

*வட பிராந்திய போக்குவரத்து சபையை அபிவிருத்தி செய்ய ஜே.வி.பி எதிர்ப்பு-*
"ஆருக்கு அபிவிருத்தி செய்யிறியள்"

*படையினர் மீண்டும் யாழ்மண்[illegible]ல் மிதிவெடி புதைக்கின்றனர்-*
"அவை போட்டுட்டுப் போறதைவிட புதைச்சிட்டுப் போறது கூட"

*பாடசாலை அனுமதியில் ஊழல் அதிபர்கள் லஞ்சம் பெற்றுள்ளனர். கொழும்புச் செய்தி-*
"அரிவரியிலயே வாங்கிறது அட்வான்ஸ்தானே"

*தனிப்பட்ட பயணமொன்றை மேற்கொண்டு சனாதிபதி பிரிட்டன் செல்கிறார்-*
"சண்டைகிண்டை வரப்போகுதோ"

*மரணதண்டனைக் கைதிகள் சிறையிலிருந்து தப்ப முயற்சி முறியடிப்பு-*
"வெளியாலயிருந்தவங்கட மரணதண்டனை ரத்து"

# தேர்தல் ஆணையாளரின் பிரலாபம்

சிறிலங்கா இப்பொழுது அடிக்கடி தேர்தலைச் சந்திக்கும் / சந்திக்க வேண்டிய நாடாகியுள்ளது. அதாவது சிறிலங்காவில் சனாதிபதித் தேர்தல் மூலம் தெரிவாகிறார். அத்துடன் நாடாளுமன்றம், மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்கள் என்பனவும் தேர்தல்கள் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. ஆனால் இது மட்டும் தான் அது அடிக்கடி தேர்தலைச்சந்திக்கக் காரணமன்று. இப்பொழுது மக்களால் தெரிவு செய்யப்படும் நாடாளுமன்றத்தின் நிலையும் அடிக்கடி தேர்தலைச் சந்திக்கவேண்டிய கட்டாயத்தை தான் ஏற்படுத்தியுள்ளது.

2000ஆம், 2001 ஆம், 2004 ஆம் ஆண்டுகளில் அடுத்தடுத்து நாடாளுமன்றத்துக் கான தேர்தல்கள் நடைபெற்றன. 2001,2004 ஆம் ஆண்டுகளில் நடைபெற்றவை நாடாளுமன்றங்கள் தமது ஆயுட்காலத்தைப் பூர்த்தி செய்ய முன்னமும் கலைக்கப்பட்ட மையால் நடைபெற்ற தேர்தல்களாகும்.

இதற்கிடையில் ஆட்சியாளர்கள் தமது பலத்தை பரிசீலிக்க மாகாணசபை உள்ளூராட்சிச்சபைத் தேர்தல்களை நடத்தி வருகின்றனர்.

இப்பொழுது சர்வசன வாக்கெடுப்பு ஒன்றை நடத்துவது தொடர்பாகவும் சனாதிபதியால் பேசப்பட்டுவருகின்றது.

ஆனால் சிறிலங்காவின் தேர்தல் ஆணையாளர் மிகவும் பரிதாபத்துக்குரிய முறையில் சுமார் மூன்றுவருடங்களுக்கு மேலாக ஒரு தேர்தல் ஆணைக்குழுவை நியமித்து தன்னை விடுவிக்குமாறு கேட்டுவருகிறார்.

அதாவது 2001 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட 17 ஆவது அரசியல் யாப்புத் திருத்தத்திற்கு அமைவாக ஒரு சுயாதீன தேர்தல் ஆணைக்குழுவை அமைக்குமாறு அவர் கோரிவருகின்றார்.

ஆனால் இச்சட்டமூலம் கொண்டு வரப்பட்டு 4 வருடங்களுக்கு மேலாகியும் அவ்வாறானதொரு ஆணைக்குழு நியமிக்கப் படவில்லை. தேர்தலை முறைகேடற்ற வகையில் நடத்துவதற்காக இவ்வாறான ஒரு ஆணைக்குழு அவசியம் என்பது 1994 இதற்கு முன் சனாதிபதி சந்திரிகாவின் கருத்தாக இருந்தது. அப்போது அவர் உயர் பதவியில் இருக்கவில்லை. அப்போது அவருக்கு ஐந்து சுயாதீன ஆணைக்குழுக்கள் தேவைப்பட்டன.

ஆனால் 2001 ஆம் ஆண்டு ஜே.வி.பியின் வற்புறுத்தலுக்காக அனைத்துக் கட்சிகளினதும் ஆதரவுடன் நான்கு சுயாதீன ஆணைக்குழுக்கள் அமைப்பதற்கான சட்டதிருத்தம் கொண்டுவரப்பட்டது. அவற்றிலே



முக்கியமான ஆணைக்குழுவான சுயாதீன தேர்தல் ஆணைக்குழு அமைக்கப்படாமை குறித்தே தேர்தல் ஆணையாளர் மிகவும் கவலை கொண்டுள்ளார்.

17 ஆவது திருத்தச்சட்டத்தில் சுயாதீன தேர்தல் ஆணைக்குழு குறித்த துரத்தில் அவ்வாறானதொரு ஆணைக்குழு அமைக்கப்படும் வரை தேர்தல் ஆணையாளரே தேர்தல்களை நடத்துவார் எனக் கூறப்பட்டுள்ளது. இந்நிலையில் தேர்தல் ஆணையாளரோ சுயாதீன தேர்தல் ஆணைக் குழு வொன்றை விரைவில் அமைத்து இந்தப் பொறுப்பிலிருந்து தன்னை விடுவிக்குமாறு கோரிவருகிறார்.

ஒரு முறை "நானோ இருதய நோயாளி எனக்கு ஏதாவது நடந்தால் தேர்தல்களை யார் நடத்துவது? என்பதற்கு அரசியலமைப்பில் சரியான விளக்கமில்லை" என்று கூடக் கூறியிருக்கின்றார்.

அரசியலமைப்பின் 17 ஆவது திருத்தத்தில் சுயாதீன தேர்தல் ஆணைக் குழுவை நியமிப்பதற்கான காலப்பகுதி குறிப்பிடப்படவில்லை. "இதனை யாரோ சாதகமாகப் பயன் படுத்திக்கொண்டிருக்கிறார்" என்று தேர்தல் ஆணையாளர் தயானந்த திசாநாயக்கா மிக அண்மையில் கூறியி ருக்கிறார்.

இந்த ஆணைக்குழு அமைக்கப்படு வதற்கு தடங்கலாக இருப்பது யார்? இந்தக்குழுவிற்கு ஐந்து உறுப்பினர்கள் நியமிக்கப்பட வேண்டும். ஐவரின் பெயர்கள் சனாதிபதிக்கும் அரசியல் யாப்பு சபைக்கும் முன்வைக்கப்பட்ட போதும் அவர்கள் சனாதிபதியால் நியமிக்கப்படவில்லை என்பதே தற்போதைய நிலையாகும்.

எனவே அரசியலமைப்பிலுள்ள ஓட்டையைப் பயன்படுத்துவது யார்? என்பது புலப்படுகின்றது.

உண்மையில் 1994இல் இருந்து 1999 ஆம் ஆண்டுக்கு இடையில் 6 தேர்தல்களையும் நடத்தி அவை ஆறிலும் வெற்றி கொண்டபின்னர் இவ்வாறானதொரு சுயாதீன ஆணைக்குழுவை அமைப்பது குறித்து சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விருப்பங் கொண்டிருக்கவில்லை. ஆனால் 2000 ஆம் ஆண்டில் தெரிவு செய்யப்பட்ட பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம் கவிழப்போவதை தடுப்பதற்காக ஜே.வி.பி யுடன் நன்னடத்தை அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கான இணக்கப்பாட்டு விதிகளுக்கு அமைவே இத்திருத்தச்சட்டமூலம் கொண்டுவரப்பட்டது. எனவே ஆணைக்குழுவை அமைத்து சட்டமூலத்தை நடைமுறைப்படுத்துவதற்கான தேவை இப்பொழுது சனாதிபதி சந்திரிகாவுக்கு எழவில்லை.

அதேவேளை இந்தச் சட்டமூலத் தைக் கொண்டுவர வலியுறுத்திய ஜே.வி.பி இன்று ஆளும் வர்க்கமாக மாறியுள்ளது. அடுத்த தேர்தலை அதிகாரத்துடன் சந்திக்கலாம் என அது நினைக்கிறது. எனவே அதற்கும் சுயாதீன தேர்தல் ஆணைக்குழு அவசியமில்லை போலவே தெரிகிறது. ஏனெனில் அதற்கு அவசியமிருப்பின் எடுத்ததற்கெல்லாம் போர்க் கொடி தூக்கும் ஜே.வி.பி இதற்கும் கூச்சலிட்டிருக்கும்.

எதிர்க்கட்சிகள் இதனை வலியுறுத்த மாட்டா ஏனெனில் வலியுறுத்துவதில் பயனில்லை என்பது வெளிப்படையான விடயமாகும். ஏனெனில் வற்புறுத்தினால் நடவடிக்கை எடுப்பது போல சனாதிபதி சந்திரிகா பாவனை காட்டக் கூடும். ஆனால் எதனையும் செய்யமாட்டார்.

எனவே இதிலே அக்கறையுள்ள ஒரேதரப்பாக தேர்தல் ஆணையாளர் மட்டுமே உள்ளார். அவரும் இந்தப் பதவியிலிருந்து பட்டவேதனை போதும் என்ற நிலைக்கு வந்துவிட்டதனாலேயே அவர் தொடர்ந்தும் சுயாதீன ஆணைக்குழுவை அமைக்க வலியுறுத்தி வருகிறார்.

இங்கு இன்னொருவிடயமும் உள்ளது. அதாவது சுயாதீனத் தேர்தல் ஆணைக்குழு ஒன்று அமைக்கப்படும் வரை அதற்கு சட்டம் மூலம் அளிக்கப்பட்ட அதிகாரங்கள் தேர்தல் ஆணையாளருக்கு உள்ளதாக அரசியலமைப்புத்திருத்தம் கூறுகிறது. ஆனால் தேர்தல் ஆணையாளர் அவற்றைப் பயன்படுத்துவதாகத் தெரிய வில்லை. அதற்கு யார் முட்டுக் கட்டை? அவ்வாறு முட்டுக்கட்டை போடப்பட முடியுமா னால் சுயாதீனத் தேர்தல் ஆணைக் குழுவும் பயனற்றதொன்றாகவே இருக்க முடியும்.

**வேலவன்**

---

## நேர்நோக்கு

# அரசின் இழுத்தடிப்பு



சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான அடிப்படை மனிதாபிமான உதவிகளைச் செய்வதற்கான பொதுக் கட்டமைப்பை ஏற்படுத்துவது என்பது சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் மனிதாபிமான பிரச்சினையைத் தீர்ப்பதுடன் இனப்பிரச்சினை தீர்வுக்கு ஒரு வழிகோலாக அமையும் என்பது பலரின் கருத்து.

அதாவது இது தொடர்பாக கொழும்பில் இருக்கின்ற ஒரு மூத்த அரசியல் ஆய்வாளர் கருத்துக் கூறுகையில், பொதுக் கட்டமைப்பு உருவாக்கம் என்பது இனப்பிரச்சினை தீர்வுக்கான அடிக்கல் வைப்பது போன்று அமையும் என்கிறார். முதலில் பொதுக் கட்டமைப்பை ஏற்படுத்தி சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான தேவைகளை நிறைவு செய்ய வழி வகுக்க வேண்டும். ஆனால் சுனாமி அனர்த்தம் ஏற்பட்டு மூன்று மாதங்களை கடந்தும் இன்னமும் அரசு ஒரு இணக்கப் பாட்டிற்கு வருவதாகத் தெரிய வில்லை.

தென்னிலங்கையை கட்டி யெழுப்புவதில் சிறிலங்கா அரசு காட்டுகின்ற அக்கறை பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு பிரதேசங்களில் காட்டுவதாகத் தெரியவில்லை. இந் நிலையில் சிறிலங்கா அரசானது சகல விடயங்களிலும் தமிழர் தரப்பை புறக்கணித்தே வருகின்றது.

குறிப்பாக பொதுக் கட்டமைப்பை உருவாக்குவதி லும் அரசு அசட்டையீனத்தையே காட்டி வருகிறது. தற்போது தமிழீழ அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தலைமையிலான அரசியல் பயணம் மேற்கொண்ட குழுவினர் நாடு திரும்பியவுடன் பொதுக் கட்டமைப்பு சம்பந்தமாகப் பேசப்படும் என அரசு அறிவித்திருப்பதாவது பொதுக் கட்டமைப்பு உருவாக்கம் தொடர்பாக பலத்த சந்தேகத்தையே ஏற்படுத்தியுள்ளது.

பல தடவைகள் பொதுக்கட்ட மைப்பு உருவாக்கம் தொடர்பாக இரு தரப்பினரும் கருத்துக்களை பரிமாறிக் கொண்ட பின்னரும் இனியும் இது தொடர் பாகப் பேசப்படும் என்பது அரசின் உண்மை நிலைமை எது வென்பதை தெளிவாகச் சுட்டிநிற்கிறது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்வதற்கான ஒரு மனிதாபிமான அமைப்பாக விளங்கப் போகின்ற பொதுக் கட்டமைப்பு விடயத்தில் அரசு இந்தளவுக்கு இழுத்தடிப்புச் செய்து வருகின்றது என்றால் இனப்பிரச்சினை விடயத்தில் எவ்வாறு நடந்து கொள்ளப்போகின்றது என்பதை இப்போதே ஊகித்துக்கொள்ளலாம்.

அரசின் இவ்வாறான செயல்கள் ஒருபுறமிருக்க இனவாதத்தை வைத்தே அரசியல் நடத்துகின்ற தென்னிலங்கை இனவாதிகளுக்கு பொதுக் கட்டமைப்பு விடயமும் தங்களது பிரசாரங்களுக்கு வெறும் வாய்க்கு அவல் கிடைத்தது போன்று அமைந்துவிட்டது.

ஜே.வி.பி என்றும் ஜாதிக ஹெல உறுமய என்றும் சிஹல உறுமய என்றும் தேசப்பற்றாளர் இயக்கம் என்றும் பல பெயர்களில் இனவாதம் பேசுகின்ற இவர்கள் பொதுக்கட்டமைப்பு விடயத் தையும் ஒரு மனிதாபிமான உதவிகள் மேற் கொள்ளப் போகின்ற அமைப்பாக அன்றி இனவாத நோக்கிலேயே பார்க்கின்றனர். இவர்களுக்கு பத்திரிகையாளர் மாநாடு வைப்பதற்கும், மேடைகளில் பேசுவதற்கும் இதை விடுத்தால் தற்போது வேறு ஒன்றும் இல்லை. இதனால் தான் இதனை பயன்படுத்தியே இனவாதப் பிரசாரம் செய்ய ஆரம்பித்துவிட்டார்கள்.

அதாவது பொதுக் கட்டமைப்பை ஏற்படுத்தினால் அது விடுதலைப் புலிகளின் தனிநாடு தொடர்பான கோரிக்கைக்கு வழி சமைத்ததாக அமைந்துவிடும் என்றும் புலிகளுக்கு சர்வதேச அங்கீகாரம் கிடைத் ததாக மாறிவிடும் என்றும் பேசத் தொடங்கி விட்டார்கள். இப்போது இவ்வாறு பேசுகின்ற வர்கள் நாளை வேறு ஒரு நிலை யில் பேசுவார்கள் இவர்கள் என்றுமே ஒரு நிலையான வழியில் செல்பவர்கள் அல்ல.

தங்கள் அரசியல் எதிர்காலத் திற்காக அவ்வப்போது மாறிக் கொள்கிற வர்களே.

எனவே இவர்களது கருத்துக் களுக்கு எல்லாம் அரசு முக்கியம் கொடுக்கு மானால் இந்நாட்டில் ஒரு நிரந்தரத் தீர்வினை எப்போதும் சிறிலங்கா அரசு முன்னெடுத்துச் செல்லமுடியாது.

சர்வதேச சமூகமும் இவர்களை இன்று கண்டுகொள்வதாகத் தெரிய வில்லை. எனவே சிறிலங்கா அரசு இனப்பிரச்சினைகளைத் தீர்க்கும் நல்லெண்ண நோக்குடன் முதலில் பொதுக் கட்ட மைப்பை ஏற்படுத்தி பின்னர் விடுதலைப் புலிகளால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இடைக் கால தன்னாட்சி அதிகாரவரைவுக்கு அமைவாக பேச்சுவார்த்தையை ஆரம் பித்து படிப்படியாக நகர்ந்து செல்வதே இந நாட்டிற்கு ஆரோக்கியமானதாக இருக்கும்.

மாறாக அரசும் இது தொடர்பாக ஏனோதானோவென இருக்குமாயின் மீண்டும் இத்தீவில் யுத்தத்தை எவராலும் தடுக்க முடியாது போய்விடும்.

**தமிழ்ச்செல்வன்**



# மக்களின் கோஷங்கள் எழுச்சிப் பேரணிகளாக...

சுபாஸ்கரன்

வவுனியா, கிளிநொச்சி, யாழ்.தென்மராட்சியிலும் மீண்டுமோர் மக்கள் எழுச்சி. சந்திரிகா அரசாங்கம் பதவிக்கு வந்தபின் இடைநிறுத்தப்பட்ட பேச்சுவார்த்தையை உடன் ஆரம்பிக்குமாறு அரசாங்கத்தை வலியுறுத்தியும் சுனாமி நிதி தொடர்பான பொதுக்கட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்துமாறு கோரியும் தமிழர்களின் பூர்வீக நிலங்களில் இருந்து இராணுவம் தொடர்ந்தும் வெளியேறாது இருப்பதனைக் கண்டித்து அவர்களை வெளியேறுமாறு கோரியும், சமாதான காலத்தில் சிறிலங்கா அரச படைகளும் அவற்றின் கைக்கூலிகளும் போராளிகள், பொதுமக்கள் மீது மேற்கொண்டுவரும் படுகொலையை நிறுத்துமாறு கோரியும் மேற்கூறப்பட்ட இடங்களில் மாபெரும் எழுச்சிப்பேரணி நடைபெற்றுள்ளது. சமாதானம் என்பது எட்டாக்கனியாகிவரும் இவ்வேளையில் காலத்தின் தேவை உணர்ந்து தமிழ் மக்களால் மேற்கொள்ளப்பட்ட ஒரு பேரணி இதுவாகும.

அந்த வகையில் கடந்த திங்கட்கிழமை வவுனியாவில் நடந்த பேரணியின் நிகழ்வுகளை இங்கு கவனிப்போம். மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத்தின் தலைமையில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், செல்வம் அடைக்கலநாதன், சிவநாதன் கிஷோர், வினோநோகராதலிங்கம் ஆகியோரின் ஒழுங்குபடுத்தலில் இவ் எழுச்சிப் பேரணிக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

வவுனியாவில் இதுவரை காலமும் நடைபெற்ற எழுச்சி நிகழ்வுகளில் இருந்து இவ் எழுச்சி நிகழ்வு மூன்று வகைகளில் வேறுபட்டிருந்தது. ஒன்று இதுவரை காலமும் ஊர்வலம் என்றால் வர்த்தக நிலையங்கள் அனைத்தும் மூடப்படும் கலாச்சாரம் ஒன்று இருந்தது. ஆனால் இவ் எழுச்சிப்பேரணி அக்கலாச்சாரத் தன்மையிலிருந்து வேறுபட்டு தனக்கென ஒரு புதுப்பாணி வகுத்திருந்தது. அதுதான் மக்களின் இயல்பு வாழ்க்கையைப் பாதிக்காததாக கதவடைப்பு இல்லாத பேரணி இது அமைந்திருந்தமை ஆகும். மற்றையது பாடசாலை மாணவர்கள் இல்லாதபேரணி ஆகும். அதாவது இதுவரை வவுனியாவில் நடைபெற்ற பேரணிகளில் மாணவர்கள் கலந்து கொள்ளாத பேரணியே இல்லையென லாம். மாணவர்கள் இல்லையாயின் பேரணிகள் நடைபெறமாட்டாது என்ற தப்பான அபிப்பிராயமும் நிலவிவந்தது. அவ்வாறான அபிப்பிராயங்களுக்கு சாட்டை அடி கொடுப்பதாகவே இவ் எழுச்சிப் பேரணி அமைந்திருந்தது.

இறுதி விடயம் நேரம் ஆகும். அதாவது பெரும்பாலான பொது நிகழ்வுகள் அறிவிக்கப்பட்ட நேரத்தில் இருந்து அரை மணித்தியாலமோ அன்றி ஒரு மணித்தியாலமோ தாமதமாகவே ஆரம்பமாவது இயல்பாகிவிட்டது. ஆனால் இவ் எழுச்சிப் பேரணி ஏற்கனவே குறிப்பிடப்பட்டபடி காலை 10.00 மணிக்கு வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயம் முன்பாக இருந்து புறப்பட்ட ஊர்வலத்தில் பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் வந்துகொண்டிருந்தனர். இவர்களின் பின்னே ஈருளி உட்பட பல வாகனங்களில் வந்தோர் வந்து கொண்டிருந்தனர். இவ் எழுச்சிப் பேரணி கண்டிவீதி ஊடாக மணிக்கூட்டுக் கோபுரச் சந்தியை கடந்து சென்று கொண்டிருந்தபோது அப்பகுதியில் கடமையில் நின்ற சிறிலங்கா பொலிசார் வாகனங்களில் ஊர்வலமாக வந்துகொண்டிருந்த மக்களை அவ்வழியே ஊர்வலத்துடன் தொடர்ந்து செல்ல அனுமதிக்காது தடுத்து பஜார்வீதி ஊடாக திசை திருப்பி மக்களை அனுப்பிக் கொண்டிருந்தனர். சிறிலங்கா அரசாங்கத்திற்கு எதிரானதாகவோ அன்றி முரணானதாகவோ செய்யப்படாத இவ் எழுச்சிப் பேரணியில் கலந்துகொண்ட மக்களை பொலிசார் திசை திருப்பியமை கண்டனத்திற்குரிய விடயமே.

சிறிலங்கா அரசாங்கத்தால் கடந்த ஒரு வருடகாலமாக இடைநிறுத்தப்பட்டுள்ள சமாதானப் பேச்சுவார்த்தையை உடன் ஆரம்பிக்குமாறு கோரி நடைபெற்ற இவ் எழுச்சிப் பேரணியில் கொளுத்தும் வெயிலையும் பொருட்படுத்தாது கலந்துகொண்ட பல்லாயிரக் கணக்கான மக்கள் தமது கோரிக்கைகள் அடங்கிய சுலோகங்களைக் கொண்ட பதாதைகளைத் தாங்கிச் சென்றனர்.

அம்மக்கள், சமாதானம் இன்றேல் தமிழீழம் மலரும், பேரினவாதமே! போராளிகள் மீதான கோரத்தாக்குதலை உடன் நிறுத்து, சமாதானத்திற்கு சாவுமணி அடிப்பவர்களே! கவனம் செத்து அழிந்து போவீர்கள், சர்வதேசமே புலிகள் தான் தமிழர்கள், தமிழர்தான் புலிகள், ஐ.நாவே ஐக்கியப்படுத்தி அமைதியைத் தா அன்றேல் தமிழீழம் உருவாகும், இராணுவமே! பெண்கள் மீதான பாலியல் வல்லுறவை உடன் நிறுத்து, சுனாமி நிதி உதவியை பாராபட்சமின்றி வழங்கு. சர்வதேசமே! தமிழர்களின் தாகம் தமிழீழ தாயகம், பொறுமை காக்கிறார் எம தலை வா நெருப் பென நிமிர் வார் ம க விரைவில், அரசே! தேசத் துரோகிகளுக்கு அடைக்கலம் கொடுக்காதே போன்ற அரசிற்கும் சர்வதேசத்திற்கும் கோரிக்கையும், எச்சரிக்கையும் விடுவதான கோசங்களை எழுப்பிச் சென்றனர்.



பேரணி வவுனியா நகரசபை மைதானத்தைச் சென்றடைந்ததும் அங்கு வவுனியா மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் திரு.ச.குலதேவராஜா தலைமையில் எழுச்சிக் கூட்டம் ஆரம்பமானது. இதில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் உரையாற்றினர். சிவசக்தி ஆனந்தன் உரையாற்றும் போது பொதுக்கட்டமைப்பு உருவாக்கத்தின் அவசியத்தை வலியுறுத்தியும் விடுதலைப்புலிகளுடன் அரசு உடனடியாக பேச்சுவார்த்தை ஆரம்பிக்க வேண்டியதன் தேவையையும் எடுத்துக் கூறினார்.

நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் உரையாற்றும்போது, இவ்வளவு காலமும் எம்மை சண்டையை விடுத்து சமாதானத்திற்கு வரச்சொன்ன சர்வதேச சமூகம் நாம் சமாதானத்திற்கு வந்த பின், அரசு சண்டைக்குச் செல்ல முற்படும்போது கண்டும் காணாதது போல் இருக்கும் போது அந்நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தி சமாதானப் பேச்சுவார்த்தையை உடன் ஆரம்பிக்குமாறு அரசை வலியுறுத் து ம பேரணியே இது என்றார்.

இறுதியாக வவுனியா மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத்தால் சனாதிபதி சந்திரிகாவிடம் கையளிப்பதற்கான மகஜர் வவுனியா அரச அதிபர் திரு.சி. சண்முகம் அவர்களிடம் கையளிக்கப்பட்டது. இதிலும் ஒரு மாறுபாடான சம்பவம் இடம்பெற்றதை அவதானிக்க முடிந்தது. சனாதிபதிக்கான மகஜரைப் பெற்றுக்கொண்ட அரச அதிபரை உரையாற்றுமாறு கோரியபோதும் அவர் உரையாற்ற மறுத்துவிட்டார். இது அரச அதிபரின் தவறான செயற்பாடு என்றே கூறவேண்டும். கொளுத்தும் வெயிலிலும் கால்நடையாக வந்த மக்கள் மகஜரைக் கையளித்தபோது அரச அதிபரால் ஏன் ஒரு வார்த்தைகூட பேசமுடியாது போனது? அரச அதிபர் என்ன கூறப்போகின்றார் என்ற மக்களின் ஆதங்கத்தை ஏன் அவர் புரிந்துகொள்ளவில்லை?

மகஜரின் பிரதிகள் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம், நோர்வேயின் இலங்கைக்கான விசேட தூதுவர், விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர், இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர், எதிர்க்கட்சித்தலைவர், பிரதமமந்திரி, நோர்வேத்தூதுவர், வவுனியா அரசாங்க அதிபர், வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட பல நாடுகளின் தூதுவர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

பேரணியை ஏற்பாடு செய்தவர்கள் பேரணிக்கான முன்னேற்பாடுகளை திறமையாகச் செய்திருந்தமை பாராட்டத்தக்கதாகும். அவர்களின் அயராத முயற்சியினால்தான் இவ்வளவு மக்கள் கலந்துகொண்டமை மறுக்கமுடியாத உண்மை. ஆனால் பேரணி முடிவில் நடைபெற்ற கூட்டத்தினை அவர்கள் திட்டமிடாமை ஒரு குறைபாடு என்றே சொல்லவேண்டும். ஏனெனில் கடும் வெயிலின் மத்தியில் மக்கள் நிற்கும் போது நீங்கள் மாறி மாறி தவறான அறிவித்தல்களை செய்து கொண்டிருக்கக்கூடாது. திட்டமிடலின் மூலம் இவ்வாறான தவறுகளை திருத்திக்கொண்டால் இன்னும் சிறப்பாக இவை அமைந்துவிடும்.

பேரணியில் கலந்துகொண்ட மக்களில் பெரும்பாலானவர்கள் கிராமப்புற மக்களாகவே இருந்தனர். இவர்கள்தான் போராட்ட காலத்திலும் போராட்டத்தின் முதுகெலும்பாக இருந்தவர்கள். போராட்டத்தின் விளைவுகளையும் அதன் தார்ப்பரியத்தையும் உணர்ந்துகொண்ட இவர்களே சமாதானத்திலும் அதிக அக்கறை கொண்டு பேரணியில் கலந்துகொண்டார்கள்.

இவ்வாறான அகிம்சை ரீதியான பல செயற்பாடுகளை நாம் முன்னெடுத்தபோதும் அவற்றை சிறிலங்கா அரசு செவி சாய்ப்பதாகத் தெரியவில்லை. இவ்வாறான நிலைமை தொடருமாயின் நாம் மீண்டும் யுத்தத்திற்குத் தள்ளப்படுவோம். அவ்வாறான நிலையிலும் நாம் பின்வாங்காது ஆயுதம் ஏந்தி போராட வேண்டிய நிலை ஏற்படலாம். நாம் அதற்கும் தயார் என இப்பேரணியில் கலந்துகொண்ட மக்கள் தெரிவித்தனர். அது வரவேற்கத்தக்கதாகும்.

இவ்வாறே கிளிநொச்சியிலும், யாழ் தென்மராட்சியிலும் மக்கள் அரசுக்கு எதிராக மாபெரும் எழுச்சிப் பேரணியை நடத்தினர் என்பதும் குறிப்பிடத்தக்கது.





# கார்விழியன் தன் தோழர்களை காத்தவன்

**எல்லாத்திலயும் முன்னுக்கு போகவேணும் முதல்ல செய்யவேணும் என்றுதான் செய்வன். அதான் நான் முந்திக்கொண்டன். நான் எழும்பி திசையை மாற்றி முதல்ல அடிக்காட்டி எல்லோரும் செத்திருப்பம்.**

தம்பி எழும்பாதேயடா... டேய் சொன்னாக் கேளடா... எழும்பவேண்டா மெனப் பணிக்கிறான் அந்த காவலரணுக்கு பொறுப்பான போராளி.

அண்ணை கிட்ட வந்திட்டான். இனி ஒன்றுமே செய்யமுடியாது. எழும்பி அடிக்கவா எழும்பி ஒரே ஒரு செல் அடிக்கவா என அடம்பிடிக்கிறான்.

மீண்டும் அந்த பொறுப்பாளர் வேண்டாமெனத் தடுக்கிறார். தம்பி சொன்னாக் கேளடா, அந்த டாங்காரன் இங்கதான் அவதானிக்கிறான். நாங்கள் எழும்பினால் கட்டாயம் எங்களைக் காணுவான். கண்டானெண்டா இந்தப் பொயின்ற் தூசியாகும். அவனுக்கு தடையம் காட்டாமல் பக்கவாட்டா வரேக்க அடிப்பம் என்று சொல்ல அவன் என்னதான் நினைத்தானோ தெரியாது. ஏதோ ஒரு முடிவு செய்தவனாய் திடீரென அவனது முகம் மாறியது.

வீரண்ணே இப்ப நான் எழும்பி அடிக்காட்டி நிச்சயமாய் அவன் எங்களுக்கு அடிப்பான். அதைவிட நாங்கள் முந்துவதுதான் நல்லது. என்னை விடுங்கோ, நான் தான் இவன அடிக்க வேண்டும் என்று சொல்ல எல்லோரும் எதிர்பார்க்காத சில செக்கன்களில் திடீரென எழுந்தவன் தனது உந்துகணை செலுத்தியின் விசைவில்லை அழுத்தவும் எதிரியின் டாங் இவனை நோக்கி எறிகணையை சுடவும் சரியாக இருந்தது.

சம்பவத்தை நேரில் பார்த்த வர்கள் சொன்னது இப்படித் தான். இருவரினதும் விசை அழுத்திகள் நொடிப்பொழுதும் பிசகாது சமநேரத்தில் நடந்திருக்கும். எனவேதான் இரண்டு வெடிப்புக்களும் சமகாலத்திலேயே ஒலியை எழுப்பின.

கணப்பொழுதில் என்ன நடந்தது என ஊகிக்க முன் அந்த வீரன் காயமடைந்து களத்திலே சரிந்தான். எதிரியின் எறிகணை அந்தக் காவலரண் மூலையில் பட்டு வெடிக்க அந்தப்போராளிக்கு முகத்தில் இடது கண்ணிலும் தொண்டையிலும் காயமடைந்து இரத்தம் சொட்டச்சொட்ட தனது உந்துகணைச் செலுத்தியை சுவரில் சரித்துவைத்துவிட்டு தானும் சரிகிறான். அப்படி சரிந்தவனை ஏந்தி தனது மடியில் கிடத்துகிறான் அந்த களப்பகுதியில் அணிக்குப் பொறுப்பான வீரன் மடியில் சரிந்தவன் தாய்மண்ணை விட்டுப் பிரியுமுன் ஒருசில வார்த்தைகளை சொல்கிறான். அவனது இறுதி வார்த்தைகளின் உச்சரிப்பு இன்றளவும் நெருடும் சொல்லாகவே இருக்கிறது.

வீரன் அண்ணா நீங்கள் சொன்ன சொல்லைக் கேட்கேல்ல என்று நினைக்க வேண்டாம். எங்கட அணியில எல்லோரும் டாங் அடிச்சு வீரச்சாவடைவதைவிட நான் தனியே வீரச்சாவடைவது நல்லது என்றுதான் இந்த முடிவை எடுத்தன்.

உங்களுக்கு தெரியும்தானே நான் எல்லாத்திலயும் முன்னுக்கு போகவேணும், முதல்ல செய்யவேணும் என்றுதான் செய்வன். அதான் நான் முந்திக்கொண்டன். நான் எழும்பி திசையை மாற்றி முதல்ல அடிக்காட்டி எல்லோரும் செத்திருப்பம் அதுதான் அப்படிச்செய்தனான். என்னை மன்னித்துக் கொள்ளுங்கோ நீங்கள் கவனமாகச் சண்டைபிடிக்க வேண்டும். பெரிய காயம் பட்டிட வேண்டாமெண்டு சொன்ன மாத்திரத்திலேயே சகதோழன் ஒருவனின் கையை நெருடியவாறு இந்த மண்ணை முத்தமிட்டான். எதையுமே முதலாவதாக செய்யவேண்டுமெனத் துடியாய்த்துடிக்கும் இவனுக்கு இந்தக்களத்தில் காலை விரிந்த களத்தில் முதலிலேயே பல போராளிகள் வீரச்சாவடைந்திருந்தனர். எதையும் முதலிலேயே தான் செய்ய வேண்டுமென துடியாய்த் துடிக்கும் அந்தப்போராளியின் கதை மிகவும் சுருக்கமானதே! 2000ஆம் ஆண்டு தன்னை போராட்டத்தில் இணைத்துக் கொண்ட வீரவேங்கை கார்விழியன் (பாக்கியராசா உதயராசா) 16.01.2001ஆம் ஆண்டு தனது போராட்ட வாழ்வில் ஒருவருட பூர்த்தியோடு தன்னை இந்த மண்ணுக்காய் அர்ப்பணிக்கிறான். இந்தக் குறுகிய காலத்தில் அந்தப்போராளி பரந்தன் பகல்நேர தாக்குதலில் மட்டுமே பங்குபற்றியிருந்தான்.

2000ஆம் ஆண்டு ஆரம்பப்பகுதியிலேயே தன்னை போராட்டத்தில் இணைத்துக்கொண்டான். சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணிக்கே தான் செல்லப்போவதாகக் கூறிவந்து தனது போராட்டக் கடமையினை ஆரம்பித்தான். தனக்கு பெரியதொரு ஆயுதமே வேண்டுமென மாவீரன் மேஜர் பிரபலியனிடம் கேட்கவே அவனுக்கு உந்துகணை செலுத்தி ஒன்று (ஆர்.பி.ஜி) கொடுக்கப்பட்டது.

தனது முயற்சியினால் ஓய்வெடுக்காது தொடர்ந்து பயிற்சி எடுத்து சிறந்த போராளியாகவும், முதல் போராளியாகவும் தேர்ந்தெடுக் கப்பட்டான். தனது சுத்தத்தை விட தனது ஆயுத சுத்தத்தில் மிகுந்த அக்கறை கொண்டவனாக இருந்ததோடு தனது உயிரைவிட ஆயுதத்தை நேசித்தான். அவனது நேசிப்பை போலவே அவனது ஆயுதம் அவனை ஒருபோதும் கைவிடவில்லை. பயிற்சியின்போதும் சண்டையின்போதும் தனக்குத் தரப்பட்ட இலக்கினை வெற்றிகரமாக தாக்குவான். பரந்தன் சண்டை கடுமையான இறுக்கத்திற்குள் நடந்தபோது தனது தாக்குதலால் சண்டையின் போக்கை மாற்றியவன் என்பது குறிப்பிடத்தக்கது.

**க.மிரேசு**

தாயக விடுதலைப் போராட்டத்தில் தான் சாதிக்க வேண்டியவை ஏராளம் என நினைத்து தான் எதிலும் முதலாவதாக வரவேண்டும் என சபதம் கொண்டு போராட்டவாழ்வில் பயணத்தை தொடர்ந்த அவனுக்கு சாவே முந்திக்கொண்டது.

16.01.2001 ஆம் ஆண்டு தைப்பொங்கல் கழிந்து மறுநாள் நிச்சயமாக எதிரி இன்று சண்டைசெய்வான் என்பது தெரியும். முகமாலை காவலரண் தொடரில் அவனை விஞ்சிவிடவேண்டும் என்பதற்காக போராளிகள் ஏமாற்று திசை திரும்பல் சண்டை ஒன்றை செய்யத் திட்டமிடுகின்றனர். ஆனால் எதிரி முந்திக்கொள்கிறான். காலை 04 மணிக்கே இரகசியமாக உள்நுழைந்து 05.45இற்கு பின்பக்கமாக ஓர் இடத்தில் சண்டையைத் தொடங்குகிறான் அவனது நடவடிக்கைக்கு கிணிகிரண-09 என்று சங்கேத பெயரிட்டு சண்டையைத் தொடங்க! போராளிகளும் அத்தாக்குதலை முறியடிக்க சபதம் கொண்டு எதிர்த்தாக்குதலை தொடர்கின்றனர்.

வீரவேங்கை கார்விழியனின் அணியான வீரனின் அணிக்குக் கட்டளை கிடைக்கிறது. பக்கவாட்டாக மேவிச்சென்று ஆழியனின் அணிக்கு உதவியாக அடிக்கச் சொல்லி. எனவே வீரனின் அணி செல் மழைக்குள் முன்னேறுகிறது. பக்கத்தில் இருந்த ஒரு சிறு பாதுகாப்பு அரணுக்குள் தங்களைத் தயார்செய்துகொண்டு சண்டை செய்து செய்து நகர்ந்தபோது பல போராளிகள் வீரச்சாவும் காயமும் அடைய முன்னேறு கின்றனர். சண்டை மிகவும் இறுக்கமாக இருக்கிறது. எதிரி எம்மோடு கலந்துவிட்ட அளவிற்கு சண்டை கைகலப்புச் சண்டையாகி விட்டது.

மாவீரன் வீரவேங்கை கார்விழியன் சொல்கிறான். வீரண்ணே நான் முன்னால் செல்கிறேன் எனக்குப் பின்னால் எல்லோரும் வாருங்கள் என்று சொல்லிச் செல்ல எதிரியின் தாக்குதல் உக்கிரமடைகிறது. எதிரியின் மூன்று பி.கே. ரக இயந்திரத்துப்பாக்கிகள் ஒரே இடத்திலிருந்து சடசடக்க இவர்களால் தலையைக்கூட வெளியில் காட்டமுடியாத அளவு சண்டை. சன்னங்கள் அங்குமிங்குமாக தூவத் தொடங்கின.

பக்கவாட்டாக வந்த பெண் போராளிகளின் அணி நிலைமையைக் கருத்தில் கொண்டு எமக்காக உதவித் தாக்குதலைத் தொடுத்தனர். உதவிச் சூட்டை வழங்க உந்துகணையுடன் எழுந்த போராளி எதிரி குண்டு பட்டு மண்ணை முத்தமிடுகிறான். எதிரி மேலும் தாக்குதலை அதிகமாக்க ஆண் பெண் போராளிகள் இணைந்து வேகத்தாக்குதல் ஒன்றை செய்து எதிரியை முறியடித்து அவனிருந்த நிலையை கைப்பற்றுகின்றனர்.

கைப்பற்றியதை தூரத்தேயிருந்த டாங்காரன் கண்டுவிட்டான் என்பது எல்லோருக்கும் தெரியும். தடையம் விடாமலிருந்து அவன் நகரத்தாக்குவதே திட்டம். ஆனால் தனது சக தோழர்கள் வீரச்சாவடையக்கூடாது என்பதற்காக பின்பக்கமாக ஊர்ந்து சென்று அவனது கவனத்தை திசைதிருப்பி உந்துகணையைச் செலுத்தி எதிரிக்குத் தாக்கிவிட்டு அதே களத்தில் தானும் வீரச்சாவடைந்தான். இவன் போன்ற ஒப்பற்ற மாவீரர்களின் வீரத்திலேயே எமது போராட்டம் வெற்றியின் பாதைக்குள் வீறுநடை போடுகிறது.

# கல்வி மேம்பாட்டுக்கான நீள் கட்டுமானம்

வல்வை ந.அனந்தராஜ்



கல்வி அபிவிருத்தியில் முன்னெடுக்கவேண்டிய சில செயல்திட்டங்களை மேற்கொள்வது கல்வியியலாளர்கள் ஒவ்வொருவரினதும் தார்மீகக் கடமையாகும். இந்த நிலையில் எமது மாணவர்களின் கல்வித்தர வீழ்ச்சிக்கு ஒருவரை ஒருவர் குற்றம் சுமத்திக் காலத்தை வீணடிக்கும் செயற்பாடானது பல்வேறு அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டு, வலுவிழந்து உறுதிமட்டும் குலையாத தமிழர்களின் எதிர்காலக் கல்வி அபிவிருத்தி முயற்சிக்கு ஒரு தடையாக அமைந்துவிடாதா?

பாடசாலை மட்டத்தில் வகுப்பறை ரீதியாகவோ, அல்லது வலய மட்டத்தில் பாடசாலைகள் ரீதியாகவோ அல்லது மாகாண மட்டத்தில் வலயரீதியாகவோ மேற்கொள்ளப்படவேண்டிய துரித கல்வி அபிவிருத்திச் செயற்பாடுகள் உடனடியாக இன்றே மேற்கொள்ளப்படவேண்டும். இதனை மேற்கொள்வதற்காக பணரீதியான பெறுமானத்தை ஒரு அளவீடாக வைத்துத்திட்டமிடுவது என்பது சேவை நோக்கம் கருதியதாக இருக்கமுடியாது!

எம்மவர்கள் மத்தியில் கல்வி அபிவிருத்திச்செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக உள்ள வளங்களைப் பின்வருமாறு குறிப்பிடலாம்.

1. துறைசார்ந்த நிபுணத்துவ சேவையை வழங்கக் கூடிய ஆளணியினர்.
2. ஆற்றல் நிறைந்த, கற்கத் துடிப்புடன் இருக்கும் மாணவர்கள்.
3. துறைசார்ந்த தகைமை படைத்த ஆசிரியர்கள்.
4. வினைத்திறன் மிக்க கல்வி நிர்வாகிகள் மற்றும் அதிபர்கள்.
5. பாடசாலை மட்டத்தில் எதையும் செயல்படுத்த நிதி உதவும் தர உள்ளீட்டு நிதித் தேட்டம்.
6. கல்விக்காக எதையும் செய்யக் கூடிய சமூகம்.

என்ற வகையில் எமது பிரதேசத்தில் காணப்படும் மேற்படி வளங்களைச் சரியான முறையில் திட்டமிட்டு ஒருங்கிணைப்பதன் மூலம் கல்வி அடைவு மட்டத்தை உயர்த்திக்கொள்ள முடியும்.

இந்த அடிப்படையில் எமது மாணவர்களின் இழந்த கல்வியை மீட்பதற்கான ஒரு போராட்டத்தில் கல்வியியலாளர்கள் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் பாடசாலை மட்டத்திலான செயல்நிலை ஆய்வுகளை மேற்கொள்வதன் மூலம் கல்வித் தரத்தை உயர்த்துவதற்கான செயல்திட்டங்களை ஒவ்வொரு ஆசிரியர்களும் தயா ரித்துச் செயல்படுத்த முன்வர வேண்டும்.

அந்த வகையில் வகுப்பறை மட்டத்திலான செயல்நிலை ஆய்வை எவ்வாறு மேற்கொள்ளலாம் என்பதை ஒவ்வொரு ஆசிரியரும் அறிந்துவைத்துக்கொள்வதன்மூலம் ஒவ்வொரு மாணவனினதும் தனித்துவ ஆளுமையை விருத்திசெய்யலாம்.

செயல்நிலை ஆய்வுக்கும் ஆராய்ச்சி முறையிலான ஆய்வுக்கும் இடையில் பாரம்பரிய வேறுபாடுகள் உள்ளன.

'ஆய்வு' என்பது நீண்ட காலத்தை எடுப்பதுடன், பெருமளவு நிதித் தேவையையும் பரந்த பரப்பையும் கொண்டதாக இருக்கும். இத்தகைய ஆய்வுகள் வெவ்வேறு காலப் பகுதிகளில் திரும்பத் திரும்ப செய்து பார்ப்பதனூடாக மேற்கொள்ளப்படும் ஒரு நீண்ட செயற்பாடாகும்.

செயல்நிலை ஆய்வு என்பது குறுகிய காலப்பகுதிக்குள் அதாவது சில நாட்களில் இருந்து ஐந்து அல்லது ஆறு மாதங்களுக்குள் மேற்கொள்ளப்படுவதுடன், குறைந்த நிதியையும் குறுகிய பிரதேசத்தையும் உள்ளீடாகக்கொண்ட ஒரு செயற்பாடாகும்.

கல்விப் புலத்தைப் பொறுத்தவரையில் அதன் வெளியீடுகளை விரைந்து செயல்படுத்த உதவுவது செயல்நிலை ஆய்வாகும். இன்று "எல்லாமே பாடசாலை அதிபர்கள் தான்'' என்ற எண்ணக்கருவை ஏற்படுத்தும் வகையில் பாடசாலை மட்ட முகாமைத்துவம் படிப்படியாக அறிமுகப்படுத்தப்பட்டு வரும் வேளையில் அதிபர்களிடம் பாடசாலையின் கல்வி அபிவிருத்தியை முன்னெடுப் பதற்காக பல்வேறு செயல்திட்டங் களுக்காக பெரு மளவு நிதி வழங்கப்படவுள்ளது. ஒவ்வொரு அதிபரும் தமது பாட சாலைச் சமூகத்தின் மேம்பாட்டுக்காக இதய சுத்தியுடன் செயல்படுவதனூடாக இந்த இலக்கை அடைந்து கொள்ளமுடியும்!

இதன் ஒருகட்டமாக ஒவ்வொரு அதிபரும், தமது பாடசாலை ஆசிரியர்களைக்கொண்டு கல்வி அபிவிருத்திக்கான செயல்திட்டத்தைத் தயாரித்து அவற்றினூடாக மாணவர்களின் தேர்ச்சி மட்டத்தை உயர்த்துவதற்கான வழிகாட்டல்களை மேற்கொள்ள வேண்டும்.

பொதுவாக ஆய்வுகள் என்பன சில நிபந்தனைகளுக்குட்பட்ட வரையறைகளைக் கொண்டுள்ள போதும், செயல்நிலை ஆய்வும் அவற்றைப் போன்ற வரையறைகளையே கொண்டுள்ளன.

ஒவ்வொரு ஆசிரியரும் தமது வகுப்பறைகளில் நாளாந்த கற்பித்தல் செயற்பாட்டை மேற்கொள்ளும்போது, வகுப்பறையில் பல்வேறு பிரச்சினைகளை இனங் காணக் கூடியவராக இருப்பர். இவ்வாறு இனங்காணப்பட்ட பிரச்சினைகளை பட்டியல்படுத்தும் பொழுது இவற்றில் பல பிரச்சினைகள் ஒரு மூலப் பிரச்சினையின் வழி வந்த வையாக இருக்கக்கூடும். அதனை முன்னுரிமைப்படுத்தவேண்டும். உதாரணமாக தரம்-4 இல் ஒரு ஆசிரியர் தனது பிரச்சினைகளைப் பின்வருமாறு பட்டியலிட்டுக் காட்டுகின்றார்.

★மாணவர்கள் எழுத்துப்பொறி முறையை அனுசரித்து எழுதமுடியவில்லை.
★வாசிப்பதில் இடர்படுதல்.
★கிரகிக்கும் ஆற்றல் குறைவாகக்கொண்டிருத்தல்.
★புதிய ஆக்கங்களைப் படைக்க முடியவில்லை. உ+ம் கட்டுரை, கவிதை
★எழுத்துப்பிழைகளைக் கூடுதலாக விடுதல்.
★கற்கும் விடயங்களை நினைவில் வைத்திருக்க முடியாதவர்களாக இருத்தல்.

இவ்வாறு பிரச்சினைகளை ஒன்றன் பின் ஒன்றாக எழுதித் தலையைப் போட்டுக் குடைந்து கொண்டிருக்கும் ஆசிரியரால் இதற்கான அடிப்படை மூலப் பிரச்சினையை இனங்கண்டால் மேலே கூறப்பட்ட எல்லாப் பிரச்சினைகளுக்கும் தீர்வு கண்டு விடமுடியும்.

இங்கு வாசிப்பதில் இடர் படுதல் என்ற பிரச்சினையை ஒரு ஆசிரியர் முதன்மைப் பிரச்சினையாக எடுத்து அதனை நிவர்த்தி செய்வதற்கான ஒரு செயல்திட்டத்தை முன்னெடுப்பாராயின் அவை தொடர்பான ஏனைய பிரச்சினைகள் எல்லாம் நீங்கிவிடும்.

இவ்வாறு இனங்காணப்பட்ட பிரச்சினைகளில் முதலில் தீர்வு காணப்படவேண்டிய பிரச்சினையைத் தனியாக எடுத்து அதனை ஒரு செயல்திட்டத் தலைப்பாக மாற்றுவதன் மூலம் வகுப்பறை மட்ட செயல்திட்டத்தை அமைத்துக்கொள்ளலாம்.

உதாரணமாக மேலே கூறப்பட்ட "வாசிப்பதில் இடர்படுத்தல்'' என்ற பிரச்சினையை "தரம்-4 மாணவர்களின் வாசிப்புத் திறனை உயர்த்துதல்'' என்ற தலைப்பைக் கொடுப்பதன் மூலம் செயல்திட்டத்தலைப்பை ஆக்கிக்கொள்ளலாம்.

இந்தச்செயல்திட்டத்தைத் தெரிவுசெய்தமைக்கான காரணங்களைத் தெளிவுபடுத்துவதன் மூலம் இதற்கான நியாயப்படுத்தலை உறுதிப்படுத்திக்கொள்ளலாம்.

எந்தவொரு செயலை மேற்கொள்ளும் போதும் அதற்கான நியாயப்படுத்தலை முன்வைப்பது என்பது அவசியமாகும். இதனால் நிதி வழங்குனரையோ அல்லது அதிபரையோ திருப்திப்படுத் துவதனூடாக இச் செயல்திட்டத்திற்குத் தேவைப்படும் நிதியைப் பெற்றுக் கொள்ள ஏதுவாக இருக்கும்.

இவ்வாறு நியாயப்படுத்தி, முன்வைக்கப்பட்ட செயல்திட்டத்தினூடாக மாணவர்கள் மத்தியிலோ, அல்லது அசிரியர்கள் மத்தியிலோ சில குறிக்கோள்களை நிறைவு செய்து கொள்ளலாம்.

உதாரணமாக "வாசிப்புத் திறனை மேம்படுத்தல்'' என்ற செயல் திட்டத்தை நிறைவு செய்யும் பொழுது மாணவர்கள் பின் வரும் குறிக்கோள்களை அடைந்துகொள்வர்.

★மாணவர்கள் தாமாகவே வாசிப்பில் ஈடுபடுவர்.
★எழுத்துப் பொறிமுறைகள், குறியீடுகள் என்பவற்றிற்கு ஏற்ப எழுதிக்கொள்வர்.
★புதிய ஆக்கங்களைப் படைத்துக் கொள்ளும் ஆற்றலை பெறுவர்.
★சொற்களஞ்சியத்தை விருத்தி செய்துகொள்வர்.
★கிரகிக்கும் ஆற்றலை வளர்த்துக் கொள்வர்.

இவ்வாறாக வாசிப்புத்திறனுடன் சார்ந்த ஏனைய திறன்களையும் பெறக்கூடியதாகக் குறிக்கோள்கள் அமைந்திருக்கும். இவ்வாறு வகுப்பறை மட்டத்தில் மேற்கொள்ளப்படும் செயல்திட்டத்திற்கான காலஎல்லையை திட்டமிட்டுக் கொள்ள வேண்டும். இதற்கான கால எல்லை நீண்டதாக இருக்கக்கூடாது. பதி னைந்து நாட்களில் இருந்து 6 மாதங்களுக்குட்பட்டவையாக இருந் தால், வினைத்திறன் உள்ள ஒரு செயல்திட்டமாக இருக்கும். மேலும் இச் செயல்திட்டம் யாருக்காக எத்தனை பேருக்காக என்று குறிப்பிடுவதன் மூலம் பயனாளிகள் பற்றிய தகவலை அறிந்துகொள்ளமுடியும்.

இச் செயல்திட்டத்தை வகுப்பறை மட்டத்திலோ அல்லது பாடசாலை மட்டத்திலோ அல்லது வலய மட்டத்திலோ வெற்றிகரமாகச் செயல்படுவதற்கு நிதி ஏதாவது தேவைப்பட்டால் அதற்கான செலவு விபரத்தையும் அவை தொடர்பான விரிவாக்கத்தையும் வழங்குவதன் மூலம் நிதி வழங்குவோர்களிடம் நம்பகத்தன்மையை ஏற்படுத்திக் கொள்ளமுடியும்.

இவ்வாறு திட்டமிடப்பட்ட ஒரு செயற்பாட்டை வகுப்பறை மட்டத்தில் அல்லது ஏதாவது ஒரு ஆய்வுப் பிரதேசத்தில் செயல்படுத்தமுற்படும் போது அதனைப் பல்வேறு செயற்பாட்டுக கூறுகளாகப் பிரித்து ஒவ்வொரு கூறும் நடைமுறைப்படுத்தப்படும் காலம் அவை ஒவ்வொன்றுக்குமான செலவு அந்தநிதிக்கான மூலம் அதனை நிறை வேற்றுவதற்கு நேரடியாகப் பொறுப்பான அலுவலர் இதனைச் செய்து முடிக்கும் பொழுது பெறப் படும் பௌதீகச் சுட்டி என்பவற்றை ஒரு அட்டவணையாகத் தயாரித்து இறுதியாக மேற்பார்வையும் கண்காணிப்பும் மேற்கொள்வதன் மூலம் இச்செயல் திட்டத்தின் குறிக்கோள்களை அடைந்து கொள்ளமுடியும். இவ்வாறு தயாரிக்கப்படும் அட்ட வணையே "காணின் அட்டவணை'' எனப்படுகின்றது.

உதாரணமாகப்பின்வரும் காணின் அட்டவணை மூலம் இச் செயல்நிலை ஆய்வுக்கான செயல் திட்ட முன்மொழிவை ஒரு ஆசிரியர் தனது வகுப்பறையில் வைத்துக் கொள்ளலாம்.

இது ஒரு ஆசிரியர்தான் என்ன செய்யப் போகிறார். என்பதைத் திட்டமிடவும், செய்து முடித்த வேலைகளை மீளாய்வுசெய்து கொள்ளவும் உதவும்.

இங்கு பெற்றோரை அழைத்து இது தொடர்பாக விளக்கமளிப்பதன் மூலம் அவர்களிடம் விழிப்புணர்வையும், அன்னியோன்னிய உறவையும் வளர்க்கலாம்.இதற்கு தேநீர் செலவாகவே 150 ரூபா தேவைப்படும். இதற்கான பொருத்தமான துணை நூல்களை நூலகத்தில் இருந்து பெறலாம். அல்லது அயல் பாடசாலையிலிருந்தும் இரவல் பெற்றுக்கொள்ளலாம். அல்லாவிடில் தர உள்ளீட்டு நிதியில் இருந்தும் கூட நூல்களைக் கொள்முதல் செய்தும் கொள்ளலாம். செயற்பாட்டு முடிவில் பயன்படுத்தப்பட்ட ஒவ்வொரு துணை நூலுக்கும் குறைந்தது மூன்று செயலட்டைகளாவது தயாரித்துவைத்து மாணவர் மதிப்பீட்டுக்காகப் பயன்படுத்தலாம். இதற்குகத் தாள்கள், வர்ணப் பென்சில்கள், கிரயோன்சோக், பிறிஸ்ரல் அட்டை போன்றவற்றுக்கான நிதியை தர உள்ளீட்டு நிதியிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.


இதைப்போன்று ஒவ்வொரு பாடத்திற்கும் ஒவ்வொரு ஆசிரியரும் செயல்நிலை ஆய்வுக்கான செயல்திட்டத்தை தயாரித்து அவற்றை வகுப்பறை மட்டத்தில் செயற்படுத்த முன்வருவார்களானால் பின்வரும் அனுகூலங்களை அந்தப்பாடசாலை அமைந்துள்ள கிராமம் பெற்றுக்கொள்ளும்.

★உயர் தேர்ச்சியுள்ள மாணவர்கள்
★நல்லொழுக்கமும், தேசப்பற்றும் கொண்ட சமூகம்.
★சிந்தித்துச் சரியானவற்றை செயற்படுத்தும் மக்கள் கூட்டம்.
★கல்விப்புலம் கொண்டநாடு.

இந்த வகையில் ஒவ்வொரு ஆசிரியரும் தமது குழந்தைகளின் எதிர்கால நல்வாழ்வுக்காக அர்ப்பணிப்புடன் செயல்பட முன்வர வேண்டும்.

இது எமது தேசத்தின் உயர்கட்டுமானத்திற்கான அடித்தளத்தைக் கொடுப்பதுடன் இழந்த எமது குழந்தைகளின் கல்வியை மீட்டெடுக்கவும் உதவும். இது முறையாகவும், செயல்திறன் உள்ளதாகவும் செயற்படுத்தப் படுவதை அதிபர்களும் கல்வி அலு வலர்களும், உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.



# மறைந்த விலங்கினங்களின் பரிணாம வளர்ச்சியின் பின்னணியில்...

பூகோளக் கண்டங்களின் பூர்வீகத் தோற்றமும் மறைவும் துவக்க காலத்தில் எல்லாவற்றுக்கும் முன்னதாகத் தோன்றிய பூதக்கண்டம் "ரொடினியா" 750 மில்லியன் ஆண்டுகளுக்குப் பிறகு துண்டுகளாய்ப் பிரிய ஆரம்பித்து, அவற்றின் இடையே பிரம்மாண்டமான கடற்பகுதிகள் எழுந்தன. அப்போது ஒரு பகுதி வட துருவத்தை நோக்கியும், மறுபகுதி தென் துருவத்தை நோக்கியும் நகர்ந்தன. குன்றுகள் உயர்ந்தன. பூமத்திய ரேகைப் பகுதியில் உள்ள மலைச் சிகரங்களில் கூட பனிமூட்டம் பெருகிற்று. வடக்கில் சென்ற துண்டுக் கண்டங்கள் ஆபிரிக்கா கண்டம் மீது மோதின 600 மில்லியன் ஆண்டுகளுக்குள் மீண்டும் துண்டுகள் இணைந்து பன்னோசியா (Pannotia) என்னும் பூதக்கண்டம் உருவானது.

550 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னே பாலியோஸோலிக் யுகத்தில் வட அமெரிக்காவின் மகத்தான செம்பாறைப் பள்ளத்தாக்கு யூரோ அமெரிக்காவின் ஒரு பகுதியாக இருந்தது. 514 மில்லியன் ஆண்டுகளுக்கு முன் பன்னோசியாவின் ஒரு பகுதி பிரிந்து கோந்துவானப் பெருங்கண்டம் தென்துருவத்திலே விடப்பட்டது. வட அமெரிக்காவின் மேற்குக்கரை 90 டிகிரி சாய்ந்து, பூமையக் கோடு மீது படிந்திருந்தது! அலைகள் உள்நுழைநதும், வெளியேறியும் கடற்கரைகள் அடிக்கடி வெள்ளத்தில் மூழ்கின. கடலில் வாழும் டிரைலோபைட்ஸ் பூர்வப் படிவங்கள் தோன்ற ஏதுவானது. கடற்தள உயிர்கள் பூர்வ படிவங்களும் காணப்பட்டன. பாலியோஸோலிக் யுகத்தின் (Paleozolic Era) இறுதியில் கண்டங்கள் மீண்டும் சேரத் துவங்கி பாங்கியா பெருங்கண்டம் உருவானது.

390 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு லௌரென்சியா (வட அமெரிக்கா) பால்டிகா (வட ஐரோப்பா) கண்டத்துடன் மோதியது. பின்னால் அவலோனியா (பிரிட்டன், நியூ இங்கிலாந்து (Avalonia) பகுதியுடன் மோதியது. கண்டங்கள் மோதிச் சுருங்கிய போது, கடல் தடாகங்கள் அகண்டு கடலில் ஆழம் குறைந்து பல நிலப்பகுதிகள் தெரியும்படி தலை தூக்கின! அப்போது நதிகளும், ஏரிகளும் உப்புநீர்க் கரை அரண்களை இழந்தன. இனிப்பு நீர் மீன்கள் விடுதலையாகப் புலம் பெயர்ந்தன. பயிரினங்கள் நிலத்தில் குடியேறின. பின்னால் கார்பன் நிரம்பிய பயிரின வகை புதைபட்டுப் போய் சூழ்வெளியில் கார்பன்டையாக்ஸைடு அளவு குன்றி பூமியின் வெப்பநிலை குறைந்தது.

300 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு, கோந்துவான கண்டமும, வட கண்டங்களும் மோதி பங்கயா வென்னும் ஒற்றைப் பெருங்கண்டம் சேர்ந்து, வட துருவம் முதல் தென் துருவம் வரை பரவிய மாபெரும் நிலப்பகுதி உருவானது! அவற்றிடையே ஏற்பட்டது, டெதிஸ் கடலான (Tethys Sea) மத்திய தரைக் கடல். அப்பெருங்கண்டத்தைச் சுற்றியிருந்தது பந்தலாஸிக் கடல் Panthalaasic ocean) அதுவே இப்போதைய பசிபிக்கடலானது. பரந்தகன்ற கடலின் ஆழம் குறைந்து வட தென் நிலப்பகுதிகள் ஒட்சிஜன் உள்ள கடலோட்டத்தைத் தடுத்து நிறுத்தியது. பிராண வாயு குறைந்து போன அப்போது, சைபீரியாவில் பலத்த பயங்கரமான எரி மலைகள் கொட்டிய தீக்குழம்பாலும் 250 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு மாபெரும் பிரளயம் ஏற்பட்டு பேரழிவு நிகழ்ந்திருக்கும் என்று விஞ்ஞானிகள் ஊகிக்கிறார்கள். அப்பெருஞ் சிதைவில் தப்பிப் பிழைத்த ஊர்வன விலங்குகளே பங்கயா கண்டத்தில் பரவி, வேறு பட்ட விலங்கினங்களாக மாறி, டைனோஸ்ரார்ஸ் பிறப்



பதற்குக் காரணமாயின என்று கருதப்படுகிறது.

220மில்லியன் ஆண்டுகளில் தோன்றிய டிரையாஸிக் யுகத்தில் (Triassic Era) டைனோஸார் வகைகள் ஊர்வன, பறப்பன, ஓடுவன நீந்துவன பங்கயா கண்டத்தில் உலவ ஆரம்பித்தன என்று கருதப்படுகிறது. பால் கொடுக்கும் விலங்கினங்கள் அதற்கும் முன்னதாகவே பிறந்துவிட்டன. குறிப்பிட்ட பயிரினங்கள் நிலத்தில் முளைத்தன. மர வகைகள் (Conifers) விருத்தியாயின.

190மில்லியன் ஆண்டுகளுக்குமுன்பு டிரையாஸிக் யுகம் முடிந்து ஜுராஸிக் யுகம் (Jurasic Era) உதயமானது. அப்போது மாபெரும் கடற் தட்டுப் புளவு ஏற்பட்டு பங்கயா கண்டம் வடக்கிலும், தெற்கிலும் இரு துண்டாய்ப் பிரிந்தது. வட அமெரிக்கா கண்டமும் யுரேசியாக்கண்டமும் தோன்றின. தென்னமெரிக்கா, ஆபிரிக்கா மற்றவையும் சேர்ந்து ஒரு கண்டமானது. பிறகு தென்பகுதி பிரிய ஆரம்பித்து அந்தாட்டிக்கா, அவுஸ்திரேலியா இந்தியா ஆகியவை தனியே தம் பாதையில் நகர்ந்தன. இலை, குழை மரங்களைத் தின்னும் (Ferns, Palm like Cycads) டைனோஸார்கள் எண்ணற்றவை உலவி வந்தன. கடல்கள் நிரம்பி மீன்வளங்கள் பெருத்தன. புராதனப் பால் கொடுக்கும் விலங்கினங்கள் பரவின. முதன் முதலாகப் பறவை இனங்கள் உதித்தன.

இவ்வாறு தான் நாம் வாழ்கின்ற இவ்வுலகம் உருவானது. மேற்கூறப்பட்ட மாற்றங் களை விட மேலும் பல நிறைய மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. உயிரினங்களின் தோற்றமும் கூர்ப்புக் கொள்கையின் படி அதன் பரிணாம வளர்ச்சிதான் இன்று வாழ்கின்ற உயிரினங்களாக இருக்கின்றன.

மனிதனும் கூட டார்வினுடைய பரிணாம கொள்கையின் படி பல மில்லியன் ஆண்டுகளுக்குப் பின் வேறு ஒரு வடிவத்தை பெறலாம்.




# தொப்புள் கொடி தொற்று நோய்

எமது உடலில் உள்ள அனைத்து உறுப்புகளிலும் நாம் அவதானமாக இருக்க வேண்டும். முக்கியமாக எமது உடலை எந்தளவுக்கு சுத்தமாக பேணமுடியுமோ அந்தளவுக்கு சுத்தத்தை பேண வேண்டும். சுத்தம் சுகம் தரும் என்பது முற்றும் உண்மையே. சுகமான வாழ்வைப் பெற நாம் முதலில் சுத்தமாக இருக்கவேண்டும்.

சுகாதார முறைப்படி நாம் வாழ தவறும் பட்சத்தில் எம்மை பல நோய்கள் ஆக்கிரமிக்கலாம். அவற்றில் ஒன்றுதான் தொப்புள் கொடி தொற்று தொடர்பான நோய்.

தொப்புள் கொடியை வெட்டிய பிறகு சரியாகச் சுத்தம் செய்து சட்ரிமைச் போன்ற மருந்துகளை முறையாக பயன்படுத்தாது விட்டால் தொற்று நோய் ஏற்படுகின்றது. தொப்புள் கொடியில் தொற்று வந்தபின் சில வேளை இது கல்லீரலை அடைத்து அங்குள்ள போர்டல் சிரை இரத்த நாளத்தில் இரத்த அணு படிதலை ஏற்படுத்தி இரத்த வாந்தி வரை அறிகுறிகளை தோற்றுவிக்கலாம். பிறந்து 3-4 நாட்களுக்கு பிறகு தொப்புள் கொடி உள்ள இடம் சரியான பராமரிப்பு அற்ற பொழுது பக்ரீரியாவினால் தொற்று ஏற்படுவது சுமார் 50 வீதமானவர்களுக்கே.

சிலவேளை இதன் வழியாக டெட்டனஸ் நோயும் ஏற்பட்டு மரணத்தையும் ஏற்படுத்தலாம் எனவே மிகச்சிறப்பான முறையில் தாய்க்கும் சேய்க்கும் கொடுக்கும் தடுப்பூசியால் இந்த நோயை இல்லாமல் செய்யலாம். தொப்புள் கொடி புண்ணாகி சீழ் வரும் பொழுது கிருமி அழிப்புச் செய்து தகுந்த மருந்து கொடுத்து புண்ணை ஆற்றிவிடலாம். இல்லையேல் அதுவும் விபரீதத்தை ஏற்படுத்தி விடலாம்.

மேலும் சில சமயங்களில் தொப்புள்களில் சிவப்பான ஒரு கட்டி தோன்றும். இது இளம் வயதினருக்கே அதிகம் ஏற்படுகின்றது. இது தோன்றக் காரணம் பிறவிக் கோளாறாக பிறந்தவுடன் மறையக் கூடிய திசுக்கள் அவ்விடத்தில் இருப்பதினாலயே ஆகும். இதன் மீது சளிப்படலம் ஒட்டிக் கொண்டு ஈரமாக இருக்கும். அதனை தொட்டால் இரத்தம் கசியும்.

தொற்றினால் ஏற்படும் புது வளர் திசு போல இக்கட்டி இருப்பினும் இதன் அடிப்பகுதியில் ஒரு கட்டுப் போட்டு விட சில தினங்களில் கட்டி தானாகவே விழுந்து விடும். அல்லது இதை முழுவதுமாக அகற்ற வேண்டும். இது குணமாகியும் மீண்டும் வளர்ந்தால் தொப்புளை அகற்றும் நிலையும் ஏற்படலாம். இக் கட்டி வயிற்றின் உள்ளே சிறுகுடலுடன் தொடர்புடையதாகவும் இருக்கலாம். அந்நிலை யில் அதையும் சிகிச்சை செய்து குணப்படுத்தி விடலாம்.

நவீன மருத்துவ உலகில் நோய்களுக்கு நிவாரணம் இருந்தாலும் வருமுன் காப்பது போல் வராது அல்லவா? எனவே எமது உடல் உறுப்புக்களில் சுத்தத்தைப் பேணி சுகமாக வாழ பழகிக்கொள்வோம்.

# ஆஸ்துமாவை நிர்வகித்தல்

*நிவாரணிகள்:-*

நிவாரணிகள் போதிய கட்டுப்பாட்டை வழங்காத சிறுவர்களிலும் வயது வந்தோர்களிலும், தேகாப்பியாசத் தூண்டல் ஆஸ்துமாவைத் தடுப்பதற்கும் இது உபயோகிக்கப்படுகின்றது.

மூச்சிழுப்பிற்கு நிவாரணம் அளிப்பதற்காக நிவாரணிகள், வடிவமைக்கப்பட்டுள்ளன. நிவாரணிகள், புரொன்கோடை லேட்டர்ஸ் (Bronchodi lators) எனவும் அழைக்கப்



படலாம். ஏனெனில் இவை காற்றுவழிச்சுவர்களில் உள்ள இறுகிய தசைகளைத் தளர்த்துவதன் மூலம் காற்று வழிக்குழாய்களை விரிவடையச் செய்கின்றன. காற்று வழிகளைத் திறப்பதன் மூலம் நிவாரணிகள் சுவாசத்தை இலகுவாக்குகின்றன. ஆஸ்துமாவுடன் இணைந்துள்ள அழற்சி மீதான தாக்கத்தை நிவாரணிகள் குறைக்கமாட்டாது.

உங்கள் நிவாரணியை பாவிப்பதற்கான கால இடைவெளி பற்றி உங்கள் மருத்துவர் ஆலோசனை வழங்குவார். மிருதுவான ஆஸ்துமாவினால் பீடிக்கப்பட்டவர்களைப் பொறுத்தளவில் இது அவசியப்படுகின்றது என அவர்கள் உணர்ந்தால் இடைக்கிடை மட்டுமே உபயோகிக்க வேண்டும். மேலும் கடுமையான ஆஸ்துமாவைப் பொறுத்தளவில் இது அடிக்கடி உபயோகிக்கப்படலாம்.

வென்ட்டோலின் (Ventolin) (சல்புயுற்றமோல்- Salbutamol), செரவென்ட் (Serevent) (சல்மெட்டரோல் செனாபோயோட்- Salmeterol Xinafoate), பிறிகனைல் (Bricanyl) (தெபியூட்டலின் சல்பேற்று - Terbutaline Sulfate) ஆகியன நிவாரணிகளுக்கான (புரோன் கோடை லேட்டர்கள்) உதாரணங்களாகும்.

ஆனால், இவற்றுக்கிடையில் முக்கியமான வித்தியாசங்கள் உள்ளன. செரவெனடை விட அதிகளவில் உடனடித்தாக்கத்தை வென்டோலின் கொண்டுள்ளது. ஆனால் செரவென்டின் தாக்கம் அதிக நேரம் நீடிக்கும். அதனால் தான் திடீர் ஆஸ்துமா தாக்குதலுக்கு நிவாரணம் அளிப்பதற்கு வென்டோலின் உபயோகிக்கப்படுகின்றது. செரவென்ட் அப்படி அல்ல.

"தேவைப்படும் போதே" உபயோகிக்கப்படுவதற்கு சாதாரணமாக வென்டோலின் உபயோகிக்கப்படுகின்றது. ஆஸ்துமாவின் அதிக கடுமையான தாக்கங்களின் போது செரவென்ட் நாளொன்றுக்கு இரு தடவைகள என கிரமமாக உபயோகிக்கப்படுகின்றது.

ஆரம்பம் முதல் மூச்சிழுப்பையும் நிவாரணிகளால் நிறுத்த முடியும். உதாரணமாக தேகாப்பியாசத்தின் பின் இது உங்களுக்கு ஒரு தூண்டற்காரணியாக விளங்கினால் வென்டோலினின் ஒரு சில இழுவைகளை (Inhalate) எடுக்குமாறு உங்கள் வைத்தியர் ஆலோசனை கூறலாம். ஆஸ்துமாத் தாக்கத்திலிருந்து நிவாரணம் பெறுவதற்காக செரவென்ட் வடிவமைக்கப்படவில்லை. ஆனால் தொடர்ந்தும் ஆஸ்துமாவினால் பீடிக்கப்பட்டுள்ளவர்களினால் பெக்கோடைட், பெக்லோபோர்டே அல்லது பிரிக்ஸோடைட் ஆகியன போன்ற தடுப்பு மருந்துகளுடன் கிரமமாக எடுக்கப்படுகின்றது. இரவில் நிலவும் ஆஸ்துமா (Nocturnal Asthma) அல்லது தேகாப்பியாசத்தூண்டல் ஆஸ்துமா ஆகியவற்றினால் நீங்கள் பாதிக்கப்பட்டிருந்தால், செரவென்ட குறிப்பிடத்தக்களவில் உதவியாக விளங்கும்.

(தொடரும்)




# தாய்மண்

சாரங்கன்

"தாய்மண்" என்பது இடுகுறிப் பெயராகவே இதுவரை காலமும் வாசு கருதிவந்தான். ஆனால் அது இப்போது காரணப்பெயராக அர்த்தம் கொடுத்து அவனது வாழ்க்கையில் புதுப்பூரிப்பையும் மகிழ்ச்சியையும் கொடுத்து நிற்கிறது. தனது தாய் மண்ணுக்கு நீண்ட நாட்களுக்குப் பிறகு திரும்புவது அவனுக்கு மகிழ்ச்சியைக்கொடுக்கும் என்பது எதிர்பார்த்ததுதான். ஆனால் இப்படியொரு வாழ்நாள் மகிழ்ச்சியைக் கொடுக்கும் என அவன் சற்றும் எதிர்பார்க்கவில்லை.

இரவு பத்துமணியிருக்கும். அவன் வந்து படுக்கும்போது அதிகாலை நான்குமணிக்கே மீண்டும் வேலைக்குப்போவதென்றால் அதுவும் இரத்தத்தை உறைய வைக்கும் இந்தக் குளிருக்குள். அவனது அலுப்பைப் பொருட்படுத்தாமல் அலாம் வைக்கப்பட்ட மணிக்கூடு. விட்டுவிட்டு அலறியது. இனிமையான அந்த அலாம் இசை அப்போது அவனுக்கு அலறல்போலவே கேட்டது. என்ன செய்வது எழும்பி புறப்பட ஆயத்தமானான். சுவரில் மாட்டியிருந்த வெப்பமானி.... அன்றைய வெப்பநிலை பன்னிரெண்டு பாகை எனக்காட்டியது. அதுவே அவன் எவ்வாறு ஆடை அணிய வேண்டும் என்பதை தீர்மானிக்கும் இன்று குளிர் அதிகம் என்பதை உணர்ந்த வாசு அவன் சுமை எனக் கருதும் அந்த தடிப்பான "கோட்டை" யும் அணிந்து முகத்தைத் தவிர ஏனைய அனைத்துப் பாகங்களையும் மறைத்துக்கொண்டு வேலைக்குப் புறப்பட்டான். பனியால் மூடியிருந்த காரையும் பாதையையும் மிகவும் சிரமப்பட்டு அகற்றிக்கொண்டு ஈரமான அந்த பாதையூடு தனது காரைச் செலுத்தினான்.

வருடத்தில் மிகக் குறுகிய காலமே அவனது உடம்பு ஆவலுடன் அந்த வெப்பத்தை அனுபவிக்கும். வெயில் எறிக்கும் நாட்களில் அவன் மனம் குதூகலிக்கும் அவ்வாறான நாட்களில் வேலைக்கு "லீவு" போட்டு விட்டு நண்பர்களுடன் அந்த வெயிலை அனுபவிப்பதற்கு வெளியான பொது இடங்களிற்கு செல்வது வழமை. அவன் சிறு வயதில் யாழ்ப்பாணத்தில் இருந்தபோது அவனது தாயும், தந்தையும் அவனை வெய்யிலுக்கை விடுறதே இல்லை. "அம்மா விளையாடப்போறன்" என அனுமதி கேட்கும் போதெல்லாம் "வெயிலுக்க போகக்கூடாது மரத்துக்கு கீழ இருந்து விளையாட வேணும்" என்று கூறியே அனுமதி கொடுப்பார்கள். அவன் விளையாடும் போதெல்லாம் சமையலில் ஈடுபடும் அவனது தாய் இடைக்கிடை அவன் வெயிலுக்குள் போகின்றானா என்று நோட்டம் விட்டுக்கொண்டிருப்பாள். வாசுவின் தந்தை தோட்டம் செய்பவர். அவர் பெரும்பாலான நாட்களில் அதிகமான நேரத்தை வெயிலுக்குள் கழித்த போதும் வாசு வெயிலுக்குள் திரிவதை சற்றும் அனுமதிக்கமாட்டார். சில நாட்கள் வாசு வெயிலுக்குள் நின்றதற்காக வாசு தந்தையிடம் சிறுதடியால் காலுக்குக்கீழே அடியும் வங்கியிருக்கிறான். அப்போதெல்லாம் அவ்வாறு தன்னை வெயிலுக்குள் விடாத தனது பெற்றோரை மனதுக்குள் செல்லமாகத்திட்டுவது உண்டு.

"என்னதான் நடந்தாலும் பிள்ளையள் கண்ணுக்குமுன்னே இருக்க வேணும்" என்ற தனது இலட்சியத்தில் இருந்த வாசுவின் தந்தை போர்ச்சுழல் பயங்கரவாதத்தடைச் சட்டம் என்பவற்றால் பின்வாங்க வேண்டிய நிலைமையைத்... தோற்றுவித்தது. உறவினரின் உதவியுடனும் காணியொன்றை விற்றும் வாசுவை அந்த குளிர் தேசத்துக்கு அனுப்பி வைத்தர். இது நடந்து இன்று பதினைந்து ஆண்டுகளிற்கு மேலாகி விட்டது.

அன்று அவன் பயணம் புறப்பட்டபோது அவனை பயணம் அனுப்புவதற்காக உறவினர்கள் வீட்டிற்கு வந்துபோயினர். முதல்நாள் மாலை ஐந்து மணியிருக்கும். பயணமனுப்பவந்த உறவினர் காத்துக்கொண்டிருக்கின்றார்கள். வாசு எங்கேயோ போனவன் நீண்ட நேரமாகக் காணவில்லை. அவன் நீண்ட நாட்களிற்கு பிரிந்திருக்கப் போகும் பாடசாலையில் அரும்பி இன்றுவரை எவருக்கும் தெரியாத காதல் நாயகியை இரகசிய இடத்தில் சந்தித்தான். இருவர் உள்ளமும் விம்மியது. இருவரது கண்களிலும் நீரைச் சொரிந்த போதும் காதலி சோபியின் வாயால் எழும் விக்கல் அழுகையை அடக்க முடியவில்லை. வாசு"நிச்சயம் மிக விரைவில் நாங்கள் சந்திப்பம் எக் காரணம் கொண்டும் நான் உம்மை மறக்கமாட்டேன்" இவ்வாறு பல வார்த்தைகள் கூறி வாசு சோபியை அமைதிப்படுத்தி விடைபெற்றான். அவன் இந்தக் குளிர் நாட்டிற்கு வந்து ஆண்டுகள் பல ஓடிமறைய அவன் பெற்றோரின் அனுமதியுடன் சோபியை அழைத்து திருமணம் செய்துகொண்டான்.



அவன் திருமணமாகி பத்து வருடங்கள் கழிந்துவிட்டன. இருவரும் திருமண வாழ்வில் இணைந்து வாழ்ந்த போதும் அவர்களுக்கு ஒரு குழந்தை கிடைக்கவில்லை. "ஆரம்பத்தில் உமக்கு நான் குழந்தை எனக்கு நீகுழந்தை" என்ற ஆறுதல் வார்த்தை எத்தனை ஆண்டுகளுக்குத்தான் தாக்குப்பிடிக்கும்.

வாசு,சோபி இருவரது உள்ளத்திலும் கவலை அதிகரித்துக் கொண்டே போனது. ஆரம்பத்தில் குழந்தை இல்லாட்டியும் சமாளித்து சந்தோசமாக வாழ்ந்துவிடலாமாம் என்றுதான் நினைத்தனர். ஆனால் இந்தச் சமூகம் அவர்களது அந்த நினைப்பை சாத்தியமற்ற தாக்கி விட்டது.

வாசுவின் பெற்றோர்கள் தூரத் தூர இருந்தாலும் கூட்டுக்குடும்பம் போல் வாழ்ந்து வந்தனர். அந்தப் பாசப் பிணைப்புக் காரணமாக அவர்களுக்கும் வாசு பணம் அனுப்புவது வழமை. இதனால் அவன் அதிகம் சேமிக்கமுடியவில்லை. தான் என்ன கஸ்ரப்பட்டாலும் உறவுகளிற்கு பணம் அனுப்புவதில் அவனுக்கு ஒரு ஆன்மதிருப்தி ஏற்படும். உறவினர்கள் யாரும் தொலைபேசி எடுத்து இஞ்ச இப்ப ஒரு தொழிலும் செய்ய முடியுதில்லை. பொருளாதாரத்தடை காரணமாக பொருட்கள் எல்லாம் சரியான விலை என்று கூறி உதவி கேட்டால் தன்னிடம் பணம் இல்லாதபோதும் வங்கியில் கடன் பெற்றாவது அனுப்புவது அவனது வழமை.

அன்று வாசுவும் சோபியும் அந்த திருமண வீட்டிற்கு செல்லவிருந்தனர். அவர்களுக்காக சென்ற ஞாயிற்றுக்கிழமையே வாங்கிவைத்திருந்த பரிசுப் பொருளுடன் இருவரும் புறப்பட்டனர். சோபி காஞ்சிபுரம் கட்டி அழகுத் தேவதைபோல் நடந்து வருவதை ரசித்தபடி றைவர் ஆசனத்தில் வாசுஅமர்ந்திருந்தான். சோபியும் வந்து அருகில் உள்ள ஆசனத்தில் அமர்ந்ததும் கதவைப் பூட்டவும் "கார்" அசையத் தொடங்கியது.

தனது பள்ளிச் சிநேகிதியும் அங்கு வருவாள் என்று வாசுவுக்குத் தெரியும். அவளது பெயர் கௌரி. வாசுவுக்கும் கௌரிக்கும் இடையில் இனிமையான பாடசாலை நினைவுகள் பல உள்ளன. அந்த பசுமையான நினைவுகளை மீட்டியபடி வாசு சென்று கொண்டிருந்தான். கௌரிக்கு திருமணம் நடைபெறுவதற்கு அதிக பணம் தேவைப்பட்டபோது வாசுதான் ஒருபகுதி பணத்தை அனுப்பி உதவியிருந்தான். வாசு இருக்கும் நாட்டிற்கு அவள் வந்தது அறிந்த போதும் அந்த இயந்திரமயமான வாழ்க்கையில் அவளைச் சந்திக்க முடியவில்லை. இன்று அவளையும் சந்திக்கும் சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு வாசுவும் சோபியும் மகிழ்ச்சி அடைந்தனர். திருமணம் பிரமாண்டமான மண்டபத்தில் தடபுடலாக நடைபெற்றுக் கொண்டிருந்தது-தாம் கொண்டுவந்த பரிசுப் பொருளையும் கொடுத்து மணவறையில் மணமக்களுடன் நின்று படம் எடுத்துக் கொண்ட பிறகு வாசுவும் சோபியும் கௌரி குடும்பத்தை தேடுகின்றனர். உணவருந்தும் மண்டபத்தில் கௌரியும் கணவரும் தமது குழந்தையுடன் இருந்ததை கண்டு விட்டனர். "காய் கௌரி..." நீண்ட காலம் பிரிந்த நண்பியை கண்ட சந்தோசத்தில் இருவரது முகமும் மலர்ந்தது. கௌரியும் மகிழ்ந்த முகத்துடன் "வாசு... சோபி நான் நினைச்சனான். நீங்கள் வருவீங்க சந்திக்கலாம் எண்டு..." 'சந்தோசமாய் இருக்கு' "எப்பிடியிருக்கிறீங்க..." இவ்வாறு பல ஆசையான வார்த்தைகளை கொட்டினாள். "நாங்களும் சந்திக்கலாம் எண்டுதான் கதைச்சுக்கொண்டு வந்தனாங்கள்" இது சோபி கதைத்துக்கொண்டே கௌரியைப் போலவே அழகிய முகத்தையுடைய அவளது குழந்தையை சோபி ஆசையால் அணைத்துத் தூக்கிக் கொஞ்சினாள். அதேநேரம் கௌரி தனது கணவருக்கு வாசுவையும் சோபியையும் அறிமுகம் செய்துவைக்கின்றாள். அந்தநேரம் பார்த்து எங்கிருந்தோ வந்த கௌரியின் மாமியார் தனது பருத்த உருவத்தை அசைத்து அசைத்து வேகமாக வந்து சோபி ஆசையுடன் கொஞ்சிக் கொண்டிருந்த கௌரியின் குழந்தையை வேகமாகப் பறித்துக் கொண்டு கௌரியைப்பார்த்து "என்னட்டை குழந்தையைத் தந்திட்டு நீங்க ஆறுதலாகக் கதைச்சிட்டு வாங்கோ" என்று கூறிக்கொண்டே சென்றாள். தொட்டாச் சினுங்கி வாடியதுபோல் சோபியின் முகம்வாடியது. என்ன செய்வதென்று தெரியாமல் தலை விறுவிறுத்தது. வாசுவைப் பரிதாபமாகப் பார்க்கின்றாள். அவனது முகமும் கறுத்திருந்தது. அவளால் இதற்கு மேலும் அழுகையை அடக்க முடியவில்லைதான். அழுவதை இயலும் வரை மறைத்துக் கொண்டு ஓடிச்சென்று காரில் ஏறிக் கொண்டாள். வாசு எதுவும் பேசாமல் சற்றுநேரம் நின்று விட்டு... கௌரியின் முகம் எதிர் பாராமல் நடந்த அந்த சம்பவத்திற்காக வேதனைப் படுவதைக்காட்டியது. அவளிடம் "வாறன்"என்று சொல்லிவிட்டு விடைபெற்றான். காரில் அழுது கொண்டே இருக்கும் சோபியுடன் கார் வீடு வந்து சேர்ந்தது. காரால் இறங்கியவள் அழுதவாறே ஓடிச் சென்று கட்டிலில் படுத்துக் கொண்டாள். வாசு அவளை "ஏன் இப்ப அழுகிறீர்" அழாதேம்...." இவ்வாறு பல ஆறுதல் வார்த்தை கூறிய வாசு ஒரு கட்டத்தில் தானும் சேர்ந்து அழத் தொடங்கிவிட்டான். அவ்வேளை தொலைபேசி வாசுவின் சிந்தனையைத் திருப்பியது எழுந்து வந்து இலக்கத்தைப் பார்த்தான் யாழ்ப்பாணத்து இலக்கம். அவனது தாயாரின் அழைப்பு என்பதை உணர்ந்து கொண்டான். தொலைபேசி தொடர்ந்து அலறுகின்றது. "இஞ்சேஅம்மா கோல் எடுத்திருக்கின்றா நீர் அழாதையும், அழுகிற சத்தம் கேட்டால் அம்மா கவலைப்படுவா..." அழாதேம்... தொலைபேசி அழைத்துக்கொண்டே இருந்தது. வாசு இன்னும் எடுக்கவில்லை. "நீர் அழாமல் விட்டாத்தான் எடுப்பன்" இவ்வாறு வாசு பலமுறை மண்டாடி பகீரதப்.... பிரயத்தனம் செய்துதான் அழுகைச் சத்தத்தை அடக்கிக்கொண்டாள். வாசு "ஹலோ" "ஹலோ" "யார் வாசுவே நான் அம்மா கதைக்கிறனடா" "எப்பிடியப்பு இருக்கிறாய்" "நாங்க நல்ல சுகமாய் இருக்கிறம் அம்மா" "நீங்க எப்பிடி இருக்கிறியள்" எங்களுக்கு என்னப்பு... இருக்கிறம் "இஞ்ச உன்ர வீட்டுக்குத்தான் ஒரே பிரச்சினையாகக்கிடக்கு. உன்ர அண்ணன்மார் இரண்டுபேரும் தாங்கள் தாங்கள் ஆட்சிபிடிக்கிறதுக்கு போட்டி போடுகினம். என்னசெய்யிறதெண்டு தெரியேல்லை" வீட்டில இருக்கிற சனத்தை எழுப்பிறதுக்கு நிக்கினம். எழுப்பிப்போட்டு தாங்கள் ஆட்சி பிடிக்கிறதுக்கு சண்டை பிடிக்கினம். கடவுள் உனக்குகொரு பிள்ளையைக் கொடுக்காம விட்டிட்டான். உனக்கு ஒரு பிள்ளை இருந்துட்டா இந்தப் பிரச்சினையொன்றும் வராது வாய் ஓயாமல் சொல்லிமுடித்தார். வாசுவுக்கு தலை சுற்றியது. "அம்மா வீட்டில இருக்கிற ஆக்களையே இருக்கச்சொல்லுங்கோ" நாங்கள் அடுத்த விடுமுறைக்கு உங்கவருவம் தானே வந்து பாப்பம். அதுதான் தம்பி நல்லதப்பு. நீ வந்து என்னண்டாலும் செய்துபோட்டுப்போ" "எங்க மருமோள் இல்லையே" வாசு சற்று நேரம் யோசித்துவிட்டு "இல்லையம்மா அவா வெளியில போயிட்டா..." "ஆ ஆ அப்பசரி நான் பிறகு கதைக்கிறன் என்ன" கதைத்து முடித்துவிட்டு சோபியைப் பார்க்கின்றான். கதைத்தது எதுவும் கேட்காமல் வெளியில் அழுகையை அடக்கியபடி மனதுக்குள் அழுதவாறே அமர்ந்திருந்தாள். வாசு அருகில் சென்று அணைத்துக்கொண்டான். இன்றைய விஞ்ஞான மருத்துவமும் அவனது பிரச்சினைக்கு தீவுகாண முடியாமல் தோற்றுப்போனபின்பும் ஏதோ நம்பிக்கையில் இருவரும் இந்த உலகை மறக்கின்றனர். பதினைந்து வருடங்களுக்கு முன் பிரிந்த தனது தாய் மண்ணை... மிதிக்கப்போகிறேன் என்ற சந்தோசம் வாசுவுக்கு. தாய் மண்ணில் இருக்கும் உறவுகளுக்கு என்னென்ன அன்பளிப்பாகக் கொடுப்பது என்று பொருட்கள் எல்லாம் வாங்கிச் சேர்த்துக்கொண்டு ஆரம்பமானது தாய்மண் நோக்கிய பயணம்.

அவனது மேனியில் தாய் மண்ணின் வெயில் பட்டபோது அவனது உடல் பூரித்தது. புது உட்சாகம் போரால் சிதைவுபட்டு மீட்சிபெற முயற்சிக்கும் தாயக மண் அவனை அன்புடன் வரவேற்றது. வாசுவும் சோபியும் நீண்டநாள் பிரிந்த உறவுகளுடன் சேர்ந்து மகிழும்போது அவர்களது உடம்பில் புது இரத்தம் பாய்ந் தது. ஒவ்வொரு வேளையும் ஒவ் வொரு வீட்டில் வாசுவுக்கும் சோபிக்கும் விருந்து. அவர்களது அன்பில், அரவணைப்பில் இருவரும் திக்கு முக்காடினார்கள். வஞ்சனையற்ற இந்த உள்ளங்களின் பெருந்தன்மையைக்கண்டு சொக்கிப் போனார்கள். இப்படியே ஒருமாத காலம் கடந்துவிட்டது. வழமைபோல் தான் அன்றும் விடிந்தது. சோபி தலை வலிப்பதுபோல் உணர்ந்து கொண்டாள். வாந்தியும் எடுத்துக் கொண்டாள் வாசுவின் தாய்க்கு ஏதோ சந்தேகம் ஏற்பட்டிருக்கவேண்டும்! உடனடியாக மருத்துவமனைக்கு சோபியை அழைத்துச்சென்றாள் மனதுக்குள் அப்படித்தான் அமைய வேண்டும் என ஆசை. வேண்டுதலை அடிக்கடி மனம் நினைத்துக்கொண்டாள். என்ன ஆச்சரியம் எல்லோரும் ஆசைப் பட்டதுபோல் சோபி தாயாகப் போகி றாள் என்பதை அந்த வைத்தியர் அறிவித்தார். அப்போது வாசு, சோபி உறவினர்களுடைய முகத்தில் ஏற்பட்ட மலர்ச்சியை வார்த்தைகளால் வர்ணிக்கமுடியாது. சோபி வாசுவை கட்டியணைத்து அழுதாள் அது ஆனந்த அழுகை. மகிழ்ச்சியுடன் வைத்தியரைச் சந்தித்தான். "எப்படி டொக்ரர் இவ்வளவு காலமும் சாத்திய மில்லாமல் போனது. இப்ப...?' வாசு கேட்டான்.

டொக்ரர் அவனது ஆதங்கத்தைப் புரிந்துகொண்டு "உயிரினங்களின் இன விருத்தியில் சூழல் வெப்பநிலை என்பது பெரும் செல்வாக்குச் செலுத்துகின்றது. இன விருத்திக்கு குறிப்பிட்டளவு வெப்பநிலை தேவைப்படுகிறது. எனவே தான் உம்மால் வெப்பமான சூழலில் வீரியமான விந்தணுக்களை உற்பத்தி செய்ய முடிந்திருக்கிறது" விளக்கினார் டொக்டர். வாசு மகிழ்ச்சி அதிர்ச்சியால் தொடர்ந்து பேசமுடியவில்லை. தனது தாய்மண்ணிற்கு இப்படியொரு புனிதம் உள்ளது என்பதை உணர்ந்து மகிழ்ந்தான். •

# இலக்கியப்பகிர்வு

# "மல்லிகை" ஆண்டு மலரின் கதைகள்

இணுவையூர்
சிதம்பர திருச்செந்திநாதன



**"ஆடுதல் பாடுதல் சித்திரம் கவி யாதியினைய கலைகளில் உள்ளம் ஈடுபட்டென்றும் நடப்பவர் பிறர் ஈன நிலை கண்டு துள்ளுவர்"**

என்ற மகுடவாசகத்துடன் வெளியாகும் மல்லிகையின் நாற்பதாவது ஆண்டு மலர் கடந்த சனவரியில் வெளிவந்துள்ளது. நீண்ட இலக்கியப் பாரம்பரியத்தை உடைய டொமினிக் ஜீவா அவர்களை ஆசிரியராகக் கொண்ட மல்லிகையின் இலக்கியச் செயற்பாடு ஈழத்தைப் பொறுத்தவரை முக்கியமானது.

"பல்வேறு கட்டங்களில் பலரால் நான் புரிந்துகொள்ளப் படாமல் இருந்த அந்தக் காலத்தில் என்னையும் எனது ஆத்ம உணர்வுகளையும் அர்ப்பணிப்பு உழைப்பையும் தெளிவாக விளங்கிக்கொண்டு என்னை இலக்கிய உலகில் நிமிர்ந்து நின்று செயலாற்றப் பக்க பலமாகத் திகழ்ந்த சகல பல்கலைக்கழக அறிவு ஜீவிகளுக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் எனது மனசு நிறைந்த நன்றிகளைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

பல்வேறு வகைப்பட்ட துறை சார்ந்தவர்கள் மல்லிகையைத் தமது எழுத்தின் மூலம் செழுமையூட்டித் தரப்படுத்தினர் அவர்கள் அத்தனை பேர்களையும் நன்றிப் பெருக்குடன் நினைத்துப் பார்க்கின்றேன்.

பலர் இன்று மறைந்து போயிருக்கலாம். வேறு சிலர் ஒதுங்கியிருக்கலாம். இன்னுஞ்சிலரோ கருத்து முரண்பாட்டாலும் அபிப்பிராய பேதங்காரணமாகவும் தூரத்தூர விலகிப் போயிருக்கலாம். ஆனால் மல்லிகை மூலம் அவர்கள் ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்குச் செய்து உதவிய காத்திரமான பங்களிப்புப் பின்னொரு காலத்தில் விதந்து பேசப்படத்தக்கதாக அவர்கள் என்னுடன் ஒத்துழைத்தனர். அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்"

என நாற்பது ஆண்டுகளும் நாமும் என்ற தலைப்பில் ஆசிரியர் டொமினிக் ஜீவா கருத்துத் தெரிவித்திருக்கின்றார்.

ஈழத்து இலக்கிய வரலாற்றில் டொமினிக் ஜீவா அவர்களுக்கு தனித்த ஒரு இடம் உண்டு. அரசியல் காரணங்களுக்காக அவருடன் முரண்பட்டவர்கள் கூட அவரது நட்புக்கும் மதிப்புக்கும் உரியவர்களாக உள்ளனர்.

அதேவேளை ஜீவா கணிசமான இலக்கியப்படைப்பாளிகள் ஈழத்திலே உருவாகக்காரணமாக இருந்தார் என்பது மட்டுமல்ல அவர்களை இன்றைக்கும் களம் தந்து வளர்த்து வருகின்றார்.

இதுதவிர "மல்லிகைப் பந்தல்" என்ற வெளியீட்டு நிறுவனத்தை உருவாக்கி ஈழத்துப் படைப்பாளிகளின் நூல்கள் கிரமமான முறையில் வெளிவரவும் காரணமாக உள்ளார் என்பதும் கவனம் கொள்ளக் கூடிய ஒரு செயற்பாடாகும்.

ஈழத்து இலக்கியப் படைப்பாளிகளுக்கு ஒரு முக்கியமான களமாக செயற்படும் மல்லிகை தமிழ் இலக்கிய உலகில் ஒரு குறிப்பிடத்தக்க சாதனையையும் தன்னுள்ளே வைத்துள்ளது.

முளைத்து மூன்று நான்கு அரும்புகளைக் கண்ட பின்பு அழிந்து போய் விடுகின்ற இலக்கிய சிற்றேட்டு வரவாற்றிலே நாற்பது ஆண்டுகாலமாக தொடர்ச்சியாக மல்லிகை வெளிவந்துகொண்டு இருக்கின்றது.

உயரிய இலக்கியம், உன்னத இலக்கியம் என்று கதைத்துக் கதைத்து அரைத்து அரைத்து ஒரு தடத்தில் நின்று உழன்ற படி சரக்குகள் இல்லாத பெருங்காய டப்பாக்களாக பலர் இருக்கும் சூழ் நிலையில் தொடர்ச்சியாக செயலாற்றி வரும் அவரின் செயற்பாடு கணிப்புக்கு உரியது.

மல்லிகையின் ஆண்டு மலர் நூற்றி எழுபத்தியாறு பக்கங்களில் வெளிவந்துள்ளது. ஓவியம், பக்க அமைப்பு, அச்சு போன்றவற்றில் அதிக கவனம் எடுத்திருப்பதும் குறிப்பிடத்தக்க விடயங்களாகும்.

இந்த மலரின் இலக்கிய படைப்பாளிகளின் பல்வேறு அனுபவங்கள், கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள் போன்றவை உள்ளன.




எனினும் எல்லாவற்றையும் ஒருங்கு சேரப்பார்ப்பது சிரமமாக இருப்பதால் மல்லிகை ஆண்டு மலரில் வெளியான சில சிறுகதைகள் குறித்து கருத்துக்களை பரிமாறிக் கொள்ளலாம் என நினைக்கின்றேன்.

வழமை போலவே பலர் மல்லிகையில் எழுதியுள்ள அதே வேளை வழக்கமாக மலரில் எழுதும் பலர் எழுதாமலும் உள்ளனர்.

தெணியான், மு.பஷீர், குந்தவை, சி.சுதந்திரராஜா, க.சட்டநாதன், அருண் விஜயராணி, செங்கை ஆழியான், சாந்தன், அன்னலட்சுமி, இராஜதுரை, முருக பூபதி, ச.முருகானந்தன் போன்ற நீண்ட கால எழுத்து அனுபவம் கொண்டவர்கள் கதைகளைப் படைத்துள்ளனர். இது தவிர மார்ட்டின் விக்கிரமசிங்க அவர்களின் சிங்கள கதை ஒன்று குஷ்வந்த்சிங் அவர்களின் கதை ஒன்றும் மொழிமாற்றம் செய்யப்பட்டு பிரசுரமாகியுள்ளன.

புதியவர்கள் யாரும் எழுதாத படியால் புதுவீச்சுள்ள எழுத்துக்கள்- சிறுகதைகள் இல்லாதுள்ளது. சமீபகாலமாக புதிய எழுத்தாளர்களின் வருகையும் எழுச்சியும் தடைப்பட்டு உள்ளது போல தோன்றுகிறது. அதன் தாக்கம் தான் மல்லிகை மலரில் வெளிப்படுவதாகப் படுகின்றது.

தெணியானின் "தீண்டத்தகாதவர்" கதை காலங்காலமாகப் பேசப்பட்டும் இப்போதும் மறைபொருளாக உள்ள ஒரு விடயத்தைப் பற்றிப் பேசும் கதை. கதை சொல்லும் பாணி வழமையானதாக இருக்கின்றது.

மு.பஷீரின் "பொறி" சிறுகதைத் தொழில் தேடி அரசு நாடுகளுக்கு போய் அவலப்படும் இளைஞர்களின் கதையினைச் சொல்கிறது.

குந்தவை எழுதிய "நாடும் நம் மக்களும்" என்ற சிறுகதை சொல்ல வருவது என்ன?

"எனக்கென்னவோ இப்படியே எங்களை எல்லாம் முந்தியே பழக விட்டிருந்தா ஆளை ஆள் மதிக்க வேணுமெண்டு சொல்லிக் குடுத்திருந்தா எங்களுக்குள்ள இந்தச் சண்டையே வந்திராது. எங்கட நாடும் இப்படி அழிஞ்சு போய் கிடவாது எண்டு படுகுது."

என்று சொல்ல வருவதன் ஊடாக குந்தவை என்ன சொல்ல முற்படுகின்றார். சிங்களவர்கள் தமிழர்களுக்கான "நட்புறவுப் பாலங்கள், முகாம்கள் மூலமாகவோ திருமண பந்தங்கள் மூலமாகவோ- தமிழராக ஒரு வெளிநாட்டு அமைச்சரை அல்லது வேறு உயர் பதவிக்கு தமிழரை நியமிப்பதால் கொழுந்து விட்டு எரியச் செய்யப்பட்டிருக்கும் ஈழத்தமிழரின் தேசியப் பிரச்சினையைத் தீர்க்க முடியுமாயின் எவ்வளவு நல்லது. ஆனால் அது இயல்பானதா? உண்மையானதா?

தமிழர்கள் பிரச்சினை நியாயமான முறையில் தீர்க்கப்பட்டு சட்டங்களாகி அது மதிக்கப்பட வேண்டும். அதுதான் யதார்த்தமானது.

மற்றப்படி நட்புறவுப் பாலமும், ஏனைய நடவடிக்கைகளுக்கும் கதைகளுக்கும் சினிமாவுக்கும் மாத்திரமே நல்லாய் இருக்கும்.

நாடு அழிந்ததற்கு இரண்டு இனங்களும் மனம் விட்டு பழகாமை மாத்திரமா காரணம் சேர்.பொன் இராமநாதனை சிங்களத்தலைவர்கள் தேரில் வைத்து இழுத்தார்களே- பிறகு என்ன செய்தார்கள்.

உண்மையில் சிங்கள மக்களும், தமிழ்மக்களும் நட்புறவுடன் பழகத்தான் வேண்டும். ஆனால் அந்த நட்பு மாத்திரம் தமிழ் மக்களின் உரிமைகளைப் பாதுகாக்க முடியாது என்பதை நாம் எப்போது உணரப் போகின்றோம்.

சட்டநாதனின் "பொழுது" சிறுகதை அவருடைய வழக்கமான பாணியில் நகர்ந்து செல்கிறது எனினும் சில நெருடல்கள் உள்ளன.

இந்த நெருடல்களை அவர் நாசுக்காகக் கையாண்டு இருந்தால் நன்றாக இருக்கும். நல்ல படைப்பாளியான சட்டநாதன் அவர்கள் இப்படி சில ஆபாச சங்கதிகளை தனது கதைகளில் சேர்ப்பது எந்த விதத்தில் நியாயமோ தெரியாது. அவரது செயற்பாட்டில் கடைசியில் துருத்திக் கொண்டு நிற்பது இந்தச் சங்கதிகள் தான்.

தமிழகத்து சிற்றேடுகளில் வெளிகளில் இத்தகைய தில்லு முல்லு கதைகளே பிரதானப்பட்டாலும் அதனை நாங்கள் செய்வதா?

செங்கையாழியான் அவர்களின் "குந்தியிருக்க ஒரு குடி நிலம்" கதை தீரா நதியிலும் வெளியானது. கதை நாயகனின் மன எழுச்சி இயல்பானது. எனினும் "சமாதானம் யாழ்ப்பாணத்தில் வாழுறவைக்கு வந்திருக்கும், வன்னியில இருக்கிறவைக்கு வந்திருக்கும். எங்களுக்கல்ல. வலிகாமம் வடக்குக் காரர்களுக்கல்ல, அகதி முகாம்களில வாழுகிற எங்களைப் போன்ற பரதேசிகளுக்கல்ல" என்று சொல்வது எவ்வளவு தூரம் பொருத்தமானது.

இராஜதுரையின் மன உணர்வுக்கும் வேகமும் நியாயமானது தான். எனினும் கதையின் போக்கு வலிந்து எழுதப்பட்டது போல உள்ளது.

அருண் விஜயராணியின் கதைகூட அவரது வழக்கமான சிறுகதைகள் போல அல்ல. இதுவும் ஒரு வகை செயற்கை பொருந்தியதாக இயல்பாக இல்லாதது போல உள்ளது.

சாந்தனின் மயிலுச்சாமி கோயில் கதை அவரது இயல்பான திறமையுடன் நகர்த்தப்படுகிறது. ஒரு சிறிய விடயத்தைக் கூட ஆற்றல் உள்ள எழுத்து நடையில் சிறப்பாகச் செய்ய முடியும் என்பதை சாந்தன் நிரூபித்துள்ளார்.

## உயிரினில் கலந்து

மனசுக்குள்
எப்படி எப்போதுதான்
நுழைந்தாய்.
மனசிலிருந்து விரட்டலாமென்றால்
உயிரோடு அல்லவா
கலந்துவிட்டாய்.
இருட்டுக்கும்
பூச்சி புழுவுக்கும்
பயந்திருந்தேன்.
புயலையும் பூகம்பத்தையும்
எதிர்த்து நிற்கும்.
பலத்தையும் தந்தாய்.
ஏன் பிறந்தேன்
ஏன் நான் இந்தப் பிறவியென்று
எப்போதும் நினைப்பேன்.
உனை ஏற்றதும்
உயிருடன் கலந்ததும்
உண்மை புரிந்தது.
இது தான் உலகம்
இவ்வளவுதான் வாழ்க்கை
என்றிருந்தேன்.
எந்தன் நினைப்பின் எல்லைக்கும்
விழிதொடும் தூரத்துக்கப்பாலும்
வாழ்வு உண்டென்பதையும்
வாழ்வின் உச்சத்தையும்
கண்டுணர வைத்தாய்.

எங்கு ஓடினும்
எங்கு பறந்தாலும்
பிரிகிறேன் என்று சென்றாலும்
விடைபெறும் மூச்சதும்
விட்டுச் செல்லும் உடலதும்
புதைக்கும் மடியதும் உன்னதே.
எப்படி எனை நீயும்
உனை நானும்
பிரியமுடியும்.
எனைத்தாங்கிய வயிறும்
நான் சுவாசித்த முதல் காற்றும்
தேற்றரவாய் தாங்கிய தோளும்
வாய் உதிரும் வார்த்தையும்
உன் மடியில் நான் பெற்றவையே.
அத்தனைக்கும் மேலாய்
எங்கள் முகவரியையும்
அந்த முகவரியின் தாய் மடியையும்
தாங்கிடும் பெரும் "தேவன்"
அவன் வாங்கிடும் மூச்சிலும்
அழகு "தமிழே" நீயேயிருக்கிறாய்.
பின் எப்படி
உன்னை நாமும்
எம்மை நீயும் பிரிக்கமுடியும்
அது உயிருடன் கலந்த உறவு
உடலுக்கு உணர்வைத்
தூண்டிடும் "மூச்சு"

உயிரில் கலந்த உறவே
உன்னால்
எமக்கெல்லாம் உயர்வு.
உன்னைப் பிரிந்தால்
அன்றே எம் சாவு.

அ.அன்ரனி




## சிந்தனைத் துளிகள்

நற்பண்புகளை குழந்தைகளுக்கு ஊட்டுவதன் மூலம் அப்பண்புகளை வாழையடி வாழையாக ஊன்றச் செய்யலாம்.

★ ★ ★

உள்ளதை இல்லை என்று சொல்வது பாசாங்கு. அதுபோல் இல்லாததை உண்டு என்று சொல்வதும் பம்மாத்து. இரண்டுமே உண்மை நிலைக்கு முரணானது.

★ ★ ★

நெஞ்சில் மனவுறுதியும் தெளிவான சிந்தனையும் உதட்டில் புன்னகையும் வேண்டும்.

*தி. புஸ்பராஜா,*
*தி. இ. க. ச. ஸ்ரீகோணேஸ்வரா இந்துக்கல்லூரி.*

# மின்மினிப் பூச்சிகள்

ஒளியில்லாவிட்டால் உயிரினங்கள் இல்லை. உயிர்வாழ, உணவை உண்டாக்க, தேட, வாழ்க்கை நடத்த எல்லாவற்றிற்கும் ஒளி தேவை. இதனால்தானோ என்னவோ சில. பூச்சிகள் மீனினங்கள் ஒளியைத் தங்கள் உடலிலேயே உண்டாக்கிக்கொள்கின்றன. இந்த ஒளி பச்சை, நீலம், சிவப்பு அல்லது மஞ்சள் நிறத்திலிருக்கும்.

மின்மினிப் பூச்சியும் இத்தகையதுதான். மஞ்சள், நீலம், மஞ்சள் என்று விட்டு விட்டு ஒளி வீசும். ஒளி வெட்டுப் பூச்சிகள். இது 13மி.மீ முதல் 19மி.மீ நீளம் உடையது. வெளிர்



சாம்பல், கறுப்பு அல்லது பழுப்பு நிறமுடையது. சில வற்றின் தலையில் பிரகாசமான மஞ்சள் அல்லது ஒரேஞ்சு புள்ளிகள் இருக்கும். சில இனங்களில் பெண் பூச்சிக்கு இறக்கைகள் மிகச் சிறியதாக இருக்கும் அல்லது இருக்கவே இருக் காது. உலகமெங்கும் பரவ லாகக்காணப் படும்.ஒருசில இனங்களின் உணவு மெல்லுடலிகள் ஆனால் பெரும்பாலானவைகளில் வளர்ந்த பூச்சிகள் இரையே எடுக்காது.

ஒளி வீசுவது என்பது இனச்சேர்க்கைக்கு அழைக்கும். 'ஒளி சைகை' தான் ஆண் பூச்சி தரையிலிருந்து 60செ.மீ உயரத்தில் பறந்து விட்டுவிட்டு ஒளி வீசுகிறது. இரண்டு, மூன்று நொடிகளுக்குப் பிறகு அதே இனத்தைச் சேர்ந்த பெண் பூச்சி இதற்குப் 'பதிலொளி' சிந்தி சம்மதம் தெரிவிக்கிறது. மாலை வேளையிலேயே இந்த 'காதலொளி கருத்துப் பரிமாற்றம்' நடைபெறுகிறது.

இந்தப் பூச்சியின் அடிவயிற்றின் பிற்பகுதியிலேயே ஒளி உற்பத்திசெய்யும் உறுப்பமைவு உள்ளது. அதாவது ஒருவகை கலங்கள் இதில் லூசிபெரின் எனும் கொழுப்புப்பொருள் உள்ளது. காற்றுக் குழல் வழியாக வரும் ஒட்சிசன் ஒளிதருகலத்திலுள்ள லூசிபெரினுடன் சேரும்போது வேதிவினைச்செயல், லூசிபேரேஸ் என்ற நொதியின் உதவியுடன் நடைபெறுகிறது. இதன் விளைவாக ஆக்ஸி-லூசிபெரின் எனும் ஒட்சைட்டு உருவாகிறது. இந்த ஒட்சைட்டுதான் ஒளியைத் தருவது. இந்த ஒளிதரும் கலம் அடுக்கின் பின்னாலுள்ள கலம் அடுக்குக் கண்ணாடி போல் இந்த ஒளியைப் பிரதிபலிக்கச் செய்வதால் பச்சையும் மஞ்சளுமான ஒளி கிடைக்கிறது.

மின்மினிப் பூச்சியின் ஒளியை 'குளிரொளி' என்று குறிப்பிடுவதுண்டு. ஏனெனில் இந்த ஆற்றல் வெப்பமாக விரையமாவதில்லை. நமது விளக்குகளில் ஒளியாற்றலில் பெரும்பகுதி வெப்ப ஆற்றலாக விரயமாகிவிடுகிறது.

பெண் பூச்சி ஒருமுறையில் 15 முதல் 150 முதல் முட்டைகள் வரை இடும்.பத்து நாட்களில் முட்டைகளிலிருந்து இளரிகள் வெளிவரும். இவற்றின் உணவு சிறிய உயிரினங்கள். இளரிகள் தனது வாயுறுப்பு மூலமாக இரையின் உடலிலுள்ள சில செரிமான நொதிகளைச் செலுத்தி அவற்றின் திசுக்களை உறிஞ்சி உண்ணுகின்றது. மூன்று மாதங்கள் இம்மாதிரி இரையுண்டபின் மண்ணுக்கடியில் முட்டைப்புழு பருவத்தைத் தொடங்குகிறது.

இரவுப் பூச்சிகளான இவற்றில் பைரோபோரஸ் என்ற வகையின் ஒளிமேலே பச்சையும் கீழே ஒரேஞ்சு நிறமும் கொண்டது. ஒரேஞ்சு நிற ஒளியை வீசுவது போட்டினஸ் பைராலிஸ் மஞ்சள், ஒளி வீசுவது. போட்டிரஸ் பென்சில்வேனிசு, போட்டிரஸ் லூசிபெர்ன்ஸ் சிவப்பொளி வீசும். தென்அமெரிக்காவில் காணப்படும் ஒரு பூச்சியினம் ரயில்வே கைகாட்டி விளக்குபோல தலையிலே சிவப்பொளியும் இருபக்கமும் மஞ்சளும் பச்சையுமாக ஒளிவீசுமாம்.

நியூசிலாந்து மின்மினிப் பூச்சியோ பட்டுநூல் போல வலையைப் பின்னிக்கொண்டு தன் ஒளி மூலம் இரைகளை அந்த வலையில் விழுமாறு செய்து பிடித்துண்ணுகிறது. மேற்கிந்தியத் தீவில் காணப்படும் ஒருவகை ராட்சத மின்மினிப் பூச்சியின் ஒளிதான் மிக அதிக பிரகாசமுடையது. இத்தகைய பூச்சி ஒன்றின் ஒளியை கொண்டு புத்தகங்கள் கூடப் படிக்கலாமாம்.

## சொற்சிலம்பம் - 82

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ண | ப் | ந | சி | ன் | லை | தீ |
| டு | கு | நீ | பா | ந் | மி | வு |
| தி | லா | தி | கோ | னி | ணி | ல் |
| து | அ | பி | ரி | ரோ | சீ | ச் |
| மே | ட் | தா | ஷ் | ர் | ரி | றி |
| நை | ப் | யா | சா | ஸ் | ரு | ம |
| அ | ல் | ரே | ஓ | கி | த் | ரா |

கட்டங்களில் காணப்படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பி வையுங்கள்.

## சொற்சிலம்பம் - 80 இன் விடைகள்

01. திருகோணமலை.

02. யசீர் அரபாத்.

## சொற்சிலம்பம் - 80 இன் பரிசுக்குரியவர்

ர.ஜெகதீபன்,
யா/அல்லைப்பிட்டி,
பராசக்திவித்தியாலயம்,
அல்லைப்பிட்டி.

## சொற்சிலம்பம் - 80 இன் பாராட்டுக்குரியவர்கள்

01. பா.தமிழினி, அல்லைப்பிட்டி, யாழ்ப்பாணம்.
02. ஞ.சுஜாதா, வீ.இ.49/3 சிதம்பரபுரம் வவுனியா.
03. அ.வள்ளி, தண்ணீரூற்று மேற்கு, முள்ளியவளை.
04. மனோ-கிஷாலினி, பிரதான வீதி, புதுக்குடியிருப்பு.
05. தங்கராசா-கோகுலன், இல:169 சேவிஸ் வீதி, கனகாம்பிகைக்குளம், கிளிநொச்சி.
06. S.தனு, உதயநகர் மேற்கு, கிளிநொச்சி.
07. சி.சுஜிதன், புளியங்குளம்.
08. R.இந்துஜா, 2ஆம் வட்டாரம், அல்லைப்பிட்டி.

01. இலங்கையில் வெந்நீர் ஊற்றுக் காணப்படும் இடம்?

01) ....................................

02. உலகில் மிக நீண்ட ஆறு?

01) ....................................

பெயர் :- ....................................


முகவரி :- ....................................

....................................

*சொற்சிலம்பம்-82*
*ஈழநாதம்.*
*யாழ்சாலை.*
*கிளிநொச்சி.*

# காட்டில் ஒரு கால்பந்துப் போட்டி

பகுதி-01



# வீடு

பிரச்சினைகள் இல்லாத வாழ்க்கையே இல்லை எனலாம். எந்த மனிதன் நெஞ்சுக்குள் காயம் இல்லைச் சொல்லுங்கள்? பிரச்சினைகள் அழுத்தும்போது நம்மில் பலர் கவலை கொள்கிறோம். அன்றாடம் தோன்றும் பிரச்சினைகள் எமது இயல்பு நிலையைக் கலைத்து விடுகிறது. ஆனந்த மயமான சூழ்நிலையில் கூட உங்களால் சில வேளைகளில் கல கலப்பான அந்த சூழ்நிலையுடன் ஒட்டியும் ஒட்டாமலும் ஈடுபாடற்றவராக இருக்கின்ற வேளைகள் ஏற்படுகிறதல்லவா? இதற்கெல்லாம் காரணம் நம் மனதை ஏதோ ஒரு பிரச்சினை அழுத்துகிறது என்பதுதான்.

நேரடியாகப் பிரச்சினைகளால் பாதிக்கப்படுவது ஒரு புறமிருக்க, நமக்குப் பிரச்சினை ஏற்பட்டுள்ளதே என்றெண்ணி உளரீதியாகப் பாதிப்படையும்போதே தாக்கம் இன்னமும் ஒரு படி கூடுதலாக அழுத்துகிறது.

பிரச்சினைகள் என்பது உள நெருடல்

## பிரச்சினைகளும் கவலைகளும்

காரணமாகவோ உடல் உபாதை காரணமாகவோ, புறச் சூழ்நிலைகள் பொருளாதாரம், முரண்பாடு என்பவற்றாலோ ஏற்படலாம். நம்வாழ்வில் ஏற்படும் சரிவுகள், தோல்விகள் என்பனவும் பிரச்சினையாகிவிடுகின்றன. பிரச்சினையின் வடிவம் எதுவாயினும் அதை எவ்வாறு துணிச்சலுடன் எதிர்கொள்கிறோம் என்பதில்தான் அவை கவலையாக உருவெடுக்காமை தங்கியுள்ளது. ஒவ்வொரு மனிதனின் பிரச்சினையின் வடிவமும் மாறுபட்டிருக்கும். சில வேளைகளில் எதிர்பாராத விதத்திலோ, திட்டமிட்டுத் தவிர்க்க முடியாத தடத்திலோ பிரச்சினைகள் உருவாகலாம். நாசயுத்த மற்றும் சுனாமி அனர்த்தங்கள் இதற்கு உதாரணம்.

தனிமனித பிரச்சினைகள், அவர்களின் குணாதிசயங்களோடு தொடர்புடையன. ஒருவருக்குப் பிரச்சினையாக தோன்றும் விடயம், இன்னொருவருக்குப் பிரச்சினையாகத் தோன்றுவதில்லை. தனிமனித பிரச்சினைகளை தன்னம்பிக்கையினாலும், விவேகத்தினாலும், நிதானத்தினாலும் கட்டுப்படுத்தப்படலாம்.

பகைவர்களால் மட்டுமல்ல, உறவுகளாலும் நண்பர்களாலும் கூட பிரச்சினைகள் ஏற்படலாம். புரிந்துணர்வு இன்மையால் கணவன் மனைவியிடையே கூட பிரச்சினைகள் ஏற்படலாம். நமது தவறான செயற்பாடுகளும், அணுகுமுறைகளும் கூட பிரச்சினைகளுக்கு வித்திடுகின்றன. சந்தேகம் என்பது பல இடங்களில் பிரச்சினையை உருவாக்குகிறது.

பிரச்சினைகளில் சிக்கித் தவிக்கும் நாம் கவலையில் மூழ்கிவிடுகிறோம். இதனால் நமது மூளை திடமாக சிந்திக்கும் தன்மையை இழந்துவிடுகிறது. பிரச்சினைக்கான தீர்வும் எட்டிப் போய்விடுகிறது. எனவே எந்தப் பிரச்சினையிலும் நாம் கலக்கமடையக் கூடாது. நிதானமாகச் சிந்தித்து பிரச்சினையிலிருந்து விடுபட முயல வேண்டும். எமக்கு ஏற்பட்ட ஒரு பிரச்சினை குறித்து நாம் ஏதேனும் ஒரு முடிவுக்கு வரும்வரை நம்மால் இயல்பு நிலையை மீள அடைவது சிரமம். அதுவரை நாம் கவலையோடு இருப்பதால் நமது செயற்பாடுகளும் முடங்கிப்போய்விடுகின்றன.

பல பிரச்சினைகள் ஒரு எதிர்பார்ப்பை அடிப்படையாகக் கொண்டதாகவே இருக்கும். இதனால் ஏற்படும் கவலைகள் நீடிக்கும்போது மனநிலை பாதிக்கப்படுகிறது. பிரச்சினைகளும் கவலைகளும் ஒரு தனிமனிதனைத் தொடர்ந்து பீடித்திருக்குமானால் அது மனச் சிதைவுக்கே வித்திடும். இதனால்தான் கவலைகள் கிடக்கட்டும் மறந்துவிடு, காரியம் நடக்கட்டும் எழுந்துவிடு என ஒரு கவிஞர் குறிப்பிடுகிறார். உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதும் மனம் கலங்கக்கூடாது.



பிரச்சினைகளிலிருந்து மீண்டு வாழ்க்கையை வசந்தமாக்கிட பல வழிகள் இருக்கின்றன. வாழ நினைத்தால் வாழலாம். வழியா இல்லை பூமியில்? வாழ்க்கையை மாறுபட்ட முறையில் அணுகி ஆனந்தமாக இருப்பதற்கான வழிகளைச் சிந்திப்பதன் மூலமாகவும், செயற்படுவதன் மூலமாகவும், பிறரோடு மனம்விட்டு உரையாடுவதன் மூலமாகவும், உளவளத் துணை பெறுவதன் மூலமும் பிரச்சினைகளிலிருந்தும், கவலைகளிலிருந்தும் விடுபட்டு இயல்பு நிலையெய்தி ஆனந்தமாக வாழமுடியும்.

தாயும் நல்ல நண்பனும் அன்பு மனைவியுமே ஒருவனின் பிரச்சினைகளைத் தீர்க்கும் மனநோய் வைத்தியர்கள் என்று சொல்வார்கள். யதார்த்தத்தில் இது சிலருக்கு மாறுபாடாக அமைந்துவிடுவதும் உண்டு. எது எப்படியோ நடைமுறையில் செய்யும் மாற்றமும் மனப் பகிர்வும் முக்கியமானவை.

ஒரு குறிப்பிட்ட பிரச்சினை கவலையை ஏற்படுத்தும்போது அதிலிருந்து மீள்வதற்கு அவர் முதலில் கண்டறியவேண்டியது பிரச்சினைக்கான மூலகாரணத்தையாகும். இக்காரணம் சரியாக இனம் காணப்பட்டால் இதைக் களைய அல்லது மாற்ற உரிய நடவடிக்கையில் இறங்க வேண்டும். சரியாக மதிப்பிட்டு சரியான தீர்வு வழியைக் காணவேண்டும். ஒரு செயல்முறை குறித்த பன்முறைக் கண்ணோட்டம், இத்தீர்வை எட்ட அவசியமாகும்.

ஒவ்வொரு காரியத்திற்கு முன்னரும் நிதானமாக தூரநோக்கோடு சிந்தித்துச் செயற்பட்டால் பிரச்சினைகளும் கவலைகளும் எம்மை நெருங்கமாட்டாது.

**ச.முருகானந்தன்**

## ஒதுக்குதல் வேண்டாம்

பச்சைக் குழந்தை பிறந்து சில வாரங்களேயான குழந்தை. மென்மையாக மெதுவாக அழுகிறது. இதோ வந்திட்டேன் செல்லம். கண்ணு என்று தாய் வந்து தூக்கி அணைத்துக் கொண்டதும்அழுகை நின்று விடும். பாலுக்காக அழுத அந்தக் குழந்தை அன்னையின் அணைப்பிலே அந்த சுகத்திலே பாலைக் கூட மறந்து விடலாம். இதற்கு விதிவிலக்காக அழும் குழந்தைகளும் இருக்கலாம். ஏதாவது நோயோ இடமாற்றமோ அல்லது கொஞ்சம் பிடிவாதமோ அதையும் தாயால் அறிந்துகொள்ள முடியும்.

இப்படி அன்புடன் ஆதரவுடன் வளரும் குழந்தை பள்ளிப்பருவமடைந்து பள்ளிக்கூடம் போகும்போது முதல் நாள் கொஞ்சம் பிரச்சினை சில குழந்தைகள் என்னவோ அலட்சியமாக அஞ்சாமல் மற்றக் குழந்தைகளுடன் சேர்ந்து விடலாம். பெரும்பாலும் ஒரு வித பயங்கரமான நிலைதான் குழந்தைக்கு. ஆசிரியர் தன் மலர்ச்சிரிப்பால் வருடும் வார்த்தைகளால் பயம் நீக்கி சகஜமான நிலைக்குக் கொண்டு வந்து விடுவார். பெண் ஆசிரியை என்றால் சொல்ல வேண்டியதில்லை.

பள்ளியிலும் சரி வீட்டிலும் சரி தாழ்வு மனப் பான்மை பிள்ளைகளுக்கு ஏற்படவே கூடாது. இறைவன் படைப்பில் எல்லாரும் ஒரே மாதிரி இருப்பதில்லை. உருவத்திலும் சரி திறமையிலும் சரி வேறு பட்டிருக்கலாம். அழகான கவர்ச்சியான பிள்ளைகளை பொதுவாக எல்லாருமே விரும்பலாம் அதே போன்றதுதான் திறமையுடைய குழந்தைகளும். ஆனால் பெற்றாரோ. ஆசிரியரோ



இவர்களிடம் பாகுபாடு காட்டுதல் நல்லதல்ல. எல்லாரிடமும் ஒரே சீரான அன்பை காட்ட வேண்டும்.

இன்னும் கொஞ்சம் வளர்ந்து கிட்டிப்புள் அடித்தல் கிளிக்கோடு இப்படி என்னென்னவோ விளையாட்டுகள். ஒரு கூட்டம் சிறுவர் சிறுமியர் என்றால் அவர்களுக்கேற்ற விளையாட்டு. இந்த விளையாட்டு நேரத்திலும் கொஞ்சம் பயந்த சிறுவர் சிறுமியரை ஒதுக்கி விடுவார் கள். ஆசிரியர்களின் மேற்பார்வையில் என்றால் பிரச்சினை ஏற்படாது.

எல்லோருடனும் அன்பாகப்பழகி சேர்ந்து வாழ பெற்றவர்களும் ஆசிரியர்களும் அண்டி உள்ளவர்களும் வழிகாட்ட வேண்டும். அதனால் அன்புவளரும் பொறுமை. சாந்தம். தன்னலமற்ற தன்மைகள். ஒற்றுமை வளரும்.

முதியோர்கள் வாழ்வின் எல்லைக் கோட்டுக்கு வந்து விட்டவர்கள். எம்மால் எதுவும் முடியாது என்ற ஏக்கம் தம்மை ஒதுக்குகிறார்களே என்ற தாக்கம் இவர்களிடம் நாம் அன்பாக பழகுவதுடன் நம் குழந்தைகளும் அன்பாய் பழக வேண்டும்.

நோயாளிகள் நோயுடன் போராடி அவதிப்படும் போது அல்லல் படும் போது அவர்களை சீறிச் சினந்து கோபிப்பதால் பயனில்லை. நம் குழந்தைகளும் அவர்களிடம் அன்பாய் இருப்பார்கள்.

இந்த நிலையில் நம் பிள்ளைகள் பயிற்றப்பட்டால் நல்ல அன்பான அமைதியான சமூகத்தை உருவாக்க முடியும். துள்ளும் இளமையில் துடுக்குத்தனம் இருக்கும். அது தப்பல்ல. ஆணவம். அடக்கு முறை. கொடுமை. கோரமான செயல்கள் கொஞ்சமாவது குறையலாமல்லவா.

**ச.சுந்தரி**



## சமையல் குறிப்பு

### எலுமிச்சம்பழ ஊறுகாய

தேவையான பொருட்கள்.

| | |
|---|---|
| எலுமிச்சம் பழம் | -20 |
| செத்தல் மிளகாய்த்தூள் | -2 மே.க |
| மஞ்சட்தூள் | -2 தே.க |
| வெந்தயத்தூள் | -2 தே.க |
| உப்புத் தூள் | -5 தே.க |

செய்முறை:-

★ பத்து எலுமிச்சம் பழங்களைக் கழுவி ஈரமில்லாது உலர்த்திக் கொள்ளவும்.

பின் நீளப்பக்கமாக ஆறு சமபங்குகளாகப் பிளந்து ஒவ்வொரு பிளவுகளிலும் சேரும்படியாக உப்புத்தூளைத் தூவவும்.

★ பின் பழங்களை ஒரு கொள்கலனில் இட்டு இறுக்கமாக மூடி இரண்டு நாட்கள் வைக்கவும்.

★ இரண்டு நாட்களின் பின் பழங்களை எடுத்து வெயிலில் நன்றாக உலரும் வரை (ஒரு கிழமை வரை) காய வைக்கவும்.

★ நன்கு காய்ந்தபின் முன்னர் வைக்கப்பட்டிருந்த பாத்திரத்தில் இட்டு, மிகுதிப் பத்து எலுமிச்சம் பழங்களைக் கழுவி ஈரமில்லாது உலர்த்திய பின் வெட்டி வற்றலுட் பிழிந்து விடவும். (வற்றலின் மேலாகச் சாறு இருத்தல் வேண்டும்)

★ அத்துடன் மிளகாய், மஞ்சள், வெந்தயம், உப்புத் தூள்களையும் சேர்த்து நன்கு கலந்து மூடி வைக்கவும்.

(இடையிடையே கலவையை மேலும் கீழுமாகக் கலந்து கொள்ளவும்.)

## சமையல் செய்யும் போது கவனிக்கவேண்டியவை

*01. சோற்றை உவித்தல் முறையில் சமைத்தல். (கஞ்சி வடிக்காது சமைத்தல்.)*

*02. காய்கறிகளை கழுவிய பின் வெட்டுதல்.*

*03. காய்கறிகளை குறுனலாக வெட்டுதலைத் தவிர்த்தல்.*

*04. காய்கறிகளை வெட்டியவுடன் சமைத்தல்.*

*05. கீரைகளை மூடாது திறந்தபடி சமைத்தல் (பச்சை நிறத்தைப் பாதுகாக்க)*

*06. மரவள்ளிக் கிழங்கை மஞ்சள், உப்புச் சேர்த்து திறந்து அவித்தல்.*

*07. பருப்புவகை அவிக்கும் போதும், இட்லி, தோசை தயாரிக்கும் போதும் அப்பச் சோடா சேர்ப்பதை தவிர்த்தல். (காரணம் அப்பச்சோடா உணவில் உள்ள உயிர்ச்சத்து B யை அழித்து விடும்)*

*08. இறைசசியை மெல்லிய நெருப்பில் வேகவைத்தல் (இறைச்சி வலிக்காமல் இருப்பதற்கு)*

*வீடு பகுதியில் வெளிவரும் ஆக்கங்கள் தொடர்பாக உங்களது விமர்சனங்களை எதிர்பார்ப்பதோடு, இப்பகுதிக்கு உங்கள் ஆக்கங்கள், மற்றும் குமரகுரு பரிசுத்திட்ட கூப்பன் ஆகியவற்றை கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.*

*வீடு,*
*வெள்ளிநாதம், ஈழநாதம்,*
*யாழ்சாலை, கிளிநொச்சி.*




குமரகுரு புடைவை, அழகுப்பொருள் வாணிபத்தின் பரிசுத்திட்டம்

வெள்ளிநாத வாசகிகளுக்கு கிழமை தோறும் பெறுமதிமிக்க சாறி ஒன்றை குமரகுரு புடைவை வாணிபத்தினர் பரிசளிக்கவுள்ளனர்.
நீங்கள் செய்யவேண்டியது கீழ்காணும் கூப்பனை வெட்டி நிரப்பி அனுப்ப வேண்டும். குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் வாசகிக்கு பரிசு காத்திருக்கிறது.

குமரகுரு பரிசுத்திட்டம்—43

பெயர்:..........................................

முகவரி:..........................................

..........................................

குறிப்பு:
ஈழநாதம் நிறுவனத்தில் கடமையாற்றும் ஊழியர்களும் அவர்களது நெருங்கிய உறவினர்களும் இப்போட்டியில் பங்குபற்றமுடியாது.




# பெருங்கற்கால மக்கள்

பெருங்கற்காலத்தில் வேல் வழிபாடு அதாவது முருகவழிபாடு நிலவியுள்ளது. ஒரு தலைச்சூலம் என்ற வேல் வழிபாடு முருக வழிபாடானது. முத்தலைச்சூல வழிபாடு சிவன், கொற்றவை ஆகியவற்றுடன் இணைந்ததானது. நிலத்தை வழிபடலும் இக்காலத்தில் நடந்துள்ளது. சக்தியை வழிபடல் பெருங்கற்காலத்தில் நடைபெற்றது. அத்துடன் இயற்கையை மரங்கள், மலை, சூரியன், சந்திரன் ஆகியவையும் வழிபடப்பட்டன.

வழிபாடு இருக்க பெருங்கற்கால மக்கள் யார் என்று பார்ப்போம். புதிய கற்காலம் முதல் வாழ்ந்த மத்திய தரை வர்க்கத்தினரே திராவிடரின் மூதாதைகளாக இந்திய உபகண்டத்தின் தென்பகுதியில் வாழ்ந்தார்கள். மத்தியதரை மக்கள் மூன்றாகப் பிரிக்கப்படுகின்றனர்.

ஆதி மத்திய தரை- ஒரு பிரிவு- இவர்கள் நடுத்தர உயரம் கறுத்த நிறமும் உடையவர்கள். இவர்களில் இருந்து வந்தோரே இந்தியாவின் தமிழர், கன்னடர், தெலுங்கர், மலையாளிகளான திராவிட குடும்பத்தவர்கள்.

அடுத்த பிரிவு

உண்மை மத்தியதரை மக்கள்- இவர்கள்.

ஆதி மத்தியதரையினரை விட உயரமானவர்கள் வெள்ளை நிறத்தவர்கள். சிந்து வெளியில் வாழ்ந்த திராவிடர்கள் இவர்களாவர்.

மூன்றாவது பிரிவினர்:-

கீழை நாட்டினத்தவர் என்ற பிரிவினர் நீண்ட மூக்குடைய வெண்ணிற மனிதர்கள் இவர்கள்.

இவர்கள் வட இந்தியாவில் வாழ்ந்தனர்.

அறிவியல் ரீதியாக கிடைக்கப்பெற்ற எலும்புக்கூடுகளை மானுடவியலாளரான கே.ஏ.12 கென்னடி என்பவர் 1975 இல் ஆராய்ந்தே இம் முடிவை எட்டினார்.

பெருங்கற்காலத்தை



அறிவியல் ரீதியாக ஆராய்ந்த முதல் மனிதர் இவராவார்.

இவருக்கு முன் கி.வி. எவ். கைமண்டோர் என்பவர்- கடல் வழியாக தென்னிந்தியாவில் புகுந்து திராவிடர்கள் அங்கிருந்த புதிய கற்கால மக்களை துரத்திவிட்டு தமது மொழியை யும் பண்பாட்டையும் திணித்தனர் என்றார்.

ஆனால் கென்னடி அக்கருத்தை அறிவியல் ரீதியாக நிராகரித்தார்.

தென்னகத்திலும் இலங்கைத்தீவிலும் தொன்று தொட்டு மக்கள் வாழ்ந்திருந்தனர்: என்பதற்குத் தொல்சான்றுகள் உள்ளன.

**குரலோன்**

## வாசகர் மடல்

# அன்புக்கு ஏங்கும் முதியவர்கள்

அன்புக்கு ஏங்கும் முதியவர்கள் அந்நியர்களல்ல அவர்கள் சுகமாக வாழும் காலம் வரும் 01-07-04-2005 ஈழநாதம் வெள்ளிநாதத்தில் வந்த கட்டுரை அருமையான உண்மையை எடுத்துக் கூறுகிறது. எத்தனை பேர் இதனை வாசிப்பார்களோ, திருந்துவார்களோ யார் அறிவார்.

முதியோர் இல்லம் நடத்துபவர்களும் பொறுப்பாளர்களும் போற்றப்பட வேண்டியவர்கள். உணவு உடை உறைவிடம் மருத்துவ வசதி எல்லாம் முதியவர்களுக்கு கொடுத்து காப்பாற்றுவது அரிய செயல். அது மட்டுமா அங்கு தங்கியிருக்கும் முதியவர்க்கு இடையில் ஏற்படும் சிறு சண்டை பூசல்களை தடுத்து சமரசப்படுத்தும் சாதனை பெரிது.

ஆனால் உணவு, உடை, உறைவிடம், மருத்துவ வசதி மட்டும் ஒருவரை திருப்திப்படுத்த முடியாது. மனம் என்ற ஒன்று அது அந்நியமானவர்களின் அன்பைக் காட்டிலும் தங்கள் பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் சுற்றத்தவரின் அன்பை பெரிதும் வேண்டி நிற்கும் இதை ஏன் பிள்ளைகள் உணர்வதில்லை. தனிமைப்படுத்தப்பட்டு தவிப்பது போல் தான் உணர்கிறார்கள்.

மாமி மருமகள் சண்டை

பொருளாதாரக் கஷ்டம்

பல பிள்ளைகள் இருந்தால் யார் பெற்றாரை பொறுப்பெடுப்பது என்ற பிரச்சினை வீட்டில் உள்ள பெண் வேலைக்கு போனால் உள்ள வேலைப்பளுவுடன் முதியவர்கள் ஒரு சுமை என்ற எண்ணம்.

வெளிநாடுகளில் பிள்ளைகள் இருந்தால் முதியவர்களான பெற்றாரை பராமரிக்க முடியாமை இத்தகைய காரணங்களால் முதியோரை முதியோர் இல்லத்திற்கு அனுப்பி விடுகிறார்கள். போதாக்குறைக்கு அங்கே என்ன குறை என்றும் கேட்கிறார்கள்.

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம், தந்தை தாய் பேண்.

தாயிற்சிறந்ததொரு கோயிலும் இல்லை. இவை பள்ளிப்படிப்புடன்



முடிந்து விடும் வாழ்க்கைக்கு பயன்படுவதில்லை.

எங்கள் கிராமம் இங்குள்ளவர்கள் அநேகமாக பெற்றாரை முதியோர் இல்லத்துக்கு அனுப்புவது குறைவு. அது மட்டுமல்ல எத்தகைய இக்கட்டிலும் பெற்றாரை பாதுகாப்பவர்களும் இருக்கிறார்கள்.

தொண்ணூற்றைந்தாம் ஆண்டு வலிகாமத்திலிருந்து மக்கள் தென்மராட்சி நோக்கி வந்து கொண்டிருந்தார்கள். கொட்டும் மழை, குளிர் அந்த நிலையிலும் ஒருவர் தன் தாயை நடக்க முடியாத தாயை சைக்கிளில் இருத்தி அணைத்துக் கொண்டு வந்தார். அவருடைய மனைவியும் மூன்று பிள்ளைகளும் கையில் சிறு பொட்டலங்களுடன் நடந்தே வந்தார்கள் நனைந்தே வந்தார்கள். நல்ல வேளை தெருவோரம் இருந்த தேவாலயத்தில் இடம் கிடைத்தது.

தென்மராட்சி மக்கள் இடம் பெயர்ந்தார்கள். ஒருவன் இருபத்தியிரண்டு வயது தாய் தந்தை இல்லாதவன் பாட்டன் பாட்டியால் வளர்க்கப்பட்டவன் மணமாகி மூன்று மாதக் குழந்தை எல்லாரும் புறப்பட்டுக் கொண்டிருந்தார்கள். ஏனடா நீ இருக்கிறாய் என அடுத்த வீட்டுக்காரி கேட்டாள். அவள் குழந்தைகளுடன் ஊரை விட்டுப் போய் உயிரைக் காப்பாற்ற புறப்பட்டுவிட்டாள்.

அக்கா ஆச்சியும் அப்புவும் நடக்க மாட்டினம் செத்தால் செத்துப் போறன் நான் வரேல்லை என்றான். அப்புறம் எப்பிடியோ மற்றவர்களின் உதவியுடன் நெல்லியடிக்கு பாட்டன் பாட்டி அவன் குடும்பமும் போய்ச் சேர்ந்தது.

பக்கவாதத்தால் பாதிக்கப்பட்ட தாய் விரைவாக நடக்க முடியாத தந்தை. குழந் தைகள் கணவன் கூட இல்லை வெளிநாட்டில். கொடூரமான குண்டு வீச்சில் குலைநடுங்கிய மக்கள் வெளியேறிக்கொண்டிருந்தார்கள். வா குழந்தைகளை வைத்துக் கொண்டு இங்கே இருக்காது வா என்று பலர் கேட்டனர். பப்பாவையும் மம்மியையும் விட்டு நான் வர முடியாது நீங்கள் போங்கோ செத்தால் ஒன்றாகச் சாவோம் என்று கூறிவிட்டான். பின்பு எப்படியோ எங்கோ எல்லாரும் போனார்கள். இவை என்ன பொய் வார்த் தைகள் அல்ல. உண்மை இவர்கள் பெற்றாரை தெய்வமாக கைவிடக் கூடாது என்றுதானே எண்ணி னார்கள்.

வெளிநாட்டில் உள்ளவர்கள் திரவியம் தேடவோ கொடியவர் குண்டுகளுக்கு அஞ்சியோ போனவர்கள் தான். அவர்கள் பலர் பெற்றாரை அங்கு கூப்பிடுவார்கள் போன முதியவர்களுக்கு அங்குள்ள வாழ்க்கை ஒத்துப்போவதில்லை. பிள்ளைகள் வேலைக்கு போவார்கள

(22ஆம் பக்கம் பார்க்க...)

1993ஆம் ஆண்டளவில் குமுதினியின் இயந்திரம் அதன் கட்டமைப்பு பழுதடைய கடற்படையினர் ஊர்காவற்றுறை கடற்பகுதியில் அதனை கைவிட்டனர். குமுதினி கடலில் தரைதட்டி அனாதரவாக கிடந்து சிதைந்து கொண்டிருந்தது. நெடுந்தீவு மக்கள் பாதுகாப்பற்ற திறந்த படகுகளான உதயதாரகை,சமுத்திரதாரகை ஆகிய கூட்டுறவுச் சங்கப்பொருளேற்றும் படகுகளையும்,தனியாரின் சிறிய அக்குவாட்டிக் நிறுவனப்படகுகளையும் பயன்படுத்தினர்.

இவற்றில் அக்குவாட்டிக் நிறுவனப் படகு ஒன்றையும் சமுத்திர தாரகை என்ற படகையும் ஈபிடிபியினர் இரவொன்றில் கடத்திச் சென்று விட்டனர். இதுவரை அவற்றின் கதை தெரியாது. அவை மூலம் ஈபிடிபியினர் இந்தியா சென்றதாக தகவல் உள்ளது.

1992இல் தீவகம் முழுமையையும் சிறிலங்காப்படையினர் ஆக்கிரமித்த பின்னர் குறிகாட்டுவானுக்கான படகுப்போக்குவரவு சிறிலங்கா கடற் படையினரால் துண்டிக்கப்பட்டது.காரணம் குறிகாட்டுவானில்




# ஒரு பயணத்தின் மீள்நினைவுகள்...

இறங்கும் மக்கள் புங்குடுதீவு வழியாகவே செல்லவேண்டும். யாழ்ப்பாணத்துக்கு மக்கள் செல்லமுடியாத காரணங்களால் அரச படைத்தலைமையகம் ஊர்காவற்றுறையில் இருந்ததால் மக்களை அங்கு மட்டும் செல்ல படையினர் அனுமதித்தனர்.அதைவிட புங்குடுதீவு முழுமையாக சிறிலங்கா படையினரிடம் இல்லை. அதில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி இருப்பதாகவும் மக்கள் அவர்களுக்கு பொருட்களை கொண்டு சென்று கொடுக்கலாம் என்று தெரிவித்தே புங்குடுதீவுக்கான பயணம்

சிறிலங்கா படையினரால் தடுக்கப்பட்டது. பாதுகாப்பற்ற படகுகளில் நீண்ட தூரம் பயணித்து ஊர்காவற்றுறைக்கு செல்லவேண்டியிருந்தது. அப்போது குமுதினி கடலில் அனாதரவாக சிதைந்து கிடந்ததை பார்த்து துயருற்றனர். 1996இல் யாழ்ப்பாணத்தை சிறிலங்கா படையினர் ஆக்கிரமித்த பின்னர் தீவகத்துக்கான பண்ணை வீதி சிறில்ங்கா படையினரால் திறக்கப்பட்டு தீவகம் யாழ்ப்பாணத்துடன் இணைக்கப்பட்டது. இதன் பின் தீவகத்தில் மக்களின் போக்குவரவு சிறியளவில் அதிகரித்தது.

அவ்வேளையில் குமுதினியை மீட்க வீதி அபிவிருத்தி அதிகார சபை நடவடிக்கை மேற்கொண்டது. படகின் பணியாளர்கள் சகிதம் குமுதினியை மீட்க அது இருக்கும் இடத்தை அடையாளப் படுத்தினர். இது நடந்தது1997இல். அதன்பின் வீதி அபிவிருத்தி அதிகாரசபையினர் அதனை மீட்டு திருத்த காரைநகர், சிறிலங்கா படையினரிடம் அனுமதி கேட்டனர்.அதனைக்கொண்டு செல்ல கடற்படையினர் அனுமதி மறுத்தனர். தமது ஒட்டுக்குழுவான ஈபிடிபியுடன் தொடர்புகொண்டு அதனை எடுக்குமாறு ஒரு அரசியல் களத்தை அந்த குழுவுக்கு கடற்படை அதிலும் உருவாக்கிக் கொடுத்தது.அந்த ஒட்டுக்குழுவும் குமுதினியின் எந்திரத்தை திருத்துகிறோம் என்ற நாடகத்தை நடத்தியது.அது நிறைவேறாமல் கைவிடப்பட்டது.

இதன் பின் கடற்படைக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டது. அவர்கள் பறித்துச் சென்றே குமுதினிக்கு இந்த நிலை ஏற்பட்டது என்ற போர்வையில் இந்த அழுத்தம் கொடுக்கப்பட்டது. அதனையடுத்து தாம் குமுதினியின் எந்திரத்தை திருத்தித் தருவதாக காரைநகர் கடற்படையினர் சம்மதித்தனர். இது இந்த பிராந்தியத்தில் தம்மைத்தவிர வேறு எவரும் வந்து திருத்தக் கூடாது என்ற இராணுவ நோக்கில்தான். கடற்படை ஒரு இழுவைப்படகு அசோக் லேலண்ட் எந்திரத்தை பொருத்தியது. இது புதிதாக அல்லது அவர்கள் கைப்பற்றிய இந்திய இழுவைப்படகில் இருந்து கைப்பற்றியதா தெரியாது.ஒரு நாள் அதனை பொறுப்பெடுக்குமாறு வீதி அபிவிருத்தி அதிகார சபையினரிற்கு குமுதினியை பொறுப்பெடுக்குமாறு கடற்படை அறிவித்தது.

வீதி அபிவிருத்தி அதிகாரசபையினர் குமுதினியின் பணிக் குழுவையும் கூட்டிக்கொண்டு காரைநகர் கடற்படைத்தளத்துக்கு சென்றனர். குமுதினியைப் பெற்றுக்கொண்டோம் என கடிதம் ஒன்றில் கையெழுத்திடும் படி கடற்படையினர் கேட்டனர். குமுதினி என்ன நிலையில் இருக்கிறது எனத்தெரியாமல் கையெழுத்துப்போடுவதில் வீதிஅபிவிருத்தி அதிகார சபையினருக்கிடையில் இழுபறி ஏற்பட்டது. படகுப்பணிக் குழுவினர் முதலில் கடற்படையிடம் இருந்து குழுதினியை எடுப்பம் என வலியுறுத்தினர். அவர்கள் கையெழுத்திட்டனர். அதன் பின் கடற்படையினர் தமது துறையில் கட்டப்பட்டிருந்த குமுதினியை ஒப்படைத்தனர். பணிக்குழுவினர் படகைப்பொறுப்பேற்று அதன் எந்திரத்தை இயக்கி கடற்படையிடமிருந்து அதனை விடுவித்துக்கொண்டு புறப்பட்டனர்.


குமுதினி புறப்பட்டு கடலில் பயணிக்கத்தொடங்கியது. நல்ல வீச்சாக அது அலைகளை கிழித்துக்கொண்டு போனது. திடீரென்று ஏதோகழன்று விழும் உணர்வு குமுதினியில் ஏற்பட்டது.

அலை கிழித்து தொடர்ந்து குமுதினி நகர வில்லை. அப்படியே அசைந்து அசைந்து நடுக்கடலில் நின்றது. நடந்தது என்னவாக இருக்கும்.

**துருவன்**

# விலகிச்செல்லும் பயணங்கள்

**வெளிவாசல் பாலன்**



"கைகொட்டிச் சிரிப்பார்கள், ஊரார் சிரிப்பார்கள்" என்றொரு பொருள் பொதிந்த பாடல் இருக்கிறது. பலவேளைகளிலும் பல வற்றுக்கும் தவிர்க்கமுடியாமல் இந்தப் பாடல் தான் நினைவுக்கு வருகின்றது. அந்தளவுக்கு பல திணைக்களங்களின் செயற்பாடுகளிருக் கின்றன. பல அதிகாரிகளின் காரியங்கள் தொடர்கின்றன.

போர் தணிந்திருக்கிற கடந்த இரண்டு வருடங்களாக இந்த மண்ணில் நிகழ்ந்திருப்ப தென்ன?

சனங்களுக்குரிய அடிப்படைத் தேவைகளும் வசதிகளும் எவ்வளவுக்கு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன? எந்தளவுக்கு மேம்பாடடைந்திருக்கின்றன?

ஒரு தடவை ஒரு வயோதிபர் சைக்கிளில் பயணித்தபோது முன்னேயிருந்த குழியில் தடுமாறி வீழ்ந்துவிட்டார். வீழ்ந்தவரை அருகில் நின்றவர்கள் தூக்கும்போது அந்த முதியவர் உருக்கத்தோடு கேட்டார். 'இந்த றோட்டையாவது போட்டுத்தரக் கூடாதா இதை விட நாங்கள் வேறு எதைக்கேட்டோம்? றோட்டைத் திருத்தித் தாருங்கள் என்றுகேட்பது ஒரு கோரிக்கையா? அது மக்களுக்குச் செய்து கொடுக்கவேண்டியதொரு அவசியக் கடமையல்லவா' என்று.

அவர் கேட்டவிதமும் அந்த மொழியும் என்னை உலுப்பிவிட்டது. ஏன் அது இதயமுள்ள எவரையும் ஆட்டியே தீரும். அந்த ளவுக்கு அவரும் அவருடைய கதையுமிருந்தது.

இரண்டரைவருட போர் தணிவுக் காலத்தில் சனங்கள் எதையும் புதிதாகப் பெறவில்லை.

ஆனால் திணைக்களங்கள் கொழுத்திருக்கின்றன. அதிகாரிகள் வசதிகளைப் பெற்றிருக்கிறார்கள்.

பல தெருக்களும் படுகுழி களாகவே தொடர்ந்துமிருக்கின்றன. எல்லா வீதிகளிலும் மழைபெய்தால் வெள்ளம் நிற்கிறது. சேறு பிரள்கிறது. அறுத்தோடி நீர் பாய்கிறது. கோடையில் புழுதி பறக்கிறது. குண்டும் குழியும் தெருநீளம் கிடந்து பெரும் வகையாகவேயிருக்கிறது.

இதைப் பற்றி யாரும் கவலைப்பட்ட தாகவோ அக்கறைப்பட்டதாகவோ இல்லை.

இந்தப் பத்தியில் கூட பலதடவை வீதிப்பிரச்சினைபற்றி எழுதப்பட்டது. வேறு கட்டுரைகள், செய்திகளிலும் தொடர்ந்து வீதிப்பிரச்சினைகள் முன் வைக்கப்பட்டிருக் கின்றன.

ஆனால் பலன் ஏதுமில்லை. முன்னேற்றம் சிறிதுகூடஇல்லை.

சனங்கள் தினமும் கணமும் சிரமப்பட்டுக்கொண்டேயிருக்கிறார்கள். மனதில் வெம்பிக்கொண்டும் திட்டிக் கொண்டுமிருக் கிறார்கள்.

வீதிப்பிரச்சினைபற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டால் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகக் கதைக்கிறார்கள். சரியாகவும் தெளிவாகவும் பதில் சொல்ல வேண்டியவர்கள் சாட்டுகளையும் சமாளிப்புக் களையுமே செய்கிறார்கள்.

சில வீதிகள் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குரியன என்று அதற்குரிய அதிகாரிகளிடம் திருத்தும் தொடர்பாக விளக்கம் கேட்டால் நிதி போதாது, எழுதிக் கேட்டிருக் கிறோம் பதில் வரவில்லை என்ற மாதிரித்தான் மறுமொழி சொல்லப்படுகிறது.

சில வீதிகள் உள்ளூராட்சித் திணைக்களத்துக்கு- பிரதேசசபைக்குரியன வாகவுள்ளன.

பிரதேச சபையினரிடமும் உள்ளூ ராட்சி ஆணையாளர்களிடமும் இந்த வீதிகள் கேட்டால் எந்தவிதமான பொருத்தமும் இல்லாத பதிலையே சொல்கிறார்கள். அவர்கள் சொல்லும் பதிலைக் கேட்கும் கஸ்ரத்தைவிட குண்டும் குழியும் சேறும் சகதியும் புழுதியும் நிறைந்த வீதிகளால் போவது சுகம்.

இந்த நிறுவனங்கள், அமைப்புக்கள், திணைக்களங்கள் இயங்குவதென்பதெல்லாம் அடிப்படையான தேவைகளைச் செய்வதற்கும் பிரச்சினைகளை இயலுமானவரை தீர்ப்பதற் குமே.

சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடைய கடமை என்பது இவற்றுக்குரிய வழிவகை களைச் செய்வதும் கண்டறிவதுமே. நிதியில்லை. ஒதுக்கீடில்லை என்றெல்லாம் வெறுமனே சொல்லிக்கொண்டிருக்கும் அதிகாரிகள் தமது அலுவலகங்களை மட்டும் மிகத்திறம்பட கட்டிவைத்திருக்கிறார்கள்.

மாடிக்கட்டடங்களை அழகாகக் கட்டி, அதற்கு மிக அழகாக வர்ணமும் பூசி மின்சாரம், குளிரூட்டி, வாகன வசதிகள் என்று எல்லா



வற்றையும் பெற்றுக்கொண்டு சேவையை மட்டும் செய்யா திருப்பதற்கு என்ன நியாயம்.

மாவட்டச் செயலர்களின் அலு வலகங்கள் தொடக்கம் சகல திணைக்களத் தலைவர்களின் பணிமனைகள்வரையில் எல்லாமே மிக உச்சமான வசதிகளுடன் தானிருக்கின்றன. வேலைகளைச் செய்வதற்கும் சேவைகளை வழங்குவதற்கும் முக்கியமானது பணிமனைகள் என்றவர்கள் வாதிடலாம்.

வெறுமனே கட்டடங்கள் மட்டும் எதையும் சாதித்துவிடுவதில்லை.

கட்டடங்களும் வாகனங்களும் தாராளமாக இப்போது நிறைந்துவிட்டன.

ஆனால் பாடசாலைகள் இன்னும் கிடுகுக் கொட்டகைகளாகத்தானிருக்கின்றன. பல பாடசாலைகளில் சிறுநீர் கழிக்கவே மலசல கூடமில்லை. சில பள்ளிகளில் ஆசிரி யர் களுக்கான அடிப்படை வசதிகளில்லை.

பல மருத்துவமனைகள் அவசியமான தேவைகள் பூர்த்தியாகாமல் நோயாளர்களைச் சிரமப்படுத்துகின்றன.

மின்சாரமில்லை. வீதியில்லை. ஒழுங்கான ஆஸ்பத்திரியில்லை. நல்ல பள்ளிகளில்லை. போதிய போக்குவரத்து வசதிகளில்லை. வேண்டிய தொடர்புக்கான ஏற்பாடுகளில்லை என எல்லாமே நெருக் கடிக்குள்ளாகிய சூழலில் தான் இன்றும் வாழ்க்கை நகர்கிறது.

சமாதானம், அமைதி, புரிந்துணர்வு, புனர்வாழ்வு என்ற அபாயகரமான சொற்களின் கீழ் புறக்கணிப்பும் ஏமாற்றுதலும் பம்மாத்துவிடு தலுமே கூரிய கத்திகளைப்போல மறைந் திருக்கின்றன.

வெளியே தங்கள் பொறுப்பிலுள்ள அல்லது தாங்கள் பொறுப்பாகவுள்ள வீதிகள், பாடசாலைகள், மருத்துவமனைகள் போன்ற வற்றின் நிலைப்பாடு கேவலமாக இருக்கும் போது தாம் மட்டும் புதிய வாகனங்களிலும் புதிய கட்டடங்களிலும் வசதியாகக் குந்திக் கொண்டு ராஜாங்கம் செய்கின்றார்கள் இவர்கள்.

ஒரு பாழடைந்த வீதி என்பொறுப்பில் திருத்தபடாமல் படுமோசமாகச் சீரழிந்து கிடக் கிறதே. நாளாந்தம் எத்தனையோ சிரமப்பட்டு மக்கள் அதன்வழி போய்வருகிறார்களே, இதை இப்படியே தொடரவிடுவதா? என்ற அக்கறை, சிறுகருணை, மனிதாபிமானம், பொறுப்புணர்வு என ஏதாவதொன்று இவர்களை ஒரு கணமேனும் தாக்கியதில்லையா?

இப்படி எல்லாவற்றையும் சீரமைக் காமல் விட்டுவிட்டு எந்தக் கூச்சமுமில்லாமல் அலுவலகங்களில் குந்தியிருப்பதன் அர்த்த மென்ன?

தங்களுக்கு கட்டடங்களும் அதன் பெரிய மேசையும் குளிரூட்டியும் வாகனமும் தேவையென நினைப்போர் சனங்களுக்கு ஒரு தெருவாவது வேண்டுமே என்று சிந்திக்க வேணும். திரும்பத் திரும்ப ஒரு விடயத்தைப் பேசுவது கடுமையான அலுப்பையும் எரிச்சலையும் தரும். அதைவிட எரிச்சலூட்டு வதும் சலிப்பூட்டுவதும் என்ன தெரியுமா?

கவனிக்கவேண்டியவிடயங்களை பொறுப்பான அதிகாரிகள் கவனிக்காமல் விடுவதுதான்.

ஒருசில பொறுப்பதிகாரிகளின் அக்கறையின்மையும் பொறுப்பின்மையும் எத்தனையோஆயிரம் மக்களின் வாழ்வில் நேரடிப்பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன.

சில அதிகாரிகளின் கருத்து என்னவென்றால் சிறிலங்கா அரசாங்கம் தமிழ்ப் பகுதிகளை புறக்கணிப்புச் செய்வதால் தாங்கள் என்ன செய்யமுடியும் என்பது.

எந்த அதிகாரியாவது இதுவரையில் மக்களின் தேவையினை இந்தப் பதவியி லிருந்துகொண்டு செய்யமுடியாது என்று சம்பந்தப்பட்ட திணைக்களத்தோடோ அமைப் புடனோ மோதியிருக்கிறார்களா? அல்லது பதவியிலிருந்தால் அதற்குரிய வேலைகளைச் செய்வேணும் இல்லை யென்றால் விலக வேணும் என்று முடிவெடுத்திருக்கிறீர்களா?,

உண்மையான ஒரு சேவைமனப் பாங்குள்ள பொறுப்பதிகாரி இனிமேலாவது தான் பொறுப்பாகவுள்ள பகுதியின் தேவைகளை நிறைவுசெய்யாமல் தன்னுடைய பணிமனைக் குள் காலடி எடுத்துவைக்கமாட்டேன் என்ற முடிவுடன் இயங்கட்டும் பார்ப்போம்.

ஒருவருடைய பொறுப்பென்பது அவருடைய செயல்களாலும் அறிவாலுமே மதிப்புப்பெறுவது. நாங்கள் இதைத்தவற விட்டால் இன்னுமின்னும் வெளியாரின் தலையீடுகள் பெருத்துவிடும் என்பது தவிர்க்க முடியாத யதார்த்தமாகும்.

இப்போதே பல வெளிநாட்டுத் தொண்டர் நிறுவனங்கள் எம்மை ஆளத் தொடங்கிவிட்டன.

எங்களின் பட்டதாரிகளிற் பலரும் அந்தத் தொண்டர் நிறுவனங்களின் கீழ் பணிசெய்ய ஆவலோடு காத்திருப்பதன் அர்த்தமென்ன?,

நமது பாதங்கள் எங்கே செல்கின்றன?

---



## அலுவலகமும் பெண்களும்

இன்றைய சூழ்நிலைக்கு ஏற்ப குடும்ப நிலைமைகளைச் சமாளிப்ப தற்கு பெண்களும் வேலை செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்தின் காரணமாக பெண்களிலே முக்கால்வாசிப்பேர் வேலை செய்து வருகின்றார்கள். இவர்கள் அலுவலகங்களில் பல் வேறு ரீதியான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கிறார்கள். இதனை எவரும் கண்டு கொள்வதில்லை. ஒரு பெண் வேலைக்குச்செல்கிறாள் என் றால் அவள் எவ்வளவு சம்பளம் பெறுகின்றாள் என்பதை கணக்கிட்டு வாயிலடிக்கும் சமூகம் இதற்குப் பின்னால் எவ்வளவு கஸ்ரங்கள் உள் ளன என்பதையோ இதனை எவ்வாறு எதிர்கொள்வதன் மூலம்தான் இந்த வருவாய் கிடைக்கிறது என்ப தையோ அறிய மறந்து விடுகின் றார்கள்.

குறிப்பாக அலுவலக வேலை ஒன்றை மேற்கொள்ளும் பெண்ணுக்கு கூடுதலாக இன் னொரு பெண்ணாலேயே மனத் தாக்கங்கள் ஏற்படுகின்றன. பல் வேறு சமூகப்பிரச்சினைகளை ஏற் படுத்தும். ஆண்கள் அலுவலகம் என்று வருகின்றபோது கூடுதலாக நல்ல விதமான கோணத்திலேயே பெண்களை அனுசரித்துப் போகி றார்கள். பெரும்பாலான அலுவல கங்களில் பெண்களே வேலை செய்கின்றார்கள். இவர்கள் சில வேளைகளில் செய்கின்ற தவறுகள் தங்களுக்கு பொறுப்பாய் இருக்கும் அலுவலினால் கண்டுபிடிக் கப்பட்டு அது தவறு எனச்சுட்டிக் காட் டப்படுவதோடு நின்று விடுவதில்லை. ஒரு பெண்ணின் உடற்குறைபாடு களைச் சுட்டிக்காட்டியே அது தவறு எனக்கூறப்படுகிறது. இவ்வாறான செயற்பாடுகளால் அதிகளவுதூரம் மனமே பாதிக்கப்படுகிறது.

தவறு என்று வரும் போது அது சுட்டிக்காட்டப்படவேண்டியது அவ சியம் தான் இதனை மறுப்பது மட மையானது. ஆனால் தவறுகள் சுட் டிக்காட்டப்படும் விதம்தான் நேரான தாக இருக்க வேண்டும். விட்ட தவ றிற்காக அடியை வாங்கவும் தயாராய் இருக்கும் பெண்கள் அலுவல் விடும் நக்கல் பேச்சினால் எவ்வளவு தூரம் மனமுடைந்து போகிறார்கள் என்பது நீங்கள் கேலிபேசிய அந்தநாள் அந்தப்பெண்ணின் வேலை எவ்வளவு தூரம் ஆழமற்றதாய் அமைந்திருக் கிறது என்பதை காண்பதன் மூலம் அறியலாம். எனவே தவறுகளைச் சுட்டிக் காட்டுங்கள் கேலிபேசாதீர்கள் இதனால் ஒரு பெண் மனஉளைச்ச லுக்கு உள்ளாகிறாள் என்கின்ற அதேவேளை அவளின் மனத்தாக்கத் தின் மறுவடிவமாய் உங்கள் வேலையே பாதிக்கப்படுகிறது என்பதை உணர்ந்து இனிவரும் காலங்களில் செயற்பட்டால் வெற்றி உங்களதே.

**-பூ.நகுலன்-**

# மெலிஞ்சிமுனைக்கிராமம் ஒளியேற்ற ஏங்குகிறது..!

**இரா - வின்**




ஊர்காவற்றுறையின் தென் பகுதியில் அமைந்துள்ள சிறிய கரையோரக்கிராமமான மெலிஞ்சிமுனை. யாழ்ப்பாணத் தில் இருந்து, அதிலும் குறிப்பாக நாவாந்துறைப் பிரதேசத்தில் இருந்து கடற்றொழில் செய்யும் நோக்கில் குடியேறிய மக்க ளால் உருவாக்கம் பெற்ற கிராமமாகும். தனித்துவ மான இயல்புகளைக் கொண்ட பிரதேசமாக தன்னை வளர்த்துக்கொண்ட போதிலும். கால மாற்றத் தில் மக்கள் தொகை அதி கரித்தமையால் தேவை களைப் பூர்த்தி செய்வதில் சிரமப்பட்டனர்.

எதுவித அடிப் படை வசதி வாய்ப்புக்களு மின்றி மிகவும் பின் தங் கிய கிராமமாகவுள்ள மெலிஞ்சிமுனைக்கு மிக அடிப்படையான தேவைகளுள் குடிநீர், போக்கு வரத்திற்கான பாதை, மின்சாரம் என்பவை முதன் மையானவையாக வுள்ளன. கடற் றொழிலையே தமது ஜீவனோபா யத் தொழிலாகக் கொண்ட இக் கிராமமக்கள் இரண்டு இராணுவத்தினரது அடாவடித் தனங்கள், ஆக்கிர மிப்புக்களிற்கு உள்ளாக்கப்பட்ட வர்கள். இலங்கை, இந்திய இராணுவத்தினரின் தாக்குதல் விளைவை இக் கிராமத்தவர்கள் மத்தியில் அவதானிக்க முடி கிறது.

ஜே-54 கிராம சேவை யாளர் பிரிவிலுள்ள 200 குடும் பங்களைச் சேர்ந்த 810 பேர் உள்ள இக் கிராமத்தில் 200 மாணவர்கள் உள்ளனர். இவர் களில் சுமார் 50 வரையான வர்கள் இடைவிலகியுள்ளனர். இடைவிலகியமைக்கு வெவ்வேறு காரணங்களை முன் வைத்தாலும் வசதி வாய்ப்புக்கள் இன்மையும் குடும்ப நிலைமையுமே காரண மாகும்.

மெலிஞ்சிமுனைக் கிரா மத்திற்கு மிகவும் அடிப்படைத் தேவையாகவுள்ள தண்ணீர் பிரச் சினையை ஈடுசெய்வதற்கான நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகளோ, அரச சார்பற்ற



நிறுவனங்களோ மேற்கொள்ள வேண்டும். குடி நீரிற்கு நான்கு இடத்தில் குழாய்கள் உள்ளன. அதன் ஊடாகவே பெற்று வரு கின்றனர். இந் நீர் கூட காலை யில் குறித்த நேரத்திலும் மாலை யில் குறித்த நேரத்திலுமே பெற முடியும். இத் தண்ணீரிற்கு குறிப் பிட்ட தொகைப்பணத்தை மாதாந்தம் செலுத்தி வருகின் றனர். காசு கொடுத்து தண்ணீர் பெற்றாலும் அதனை முழுமை யாகப் பெற்றுப் பயன்படுத்த முடிவதில்லையே என இம் மக்கள் ஆதங்கப்படுகின்றனர்.

மே, யூன் மாதங்களில் இப் பகுதி கிணறுகளில் தண் ணீர் முழுமையாக வற்றிவிடும். அயல் கிராமங்களிற்குச் சென்றே தமது தண்ணீர்த் தேவையை பூர்த்தி செய்து வருகின்றனர். இவ்வாறான காலப்பகுதியில் தொற்று நோய்கள் ஏற்பட்டு பலர் பாதிக்கப்படு வதாகவும் இவை கால மாற்றங்களிற்கு அமைவாக தொடர்ச்சியாக இடம்பெறுவ தாகவும் வேதனையுடன் குறிப் பிடுகின்றனர் கிராம மக்கள்.

நீண்ட பாரம்பரியத்தைக் கொண்ட இக் கிராமத்திற்கென இதுவரை மின்சாரம் வழங்கப் படவில்லை. இக் கிராமத்திற் கான வீதிகள் யாவும் குண்டும் குழியுமாக பலத்த சேதமுற்ற நிலையிலுள்ளன. மூன்றுகிலோ மீற்றர் தூரத்திற்கு நடைப் பய ணம் மேற்கொண்டே பிரதான வீதியில் இருந்து பஸ் போக் குவரத்தை மேற்கொள்கின்றனர்.

மருத்துவத் தேவை களை நிறைவேற்ற வேண்டு மாயின் ஐந்து கிலோ மீற்றர் தூரத்திலுள்ள ஊர்காவற்றுறை அரசினர் வைத்தியசாலைக்கே போகவேண்டியுள்ளது. இதுமட்டு மன்றி வேறு தேவைகளை நிறை வேற்றுவதாயினும் ஊர்காவற் றுறை சந்தைக்கே வர வேண்டிய நிலை உள்ளதாகவும் பெரும்பா லானவர்கள் கால் நடையாகச் சென்றே இத்தேவைகளை மேற்கொண்டு வருவதாகவும் குறிப்பிடுகின்றனர். இக் கிராமத் திற்கான வீதிகளைத் திருத்தி தனியார் பஸ் போக்குவரத்து வசதிகளையாவது மேற்கொண் டால் நோயாளர்கள், மாணவர்கள், முதியவர்கள் ஓரளவு பயன் அடைவார்கள். இதற்கு யார் யாரைக்கேட்பது. யார் யார் செய் வதென்ற மனநிலையே மக்களி டையேயும் அதிகாரிகள் மத்தி யிலும் காணப்படுவதனை அவ தானிக்க முடிகிறது.

கடந்த வருடம் இடம் பெற்ற சுனாமிப்பேரலையினால் 25000 ரூபா பெறுமதியான கடல் தொழில் உபகரணங்களை 60 தொழிலாளர்கள் இழந்துள்ளனர். இவர்களிற்கான இழப்பீடுகளோ மாற்றுத் தொழிலை மேற்கொள் வதற்கான வசதி வாய்ப்புக்களோ இதுவரை மேற்கொள்ளப்பட வில்லை. 350 ரூபா பெறுமதி யான உலர் உணவு நிவாரண முத்திரை மட்டும் வழங் கப்பட்ட நிலையிலுள்ளனர். பாதிக்கப்பட்ட மீனவர்களிற்கான மறுவாழ்வை பற்றி இதுவரை எவரும் சிந்திக்கவில்லை என் பதே வேதனைக்குரியதா கவுள்ளது.



மெலிஞ்சி முனை கடற் றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் வைத்தியான்- மரிய நாயகம் தமது கிராமம் தொடர் பாக பகிர்ந்து கொண்ட கருத் துக்கள். எமது கிராமம் சிறிய கடற்றொழில் கிராமம். எதுவித அடிப்படை வசதிகளுமற்ற நிலை யிலுள்ளோம்.

நீண்டகாலமாக சிறு தொழில்களை செய்து வந்த வர்களில் ஒரு சிலர் பெரிய தொழில்களையும் செய்கின்றனர். சுனாமியால் பாதிக்கப்பட்ட எமது மீனவர்களிற்கு இதுவரை நட்ட ஈடு வழங்கப்படவில்லை. இங் குள்ள குடியேற்றத்திட்டம் மேற்குப் பக்கம் நோக்கியதாகக் கொண்டுபோகிறார்கள். இத னால் பெரும் வசதியீனங்களை இப் பகுதியில் குடியேறுபவர்கள் எதிர்நோக்குகின்றனர். எம் குடியிருப்புக்களைச் சுற்றி பெரும் பற்றைகள் எமது பகுதிக்கு மின்சாரம் இதுவரை வழங்கப்படவில்லை. இதனால் தொடர்ச்சியாக இருட்டில் வாழும் சமூக மாகவே நாம் உள்ளோம். கடற்கரை யோரமாக புதி தாக அரசாங் கத்தினால் அமைத்துக் கொடுக்கப்பட்ட வீடுகளையும், அமைத்து வரும் வீடுகளி னாலும் இப்பகுதி மக்களிற்குப் பெரும் பாதிப்பு. வீதி இல்லை. தண்ணீர் இல்லை. பிரதான வீதிக்கு வருவதற்கான தூரம் என எல்லாவகையிலும் பாதக மான ஒரு வீட்டுத் திட்டத்தையே அரசாங்கம் செய்துள்ளது. இதனை எமது கிராமத்திற்கு முன்பாக செய்து தருமாறு உரிய அதிகாரிகளிடம் பலமுறை கேட்டும் இதுவரை எதுவித நட வடிக்கைகளும் இடம்பெற வில்லை.

1990 ஆம் ஆண்டு இடம்பெற்ற இராணுவ நடவ டிக்கையினால் இடம்பெயர்ந்து எம்மிடமுள்ள அனைத்தையும் முழுமையாக இழந்தனாங்கள். இப்பொழுது சுனாமியாலும் எங்கட தொழில்லை இழந்துள் ளோம். எங்களிற்கு மிக அவசி யமாகத் தேவைப்படுவது வலை கள்தான். கடந்த கால இராணுவ நடவடிக்கைகளினால் கடலிற்குச் சென்றவர்களில் ஆறுபேர் கொல் லப்பட்டுள்ளனர். பலர் அங்க வீனர்களாகவுள்ளனர்.

பல வழிகளிலும் அபி விருத்தி செய்யப்படவேண்டிய எம் கிராமம் நீண்ட காலமாக எதுவித புனரமைப்புப் பணிகளு மின்றியுள்ளது. பொறுப்பானவர் கள், நாடாளுமன்ற உறுப்பினர் கள், நிறுவனம் சார் அதிகாரிகள் முன்வந்து எமது கிராமத்தவர் களது இடர்களில் பங்கு கொள் ளும் வகையில் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ள வேண்டும். நாங்களும் தொடர்ந்து கிராமத்தின் நிலைப்பாட்டை விளக்கி வருகிறோம். இதுவரை யாரும் எமக்கான உதவிகளை வழங்க முன்வரவில்லையென கூறினார். கடற்றொழிலாளர் கூட் டுறவுச் சங்கத்தலைவர் வைத் தியான்- மரியநாயகம்.

மெலிஞ்சிமுனை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் வித்தியாலயத்தின் உப அதிபர் திருமதி சகாயமலர் பகிர்ந்து கொண்ட கருத்துக்கள். 01-05 வரையான வகுப்புக்களை உள்ள டக்கியதான எமது பாடசாலை யில் 92 மாணவர்கள் கல்வி கற்று வருகிறார்கள். இப் பாடசாலையும் கல் விசார், கல்வி சாரா வசதி வாய்ப்புக்கள் இன்றியே உள் ளது. மிக முக்கிய மானது எம் பாட சாலைக்கு குடிநீர் வசதியில்லை. இதனால் மாணவர் கள் நாளாந்தம் பெரும் அசௌகரியங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

சிறுவர் பூங்கா, விளை யாட்டு மைதானம் கூட இல்லை. மாணவர்கள் மேலதிக கல்வி வசதிகளைப் பெறுவதற்கான நூலகவசதியோ, தனியார் கல்வி நிலையங்களோ எவையும் இல்லை. இவற்றினால் மாணவர் களது தேடல் மழுங்கடிக்கப்படு வதுடன் கல்விச்செயற்பாடுகளும் மந்த கதியில் இருப்பதனை அவதானிக்க முடிகிறது. பெற் றோர்களின் பங்களிப்பு ஓரள விற்கு திருப்தியாகவுள்ளமை குறிப்பிடவேண்டியது.

இக்கிராமத்திலுள்ள ஏனைய வகுப்பு மாணவர்கள் ஊர்காவற்றுறையிலுள்ள பாடசாலைகளில்தான் கல்வி கற்று வருகிறார்கள். மிக நீண்ட தூரம் நடந்து சென்றே கல்வி கற்று வருகின்றார்கள். இவர் களிற்கான போக்குவரத்து வசதி களை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும். முன்பு இடம்பெற்ற பாடசாலை மாணவர்களிற்கான வான்சேவையும் இப்பொழுது இடம்பெறுவதில்லை. மாலை நேர வகுப்புக்கள் இடம்பெற்றன அவையும் இப்பொழுது நடை பெறுவதில்லை.

மாணவர்களின் இடை விலகல் மாணவர்களது வீதத் துடன் ஒப்பிடுகையில் அதிகமாக வுள்ளது. இவற்றிற்கு போக்கு வரத்து சீரின்மையும் குடும்ப நிலையுமே காரணமாக உள்ள தெனக் கூறினார். வித்தியாலய உப அதிபர் திருமதி. சகாய மலர். ஊர்காவற்றுறைப் பிர தேச செயலர் பிரிவுக்குட்பட்ட மெலிஞ்சி முனைக்கிராமம் சகல வழிகளிலும் அபிவிருத் தியை எதிர்பார்த்து காத்தி ருக்கும் கிராமம். இங்குள்ளவர் களது வாழ்வை வளம்படுத்த சம்பந்தப்பட்ட சகல தரப்பினரும் ஒன்றித்து இருளில் மூழ்கியுள்ள மெலிஞ்சிமுனைக் கிராமத்தை யும், கிராமத்தவர்களையும் ஒளி ஏற்றி ஏனைய சமூக வாழ் மக்க ளது வாழ்க்கை ஓட்டத்துடன் இணைக்கவேண்டும். மெலிந்து போயுள்ள மெலிஞ்சிமுனைக் கிராமத்திற்கு போஷாக்குண வளிக்க பொறுப்பானவர்கள் முன் வரவேண்டும். முன்வருவார் களா...? மெலிஞ்சிமுனை தொடர்ந்தும் இருளில்தான் இருக்குமா...?

# பிரிட்டிஷ் விமானப்படைக்கு விமானம் வாங்கிக்கொடுத்த ஈழத்தவர்



இலங்கையை ஆண்ட பிரிட்டிஷ் றோயல் விமானப் படைக்கு ஈழத்தமிழன் வாங்கிக்கொடுத்த தாக்குதல் விமானம்.
இது உங்களுக்கு அதிர்ச்சி தரும் தகவலாக இருக்கலாம்.
அந்த விமானம் இன்றும் அரும்பொருட் காட்சியகத்தில் இருக்கிறது. விமானத்தின் பெயர் என்ன தெரியமா? 'யாழ்ப்பாணம்' ஆங்கிலத்தில் ஜாப்னா என்ற பெயரைக்கொண்டதாக அது பயன்படுத்தப்பட்டது. விமானங்களுக்கு குறியீட்டுப்பெயர் இருப்பது தெரிந்த ஒன்று. அந்த குறியீட்டுப்பெயர்தான் அந்த விமானத்துக்கு 'Jaffna'.
விமானம் வாங்கிக் கொடுக்கப்பட்டது 1950 களுக்குப்பின் என்றால் அதிர்ச்சி தரும் தகவல்தான். ஆனால் இது நடந்தது 1915இல், முதல் உலகப்போர்க் காலத்தில்.
முதல் விமானம் ரைட் சகோதரர்களால் தயாரித்து பறக்கவிடப்பட்ட 14 ஆண்டுகளில் ஈழத்தமிழன் ஒரு விமானத்தை இராணுவ தேவைக்காக வாங்கிக் கொடுக்கும் வல்லமையுடன் இருந்தான் என்பது இங்கு முக்கிய செய்தியாக உள்ளது.
முதலாம் உலகப்போர் காலத்தில் தம்மைக் காத்துக் கொள்வதற்காக தமிழன் இந்த விமானத்தை வாங்கிக் கொடுத்திருக்கிறான்.
அந்த விமானம் வாங்கிக் கொடுக்கப்பட்ட கதையைப்பார்ப்பம்.
இந்த விமானத்தை வாங்கிக் கொடுத்தவர்கள் புலம்பெயர்ந்த ஈழத்தமிழர்கள் என்பது உங்களுக்கு அடுத்த அதிர்ச்சித் தகவலாக இருக்கிறது.
ஈழத்தமிழர்களின் முதல் புலப்பெயர்வு பொருளாதாரத்தை ஈட்டுவதற்கானது.
அதற்கான புலப்பெயர்வு சிங்கப்பூரை உள்ளடக்கிய மலேசியாவிற்கு 1800களின் பிற்பகுதியில் நடந்தது. ஏராளமான ஈழத்தமிழர்கள் குறிப்பாக [illegible] து படித்தவர்களாக இலங்கையில் இருந்த யாழ்ப்பாணத்தவர்கள் பொருளா தாரத்துக்காக இந்தப்புலப் பெயர்வை மேற்கொண்டனர்.
1867இல் யாழ்ப்பாணத்தமிழர்கள் மலேசியா நோக்கிய புலப்பெயர்வை மேற்கொண்டனர். மலேசியாவில் தேயிலை றப்பர்த்தோட்டங்களில் மேலதிகாரிகளாக இவர்களின் பணி ஆரம்பமானது. மலாயன் பென்சனியர் என்ற பெயரில் யாழ்ப்பாணத்திலிருந்தர்களை அறியலாம். இந்த புலப்பெயர்வு காலத்தில் இலங்கையை ஆண்டது பிரிட்டிஷ் அரசு. அதனுடைய றோயல்ஆமி, றோயல்நேவி,றோயல் எயார்போர்ஸ் என்ற பெயரில்தான் இலங்கையில் படைகள் இருந்தன.
முதலாம் உலகப்போர் தொடங்கிய காலத்தில் பிரிட்டிஷ் நாடுகள் மீதான தாக்குதல் அபாயம் அதிகமாக இருந்தது.
அந்தவேளையில் பிரிட்டிஸின் ஆதிக்கத்தின் கீழ் இருந்த நாடுகள் பிரிட்டிஷ் படைகளை பலப்படுத்தின.
அப்போது மலேசியாவிலிருந்த பணக்காரர்கள் பிரிட்டிஷ்விமானப்படைக்கு விமானங்களை வாங்கிக் கொடுத்த வண்ணமிருந்தனர். இதன் ஒருகட்டமாக அங்கிருந்த ஈழத்தமிழர்கள் பிரிட்டிஷ் படைகளுக்கு தம்மாலான முழு ஒத்துழைப்புகளையும் கொடுத்தனர். பிரிட்டிஷ் வான் படைக்கு மலேசியர்கள் விமானங்களை வாங்கிக் கொடுக்க தமிழருக்கும் அந்த யோசனை நல்லதாகப் பட்டது.அவுஸ்திரேலியாவிலிருந்து பிரிட்டிஷ் படைகளுக்கு 94 போர்விமானங்கள் தேவை என கோரல் விடப்பட்டபோது அதில் 53 விமானங்கள் மலேசியர்களால் வாங்கிக் கொடுக்கப்பட்டன. 7 விமானங்கள் மலேசியாவின் பணக்காரர்களான ஜோகூர் சுல்தான், கெதா சுல்தான் ஆகியோரால் வாங்கிக் கொடுக்கப்பட்டன.
இதனைப்பார்த்த தமிழர்கள் தாமும் முயன்றனர்.இது கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழியின் ஆட்டம் எனக் கருதிவிட வேண்டாம்.
மலேசியாவின் யாழ்ப்பாணத் தமிழர்களின் முக்கியமானவர்களில் ஒருவரான மல்லாகத்தை சேர்ந்த எம்.சுப்பிரமணியம் என்பவர் விமானக்கொள்வனவிற்கான ஏற்பாட்டில் முன்னோடியாக செயற்படத் தொடங்கினார்.இவர் நில அளவைத் திணைக்களத்தில் பணியாற்றியவர்.யாழ்ப்பாணத் தமிழர்களால் தாக்குதல் விமானம் வாங்கிக் கொடுக்கப்படவேண்டும் என்ற கருத்தை அவர் முன்வைத்தார்.இவரின் முயற்சிக்கு மலேசியா பினாங்கில் வாழ்ந்த மற்றொரு யாழ்ப்பாணத்தவரான பிரௌன். எம். சித்திரவேலு என்பவர் ஊக்கமளித்தார்.இவர்களின் பிரசாரத்தால் இவர்களின் அணி பலமடையத்தொடங்கியது. ஆர்.தம்பிப்பிள்ளை டொக்ரர்.ஈ.ரி.மக் இன்ரையர், எம்.சுப்பிரமணியம், டபிள்யு.எவ். விஜயரட்ணம் செல்லப்பா, வி.எம்.கனகரட்ணம், சுப்பரமணியம்,சண்முகம், மற்றும் பல யாழ்ப்பாண்ததமிழர்கள் 1915 யூலை.19இல் விமானக் கொள்வனவிற்காக விக்டோரியா நிறுவன மண்டபத்தில் ஒன்று திரண்டனர்.அது முதல் கூட்டம். பைற்றர் பிளேன் பண்ட் என்று பெயரிடப்பட்டு நிதி திரட்ட அதில் முடிவானது.சகல யாழ்ப்பாணத் தமிழர் மத்தியில் முழுமையாக பிரசாரம் செய்து நிதியை திரட்ட முடிவானது.
அதன் பின் பினாங்க்கில் நகர மண்டபத்தில்மண்டபம் நிறைந்த தமிழர்கள் திரள நிதி திரட்டல் கூட்டம் நடை பெற்றது.
இது டொக்ரர் ஐசக் தம்பிஐயா தலைமையில் நடைபெற்றது.
இதில் பிரௌன்.எம் சித்திரவேலு ஆயிரம் மலேசிய டொலர்களை விமானக்கொள்வனவு நிதிக்கு வழங்கினார். தொடர்ந்து நிதி குவிந்தது.அன்று 14500 டொலர்கள் வழங்கப்பட்டது. இது பிரிட்டிஷ் போர் அலுவலகத்தில் முதல் கட்டத்தொகையாக வழங்கப்பட்டது.மிகுதி 4800 டொலடர்கள் அடுத்த கட்டமாக திரட்டப்பட்டு வழங்கப்பட்டது. அந்த நிதியில் அப்போது 2250 பிரிட்டிஷ் ஸ்டேர்லிங் பவுணில் தாக்குதல் விமானம் 1915.டிசெம்பர். 22இல் கொள்வனவானது. அதற்கு JAFFNA (யாழ்ப்பாணம்) எனப் பெயரிடப்பட்டு றோயல் விமானப்படையில் இணைக்கப்பட்டது. இந்த விமானக் கையளிப்பு தொடர்பில் பிரிட்டிஷின் கொலனிகளின் செயலாளர் அன்ட்ரு போனர் லோவிற்கு விமான அதிகாரி எப்.ஜி.ஏ.பட்லர் அனுப்பிய கடித்தில் யாழ்ப்பாணத் தமிழர்களின் தாய்மண் பற்றின் வெளிப்பாடாக இந்த விமானக்கொள்வனவு அமைந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.
தமிழரை அடிமை கொண்ட பிரிட்டிஷ் படைகளுக்கு விமானம் வாங்கிக் கொடுத்தது சரியா என்ற வாதம் எழலாம்..
இங்கு பிரிட்டிஷை விட பலமான எதிரியை எதிர்கொள்ள வேண்டிய நிலையில் தான் இது மேற்கொள்ளப்படுகின்றது. இது அன்றைய நிலைமை.
இங்கு எமக்கு முக்கயமானதாக தெரிவது விமானம் கண்டுபிடிக்கப்பட்ட 15 ஆண்டு களில் ஒரு தாக்குதல் விமானத்தை வாங்கிக் கொடுக்கும் பலம் ஈழத்தமிழனிடம் இருந்தது என்பதை இன்று சொல்வதாகும்.
அன்றை விட ஈழத்தமிழனின் புலம்பெயர்பலம் மிக அதிகம்.
அன்று போல் என்பதை விட இன்று வலுவான அதே தேவை த்மிழனுக்கு இருக்கிறது.
மலேசியாவில் உள்ள சிங்களவர் தமிழர் விமானம் வாங்கிக் கொடுத்ததைப் பார்த்து தாமும் விமானம் வாங்க முயன்று தோற்றனர் என்பதையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

**தி.தவபாலன்**

---




# தடையை மீறுகிறது "கொல்கட்டா எக்ஸ்பிரஸ்"



கொல்கட்டா, ஐ.சி.சி விதித்த ஆறு ஒரு நாள் போட்டித் தடையை எதிர்த்து முறையீடு செய்கிறார் சவுரவ் கங்குலி. கிரிக்கெட் சபையின் முன்னாள் தலைவர் டால்மியா, மேற்கு வங்க அரசியல் பிரமுகர்கள் என ஒரு கூட்டமே அவருக்கு ஆதர வாக களமிறங்குகிறதாம்.

பாகிஸ்தானுக்கு எதி ரான ஜாம் ஷெட்பூர், ஆமதாபாத் ஒரு நாள் போட்டிகளில் இந்தியக் கிரிக்கெட் அணி தாமதமாகப் பந்து வீசியது. நிர்ணயிக்கப்பட்ட நேரத்தை விட பந்து வீச அதிக நேரம் எடுத்துக்கொண்டது. அடுத்தடுத்த போட்டியில் இந்தத் தவறு நிகழ்ந்ததால், சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி) விதிமுறைகளின்படி இந்திய அணித்தலைவர் சவுரவ் கங்கு லிக்கு ஆறு போட்டிகளில் விளையாடத்தடை விதித்தது.

அணியின் புதிய தலை வராக ராகுல்ராவிட் துணைத் தலைவராக சேவக் உடனடியாக தேர்வு செய்யப்பட்டனர். பாகிஸ் தானுக்கு எதிரான தொடரின் எஞ்சிய இரு போட்டிகளையும் ராகுல் தலைமையில் இந்தியா சந்திக்கும் என அறிவிக் கப்பட்டது.

இதையடுத்து இந்திய அணியில் இருந்து கனத்த மனதுடன் விடை பெற்று நேற்று முந்தினம் பிற்பகல் வீடு திரும்பி னார்.சவுரவ் கங்குலி கொல்கட்டா விமான நிலையம் வந்திறங்கிய அவரை நிருபர்கள் முற்றுகை யிட்டனர்.

எதுவும் பேச மறுத்து விறுவிறுவென வெளியேறினார்.

நிருபர்களும் விடுவதாக இல்லை. பின்னால் விரட் டிக்கொண்டு போக.... காரில் ஏறியபடி பார்க்க லாம் நான் இன்னும் எந்த முடி வும் எடுக்கவில்லை. கிரிக்கெட் சபை நிர்வாகிகளிடம் இன்னும் பேசவில்லை. இப்போதுதானே வந்திருக்கிறேன்? முதலில் ஜக்மோகன் டால்மியாவிடம் பேச வேண்டும். அதன்பின் எந்த முடி வும் எடுப்பேன் என சொல்லி விட்டு கதவைச் சாத்திக்கொண் டார் சவுரவ்.

வீட்டுக்குச்சென்ற சிறிது நேரத்தில் கிளம்பினார் சவுரவ். இந்திய கிரிக்கெட் சபை முன் னாள் தலைவர் ஜக்மோகன் டால்மியா அலுவலகம் சென்று அவரைச் சந்தித்தார். இருவரும் மிக நீண்ட நேரம் ஆலோசனை நடத்தினர். பிறகுவெளியே யாரையும் சந்திக்காமல் வீடு திரும்பினார் கங்குலி. டால்மியா அலுவலக வட்டாரங்களிடம் விசாரித்த போது தடையை எதிர் த்து முறையீடு செய்கிறார் சவு ரவ், முன்னாள் முதல்வரும் சட்ட நிபுணருமான சித்தார்த்சங்கர்ரே உதவியுடன் இந்தப் பிரச் சினையை எதிர்கொள்கிறார். இதற் காக ரே மற்றும் சில அரசியல் பிரமுகர்களை தொடர்புகொண்டு ஆலோசித்துவருகின்றார் கங்குலி.



"கரையோர சூழல் பாதுகாப்பு இயற்கை அனர்த்த அழிவுகளை கட்டுப்படுத்தும்" என்ற தலைப்பில் நீர் உயிர்வள ஆசிரிய சங்கத் தலைவர் அவர்கள் பத்திரிகை களில் ஒரு கட்டுரையினை எழுதியிருந்தார். சிறிய கட்டுரையாக இருந்தாலும் அதில் கூறப்படும் விடயம் முக்கியமானது என்பதை எங்கள் மண் எங்கள் வளங்கள் என்ற ரீதியில் அக்கறை கொள்ளும் அனைவரும் கவனிக்கவேண்டும்.

# பொருண்மிய வாசல்

## எங்கள் மண்ணின் மாண்பு

**சிதம்பரதிரு**

கடந்த வருடம் டிசெம்பர் 26 இல் எமது கடற்கரையோரத்தை விழுங்கிக் கொண்ட சுனாமிப் பேரலைகளின் தாக்கமும் அதனால் எம்மை பீடித்த அச்சமும் இன்னமும் எம்மை விட்டு நீங்கவில்லை.

உண்மையில் கரையோர சூழல் பாதுகாப்புத் திட்டங்களை உரிய முறையில் நடைமுறைப் படுத்துவதன் ஊடாக எதிர்காலத்தில் "சுனாமி" போன்ற இயற்கை அழிவுகளில் இருந்து எமது மண்ணை பாதுகாக்க முடியும் என வலியுறுத்தப்படுகின்றது.

- கடல் அணைகளை உருவாக்கலும் தடைச்சுவர்களை அமைத்தலும்.
- கரையோரப் பகுதிகளில் மண் அகழ்வதைத் தடுத்தல்.
- முருகைக் கற்கள் அகழ்வதைத் தடுத்தல்.
- காற்றுத் தடை வேலிகளை அமைத்தல்.
- கண்டல் காடுகளைப் பேணுதல்.

போன்ற திட்டங்கள் கரையோரப் பாதுகாப்புக்கு பொருத்தமான சில நடவடிக்கைகள் ஆகும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சுமாத்திரா - இந்தோனேசியாப் பகுதிகளில் நாளாந்தம் ஏற்படும் பூமியதிர்ச்சிகள் ஒவ்வொன்றும் எமக்கு கடைசி மன அதிர்வுகளையாவது உண்டு பண்ணியபடி உள்ளது.

எனினும் "சுனாமி" அலை பாதிப்பு எதிர்காலத்தில் இல்லையென யாராலும் உறுதி செய்ய முடியாத சூழ்நிலையில் எமது கரையோரங்களைப் பாதுகாக்க நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

## விவசாய நிலம் உவராவதைத் தடுப்பது எப்படி...?

விவசாய நிலம் உவராவதற்கு பல காரணங்கள் உள்ளன. வெள்ளப்பெருக்கு, சூறாவளி, கடற்பெருக்கு ஏற்படுகிற வேளைகளில் கடல் நீர் வயல் நிலங்களில் உட்புகுவதால் உவர்த்தன்மை ஏற்படுகின்றது. இந்த வகையில் சுனாமி ஆழிப் பேரலையால் விவசாய நிலங்களில் உப்பு நீர் புகுந்து பயிர்கள் அழிவுக்குள்ளானதோடு வயல்களிலும் தேங்கி நின்ற உப்பு நீர் விவசாய நிலத்தில் ஊடுருவி இருக்க வாய்ப்புள்ளது.

இந்த நீர் நிலத்தின் கீழ் உட்புகுந்து மண் கீழ்ப்படை அடுக்கில் பிடித்து வைக்கப்படுகின்றது. பின்னர் வரட்சியான காலங்களில் மீண்டும் மேல் நோக்கிக் கொண்டுவரப்பட்டு நிலத்தின் மேற்பரப்பில் உப்புத் தன்மையைக் கொண்டுவருகிறது.

தாழ் நிலங்களுக்கு வெவ்வேறு இடங்களில் இருந்தும் உப்புச் செறிவு நிறைந்த நீர் உட்புகுதல் முறைகள் நெல்லை அறுவடை செய்த பின் தரையை நீண்ட காலமாக உழவு செய்யாது விடும் போது மயிர்த்துளைகள் உடைபடுவதில்லை. இதனால் கீழே உள்ள உப்புக்கள் மேலே கொண்டுவரப்படுகின்றன. நீர்ப்பாசன நீரில் உப்பு அதிக அளவில் காணப்படும்போது உவர்த் தன்மை ஏற்படுகிறது.

வடிகால் அமைப்பற்ற மானாவாரித்தரையாயின் நீரை உட்புகக் கூடிய முறையில் மண்ணுடன் சேதனப் பசளைகளை இடுவதனால் மயிர்த்துளை இடைவெளி கூட்டப்படுகிறது. ஆகவே நீர் உப்புடன் கரைந்து கீழ்நோக்கி வடிந்து மண்ணின் கீழ்ப்படையில் படிவதனால் உப்புத்தன்மையின் தாக்கத்தைக் குறைக்கலாம்.

உவர் நிலங்களில் வளரும் சில தாவரங்கள் நுனி கருகி இலை கருகி இறந்து விடும். நெற்பயிரின் இலைகள் உலரத் தொடங்கி இறக்கும். அல்லது ஒழுங்கற்ற வளர்ச்சியைக் காணலாம். அல்லது தொட்டம் தொட்டமாக எரிந்து காணப்படும்.

நீரை வடியவிடும் தன்மையற்ற சீரான வடிகால் அமைப்புக்கள் அற்ற விளை நிலங்களில் உப்புச் செறிவுடைய நீர் தொடர்ந்தும் தேங்குவதால் உவர்த் தன்மை அடைகிறது.

அதி உயர் வெப்பம், காற்று என்பன மண் கீழ்ப்படையில் உள்ள உப்பை மேற்கொண்டுவரத் துணை செய்கிறது. இதனால் மயிர்த்துளை மூலமாக வெளிக்கொணரப்பட்டு நீருடன் கரைந்த நிலையில் உப்புக்கள் மேலே கொண்டு வரப்பட்டு நீர் ஆவியாக உப்புக்கள் மேற்பரப்பில் படிகின்றன.

ஒழுங்கற்ற பண்பாட்டு

இவ்வாறு காணப்படும் உவர் நிலங்களை திருத்தி பயிர்ச்செய்கைக்கு உகந்ததாக்க முடியும். கூடுதலாக விளைச்சலையும் பெறக்கூடியதாக இருக்கும். இதற்கான வழி முறைகள் என்ன என்பதைப் பார்ப்போம்.

கழுவுதல், உட்புகுதல், வடிகால்கள் அமைத்தல், வரம்புகள் அமைத்தல், நிலத்தைப் பண்படுத்தல், சேதனப்பசளை இடல், பத்திரக் கலவையிடல், எதிர்ப்பினங்களைப் பயிரிடல், உவர் நிலத்தில் வளரக் கூடிய நெல்லினங்களை விதைத்தல் என்பவற்றின் மூலம் உவர்த் தன்மையை நீக்கலாம்.



நெல் வயல்களில் ஆரம்ப உழவுடன் சேதனப்பசளையை இடும் போது இது நன்றாக உக்கி மண்ணின் பௌதீக இயல்புகளை மாற்றி அமைக்கும் இதனால் உவர்த் தன்மை குறையும்.

நெல் அறுவடை முடிந்ததும் சித்திரை, ஆடி மாத மழையுடன் உழுவதால் மண்ணைத் தூர்வையாக்கி மண்ணீர் ஆவியாகுதலைக் குறைக்கலாம்.

நேரடியாகத் தரையில் சூரிய ஒளி படுவதால் நீர் ஆவியாகும் போது மயிர்த்துளைகளிடையே நீரில் உள்ள உப்பு ஆவியாக மேலே கொண்டு செல்லப்படுகின்றது. எனவே பத்திரக்கலவை இடல் மூலம் ஆவியாதலைக் குறைத்து உவராதலைக் குறைக்கலாம்.

உவர் நிலத்தில் எதிர்த்து வளரக் கூடிய பயிர்களை பயிரிடும் போது விதைகள் மூலம் பயிரை நடாது நாற்று மேடை மூலம் பயி ரிட்டு நடுவதன் மூலம் உவர்த் தன்மையால ஏற்படும் எரிவைத் தடுக்க முடியும்.

ஆகவே சுனாமிப் பேரலையால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் தங்கள் வயல் நிலங்களில் உப்பு நீர் புகுந்ததையிட்டு கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை. மேலே கூறப்பட்ட பொருத்தமான நடவடிக்கைகளில் ஈடுபட்டு எதிர்த்து வளரக் கூடிய நெல்லினங்களைப் பயிரிட்டு உச்ச விளைவைப் பெற்றுக்கொள்ள முடியும்.

-எஸ்.கே-


# Manipal U

**available - accessible - affordable – personalized education**

The Sikkim Manipal University of Health, Medical and Technological Science was established by an Act of Sikkim State Legislature in 1995. Manipal is the nucleus of 53 educational institutions, which has an enrollment of 30,000 students. This includes 2 Universities and 27 professional colleges. The student body represents 32 countries and the degrees are recognized in over 40 countries.

The Manipal University has the approval of University Grants Commission and of Common Wealth.

**ADMISSION ANNOUNCEMENT FOR 2005/ 2006**
**MBA / MBA IT**

**Now for the first time** you have the opportunity of obtaining a prestigious **MBA** at the only "Authorized" International Study Centre of Sikkim Manipal University in ***North &East of Sri Lanka.***

### Master of Business Administration (MBA)

The course aims to train graduates in Infrastructure Management Skills required at the higher levels of management. Students will be exposed to the concept of management and the latest Technologies and Strategies required by the relevant industries.

**FIRST SEMESTER**

| Sub code | Title | Credits |
|---|---|---|
| MB 01 | Management process and organization behavior | 4 |
| MB 02 | Internet Application | 2 |
| MB 03 | Marketing Management | 2 |
| MB 04 | Human Resource Management | 2 |
| MB 05 | Operation Management | 2 |
| MB 06 | Financial Management | 2 |
| MB 07 | Management Information System (MIS) | 2 |
| | **Total Credits** | **16** |

**SECOND SEMESTER**

| Sub code | Title | Credits |
|---|---|---|
| MB 08 | Strategic Technology Management | 4 |
| MB 09 | Management of Technology transfer, absorption & IPR | 2 |
| MB 10 | Business Process, Re-Engineering | 2 |
| MB 11 | Enterprise Resource Planning | 2 |
| MB 12 | e-Customer Relationship Management & Supply Chain Management | 2 |
| MB 13 | Conflict Management & Negotiation Skill | 2 |
| MB 14 | History of Management, Case study | 2 |
| | **Total Credits** | **32** |

**THIRD SEMESTER**

| Sub code | Title | Credits |
|---|---|---|
| MB 15 | Infrastructure Management | 2 |
| MB 16 | Fundamentals of Infrastructure Project Financing | 4 |
| MB 17 | Infrastructure Development & Policy Planning | 2 |
| MB 18 | Project Management | 4 |
| MB 19 | Decision Support Systems (DSS) | 4 |
| | **Total Credits** | **48** |

**FOURTH SEMESTER**

| Sub code | Title | Credits |
|---|---|---|
| MB 20 | Elective | 8 |
| MB 21 | Project | 8 |
| | **Total Credits** | **64** |

**ELIGIBILITY**
Degree (any discipline) or equivalent professional qualification.
Work experience will be an added advantages.
Duration : 2 years
(Full time / Part time

### Master of Business Administration in Information Technology (MBA IT)

There is a dramatic and immediate need for executives and IT managers who not only understand the strategic use of IT, but also have a strong business orientation and well developed leadership, communications and management skills. That's where our MBA in IT Management can help.

**FIRST SEMESTER**

| Sub code | Title | Credits |
|---|---|---|
| MI 0001 | Management Process & Organization Behavior | 4 |
| MI 0002 | Window based application | 4 |
| MI 0003 | Marketing Management | 2 |
| MI 0004 | Financial Accounting | 2 |
| MI 0005 | Business Applications of IT | 2 |
| MI 0006 | Internet (HTML) | 2 |
| | **Total Credits** | **16** |

**SECOND SEMESTER**

| Sub code | Title | Credits |
|---|---|---|
| MI 0007 | Human Resource Management | 4 |
| MI 0008 | Visual Basic | 4 |
| MI 0009 | Operations Management | 2 |
| MI 0010 | Financial Management | 2 |
| MI 0011 | C++ | 2 |
| MI 0012 | Oracle | 2 |
| | **Total Credits** | **32** |

**THIRD SEMESTER**

| Sub code | Title | Credits |
|---|---|---|
| MI 0013 | Management Information System (MIS) | 4 |
| MI 0014 | e-Business and IT law | 4 |
| MI 0015 | Conflict Management & Negotiation Skills | 2 |
| MI 0016 | Software Project Management | 2 |
| MI 0017 | Website Management & Design | 2 |
| MI 0018 | Data Warehousing, Data Mining | 2 |
| | **Total Credits** | **48** |

**FOURTH SEMESTER**

| Sub code | Title | Credits |
|---|---|---|
| MI 0019 | E-CRM & Supply Chain Management | 4 |
| MI 0020 | International Business | 4 |
| MI 0021 | Enterprise Resource Planning | 4 |
| MI 0022 | New Technologies | 2 |
| MI 0023 | Project | 2 |
| | **Total Credits** | **64** |

**ELIGIBILITY**
Degree or equivalent professional IT qualification.
Work experience will be an added advantages.
Duration : 2 years
(Full time / Part time

www.manipalu.com
**Manipal International Study Center @ IIS City Campus**
# 181, Navaler Road, Jaffna.
Tel:021 222 8060, 021 222 2201
Fax: 021 222 6933
E-mail: iis@sltnet.lk

Sikkim Manipal University India
Manipal INSPIRED BY LIFE

(c-11709)

# சின்ன நாடான நெதர்லாந்திட்ட எங்கட முன்னோர் ஏன் தோத்தவை?




"வணக்கம் எல்லாருக்கும்! எப்பிடி இருக்கிறீயள் ? பாப்பரசரும் காலமாகிட்டார். என்னதான் 85 வயசாகினாலும் உலகத்தலைவர்கள் எண்டளவில பாதிக்கப்பட்டவர்களின்ரை அபிலாசையளைப் புரிஞ்சு குரல் கொடுத்து வந்த ஒருசிலரில, முக்கியமான அவரின்ர இழப்பு சாதாரணமானதில்லை. அவர் கொண்டிருந்த இறுக்கமான மதவழக்கங்கள் குறிச்சு பரவலான விமர்சனம் இருக்கிறதை நான் மறுக்கேல்லை. ஆனால், தன்னுடைய வட்டத்துக்குள்ள நிண்டு கொண்டு உலகநாட்டு மக்கள் சகலரையும் மதிச்சவர் அவர். நவாலியிலை சந்திரிகாவின்ர விமானங்கள் தாக்கி நூற்றுக்கணக்காக எங்கட சனத்தைக் கொன்றழிச்ச நேரம், பகிரங்கமாகக் கண்டிச்ச ஒரேயொரு உலகத்தலைவர் அவராத்தான் இருக்க முடியும். ஈராக் விசயத்திலையும் துணிஞ்சு கண்டிச்சவர். உண்மையிலையே பொறுப்பெண்டு சொல்லி இருக்கிறவங்கள் செய்யாமல் சோரம் போய்க்கொண்டிருக்க, மதத்தலைவராய் இருந்தாலும் எல்லா மக்களுக்கும் பொதுவாய் பாப்பரசர் தன்னால முடிஞ்சதைச் செய்தவர். இப்ப என்ன பாருங்கோ உலகம்! சும்மா பம்மாத்துக்கதையளைக் கதைச்சுக்கொண்டே காலம் ஓட்டிறாங்கள். போயும் போயும் உந்த ஒற்றைப்பொடிச்சியை வெட்டி ஓடிட்டு இஞ்சால வந்து போக வக்கில்லாத ஆக்களெல்லாம், ஏதோ 50 வருசம் காணாத வரலாற்றுப் புனர்நிர்மாணம் செய்யப்போயினமாம்! முதுகெலும்பில்லாத முழக்கங்களை எல்லாம் நான் சவைக்கே எடுக்கிறேல்லை. ஏதோ என்ரை பிரார்த்தனை எல்லாம் பரவலாய் பேசப்படிற பிரேசில் இல்லாட்டி தென்னாபிரிக்க கார்டினால் புதுப்பாப்பரசராய் வரோணும் எண்டிறதுதான். அது இரண்டும் கொஞ்சம் வித்தியாசமான நாடுகள். அதை விட்டிட்டு அமெரிக்காவும் சிலநேரம் ஆசைப்படக்கூடும் தானே! ஏன் சந்திரிகாவுக்கே தன்ரை ஓராளை விடமுடிஞ்சால் எப்பிடியிருக்கும் எண்டொரு நப்பாசை இருக்காதோ! ஏதோ பொறுத்துப் பார்ப்பம்!

உந்தப்பதவியளைப் பற்றிக் கதைக்கேக்க தான் ஒரு விசயம் ஞாபகத்துக்கு வருகிது. அமெரிக்கா ஈராக் மேல யுத்தம் மேற்கொள்ளிறதுக்கு மும்மரமாய் நிண்ட தன்ரை வொல்சோவிற்ஸ் எண்டவரைத்தான் புஸ் அரசு உலகவங்கித்தலைவர் பதவிக்கு முன்னிறுத்தியிருக்கிது. அந்தாள் சரியான யுத்தப்பிரியர், உந்தப்பதவிக்கு சரிப்பட்டு வரார் எண்டு கனநாடுகள் புறுபுறுக்கினம். நீங்கள் நினைப்பியள் அதுக்கென்ன அந்தப் பதவிக்கான தேர்தல் வரேக்கிள்ளை எல்லா நாடுகளும் சேர்ந்து அமெரிக்காவை ஒரு கை பார்த்துவிடும் தானேயெண்டு. ஐயோ குஞ்சுகள்! யதார்த்த ஜனநாயகத்தின்ரை அடிநுனியளை நீங்கள் விளங்கிக்கொள்ளோணும். 2ஆம் உலகயுத்தம் முடிஞ்ச கையோட ஐரோப்பாவும், அமெரிக்காவும் ஒரு உடன்படிக்கை செய்துகொண்டவை. அதின்படி உலகவங்கியின்ர தலைவர் எப்பையும் ஒரு அமெரிக்கராய்த்தான் இருப்பார், அமெரிக்கா தான் அந்த ஆளையும் தீர்மானிக்கும். இதைக்கேட்ட ஐரோப்பா உடன தனக்கும் வேணுமெண்டு அழத்தொடங்கீட்டிதாம். 'சரி சரி! சர்வதேச நாணய நிதியத்தின்ர தலைவராய் எப்பையும் உங்கட ஓராளையே நியமியுங்கோ! நாங்கள் ஏற்றுக்கொள்ளிறம்', எண்டிச்சிதாம் அமெரிக்கா. இரண்டு தரப்புக்கும் நல்ல திருப்தி! இப்பிடியே தொடரிது ஜனநாயகம்(?). அப்ப மிச்ச நாடுகள்? 'அங்கை பாருங்கோ, சந்திரனிலை ஔவைப்பாட்டி நெய்த்தோசை சுட்டுக்கொண்டிருக்கிறா! தெரியேல்லையோ? வடிவாய் தெரியும் மட்டும் பார்த்துக்கொண்டிருங்கோ!'. அவங்கட சுத்துமாத்துகளை நாங்கள் விளங்கிக்கொள்ள முயற்சிக்காமல், பேய்க்குஞ்சுகளாக இருந்திருக்கிறோம் எண்ட கசப்பான உண்மையை நாங்கள் ஏற்றுக்கொள்ளத்தான் வேணும்.

சரி சரி நானும் கடலுகள் கடந்து கனதூரம் வந்திட்டு வழமையான விசயங்களைக் கதைச்சுக்கொண்டிருந்தால் உங்களுக்கும் கோவம் வந்திடும். அதுக்காக அப்பப்ப நடக்கிற விசயங்களை நாங்கள் அறிஞ்சுகொள்ளாமல் போனால், காலாகாலத்துக்கும் ஆவெண்டு கொண்டிருக்க வேண்டியதுதான். அண்டைக்குப் பாருங்கோ விமானம் இறக்கப்பட்டபாடு. பனிப்புகாருக்குள்ளை பெரிய கஸ்ரப்பட்டு ஒருமாதிரி சுபமாய் முடிஞ்சிது. KLM எண்ட நெதர்லாந்து நாட்டு விமானசேவை. ஏன் Air lanka வில போகேல்லை எண்டு கேட்கப்போறீயளாக்கும். எங்கட பிள்ளையள் உயிரைக் கொடுத்து அடிச்சுநொருக்கிப் போட்டிருக்க சிறிலங்காவுக்கு ஏதோ ஒருவகையில வருமானத்தைக் குடுக்கிற எயர்-லங்காவில ரிக்கற் எடுத்து 80-90ஆயிரம் எண்டு கொட்டிக்கொடுக்க நான் என்ன அவ்வளவு கிறுக்கனே! தவிர்க்க முடிஞ்ச இடங்களில தவிர்க்கோணும். உவங்களை விட ஆரோ ஒரு வெள்ளைக்கார நாடு உருப்படட்டும் எண்டுதான் 2700 ரூபாய் கூடினாலும் KLM இல ரிக்கற் செய்தனான். எனக்கு விசர் எண்டு நீங்கள் நினைப்பியள். நான் கட்டுநாயக்காவில உயிரைக்குடுத்த எங்கட கரும்புலியளை நினைச்சன். அப்பிடியாய் அங்கை போய் கீழ இறங்கி நிலத்தில கால்வைக்க வெளிக்கிடேக்கிளை தான் இருந்தாப்போல ஒருவிசயம் என்ர ஞாபகத்துக்கு வந்து, ரோசம் ரோசமாய் பொங்கிச்சிது. நெதர்லாந்தின்ரை தலைநகரம் அம்ஸ்ரடாமிக்குத்தான் நான் வந்தனான். சே! அவசரப்பட்டு ரிக்கற்றைப் போட்டிட்டனே! என்ன இருந்தாலும் எங்களை 1658 இல இருந்து 1796 வரைக்கும் தங்கட அடிமைநாடா வைச்சிருந்தவங்களெல்லே! படிக்கேக்கை நெடுகலும் ஒல்லாந்தர் எண்டு பாடமாக்கினதால, அதுதான் நெதர்லாந்து எண்டிற ஹொலண்ட் எண்டதை யோசிச்சுப்பார்க்க மறந்திட்டன். எட பிடிச்சதுதான் பிடிச்சாங்கள் தாங்களே வைச்சு ஆண்டிருக்கலாமெல்லே! அதைவிட்டிட்டு உந்த குறுக்கால போற பிரிட்டிஷ்காரங்களிட்டை ஏன் குடுத்தவங்கள்? டொனமூர், சோல்பரி, மன்னிங் எண்டு காலத்துக்கொரு சீர்திருத்தத்தைக் கொண்டுவந்து இனப்பிரச்சினைக்கு தூபம் போட்ட நரியளே பிரிட்டிஷ்காரர் தானே! சரி சரி! இனியென்ன செய்யிறது யோசிச்சு! வந்திட்டம், இந்த நாட்டையும் சுத்திப்பார்ப்பம். சொந்தக்காரரும் கூட்டிக்கொண்டு போக வந்துநிற்பினம். நடந்தது நடந்து போச்சு எண்டிட்டு நாட்டுக்குள்ள வந்திட்டன்.

ஐயோ பாருங்கோ! வந்து இறங்கினதில இருந்து ஒரே சுத்துதான். எல்லாரும் வேலைவெட்டியெண்டு ஓய்வில்லாமல் சுழண்டு கொண்டிருந்தாலும் ஆள் ஆள் மாறி என்னை ஒவ்வொரு இடமாய்க் கொண்டுபோய் சுத்திக்காட்டுவினம். அவையளுக்கும் என்னை நல்லாய்ப் பிடிச்சுப்போச்சு. அதுக்கு அவையள் சொன்ன காரணம் "அப்பு! உங்களின்ர வயசில சாதாரணமா எல்லாருக்கும் அறளை பேர்ந்திடும். ஆனால், நீங்கள் அப்பிடியில்லை. நல்ல cool-type". ஓகோ எண்டானாம், உந்த generation-gap எண்டு சொல்லி தலைமுறை இடைவெளியளுக்குள்ளை பிரச்சினை வர்றதுக்கு உதுதான் காரணம் போல இருக்கு.



இந்த நெதர்லாந்து (ஹொலண்ட்- தமிழ்த் திரிபு: ஒல்லாந்து) நாடு கிட்டத்தட்ட இலங்கைத்தீவின்ரை பரப்பளவில பாதிதான் இருக்கும். கிழக்குப்பக்கம் யேர்மனியையும், தெற்குப்பக்கம் பெல்ஜியத்தையும் எல்லையாய்க் கொண்டிருக்கிது. மற்றம்படி வடக்கு, மேற்குப்பக்கங்கள் கடல். சனத்தொகை எண்டு பார்த்தால் ஒரு 16 மில்லியன் (1.6 கோடி). அதிலையும் பாருங்கோ 2ஆம் உலகயுத்தகாலத்தில இவையள்ளை 5 லட்சம் பேருக்குக்கிட்ட இடம்பெயர்ந்து வேறநாடுகளுக்குப் போயிருக்கினம். அமெரிக்கா, அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா எண்டு இந்தச்சனம் குடிபெயர்ந்த கட்டமும் இருந்திருக்கிது. ஆனால் இண்டைக்கு மற்ற நாட்கள் தேடிவந்து வாழ விரும்பிற அளவுக்கு தங்கட நாட்டை உயர்த்தி வைச்சிருக்கிறாங்கள்.

அதிலையும் பாருங்கோ ஐரோப்பாவிலையே வேலையில்லாதவர்களின்ரை விகிதம் குறைஞ்ச நாடெண்ட பெருமை நெதர்லாந்துக்குத்தான். மற்றது எங்கை பார்த்தாலும் படத்திலை நீங்கள் காணிறமாதிரி காற்றாடியளைக் காணலாம். இதுகளைப் பாவிச்சு மா அரைக்கிறது, மரம் சீவிறது எண்டு கன அலுவல்களைப் பார்க்கலாம். நாடு முழுக்க 9000 காற்றாடியளுக்குக் கிட்ட இருக்கிது. ப்பூ! ஒரு ஜெனரேற்றருக்கு வக்கில்லாமல் உந்த மியூசியப்பொருட்களை வைச்சே ஹொலண்ட் காலம் தள்ளுதெண்டு யோசிச்சுப்போடாங்கோ! இதுகளை அவை அமைச்சது 1800களில. அப்பதான் நாங்கள் பிரிட்டிஷ்காரங்கள் இலவசமாய்த் தந்து பழக்கின தேத்தண்ணியின்ரை மயக்கத்திலை எங்கட கொத்தமல்லித்தண்ணி, குரக்கன், ஒடியல் எல்லாத்தையும் கோட்டை விடத்தொடங்கின காலம். இப்ப அதிகமான காற்றாடியளை தங்கட நாட்டுக்கைத்தொழில் பூர்வீகத்தை அடையாளப்படுத்திற காட்சிப்பொருளாய் வைச்சிருக்கினம். மற்றம்படி நவீனமுறையளாலதான் மின்சாரத்தைப் பெற்றுக்கொள்ளினம்.

நெதர்லாந்தின்ரை மொழியை டச் எண்டு சொல்லிறது. நாணயம் 2002ஆம் ஆண்டில இருந்து யூரோ. அதுக்கு முதல்லை கில்டர் எண்டு பெயர். இந்த யூரோ காசு பாருங்கோ இந்த நாட்டில மட்டுமில்லாமல் யேர்மனி, பெல்ஜியம், பிரான்ஸ், லக்சம்பேர்க், ஸ்பெயின், போர்த்துக்கல், இத்தாலி, ஒஸ்திரியா எண்டு கனநாடுகளின்ரை பொதுநாணயமாயும் இருக்கிது. எங்கட ஊடகங்களில அறிஞ்சுகொள்ளுங்கோ எண்டுசொல்லி, இன்னும் பழைய பிராங்க், மார்க் எண்டுகொண்டிருக்கினம். எனக்குப் பாருங்கோ கனநாளாய் ஒரு சந்தேகம் இருந்தது. எங்கட பழைய மன்னர்கள் கடாரம், கிடாரம், சுனாமி சுமாத்திரா, கம்போடியா எண்டெல்லாம் கனக்க ஆண்டவை. அப்பிடியிருக்க எங்களை விட சின்ன நாடான நெதர்லாந்திட்டை என்னண்டு தாக்குப்பிடிக்கேலாமல் தோத்தவை எண்டு கனநாளாய் யோசிச்சனான். இப்பதான் விளங்கிது : வெற்றி எண்டிறது எங்கட மனோபலத்திலையும், அதுக்கான தன்னம்பிக்கையுடன் கூடின உழைப்பிலயும் தான் முக்கியமாய் தங்கியிருக்கிது. என்னெண்டு உந்த விசயம் எனக்கு விளங்கினதெண்டால் பெயரைப் போலவே நெதர்லாந்தின்ரை (Netherland-Nether (தாழ்வான)+ Land(நாடு)) அரைவாசிப்பகுதி கடல்மட்டத்தை விட தாழ்வாகத்தான் இருக்கிது. குறிப்பாய் கடலை அண்டின மேற்குப்பகுதியை மிகமோசமான அச்சுறுத்தலுக்குள்ளான இடமெண்டு சொல்லலாம். அதுவும் வடதுருவப் பகுதியில பனி கரையக்கரைய கஸ்ரம் தானாம். உப்பிடித்தான் 1953ஆம் ஆண்டு வெள்ளம் பெருகி எல்லாம் அடிச்சுக்கொண்டு போனதில 2000 பேருக்குக்கிட்ட பலியாகிட்டினமாம். அதைப்பார்த்திட்டு அரசாங்கம் ஒரு பெரிய திட்டம் போட்டினமாம். அதின்படி நீரோட்டங்களின்ரை வேகத்தை மட்டுப்படுத்தி கிளையாறுகளா நாடு முழுக்க சுத்தித்திரிய விட்டதோட, கடற்கரையை அண்டி கால்வாய்கள், அணைகள் எண்டெல்லாம் கட்டிச்சினமாம். இதால நாடு முழுக்க நீர்வழிப்பாதையும் தாராளமா ஏற்பட்டதோட குளிர்மையும், அழகும் நிறைஞ்சு வேறிருக்கு. இந்தத்திட்டம் 1986 இல தான் முடிவடைஞ்சது. இப்ப என்னதான் பெரிய மழையடிச்சாலும் ஒரு பிரச்சினையில்லாமல் எல்லாரும் சோக்காய் இருக்கினம். 30 வருசமாய் திட்டம் போட்டு அவையள் உழைச்சதின்ரை பயன் தானே அது! 'ஹலோ ஏரம்பர்! அப்ப எங்களிட்டை உந்த மனோபலம், தன்னம்பிக்கை ஒண்டுமில்லை எண்டு சொல்ல வாறீரோ?', எண்டு வெளிக்கிடிறியள் போல. வாங்கோ! எந்தக்கோயில்லையும் அடிச்சு சத்தியம் பண்ண நான் தயார். கடல்மட்டத்துக்கு கீழ இருந்தாலும் அவங்கள் தங்கட உழைப்பால எப்பிடி இருக்கிறாங்கள் எண்டொருக்கால் யோசியுங்கோ! முந்தி எங்களிட்டை உந்தக்குணங்கள் இருக்கேல்லைத்தான்! இப்பை எங்கட தலைவர் கிடைச்ச புண்ணியத்திலை நிலைமை மாறியிருக்கு. முந்தி நாங்கள் வாயால வாழ்ந்தனாங்கள்(?), செயலாலை வாழிறதுக்கான வாய்ப்பு இப்பை எங்கள் எல்லாருக்கும் கிடைச்சிருக்கு.

ஐயோ! ஒரு சம்பவம் உங்களுக்கு நான் கட்டாயம் சொல்லோணும். இஞ்சை அம்ஸ்ரடாம் (தலைநகரம்), றொற்றடம், தி ஹேக் அல்லது டன் ஹாக் (சர்வதேச நீதிமன்றம் இருக்கிற இடம்) எண்டு கனஇடங்களெல்லாம் சேர்த்து 10000 பேருக்குக் குறையாமல் எங்கட தமிழ்ச்சனங்கள் இருக்கினம். தமிழ்மொழி வகுப்புகள், கடையள், நுண்கலை வகுப்புகள், நிகழ்ச்சிகள் எண்டு தமிழ்மணம் வீச எல்லாரும் நாட்டை மறக்காமல் இருக்கினம். அண்டைக்கொரு நாள் தங்கியிருந்த வீட்டில இருந்தாக்கள், "அப்பு! இதிலை கோலங்கள் நாடக கசற் முடியும் வரைக்கும் இருக்கிது. பார்த்துக்கொண்டிருங்கோ, பின்னேரம் வந்திடுவம்" எண்டிட்டு எல்லாரும் வேலையாய் வெளியால போயிட்டினம். 'எட உதைப்பார்த்து முடிக்கிறதுக்குள்ளை நான் முடிஞ்சிடுவன்' எண்டிட்டு வெளியால ஒரு உலா நடை ஒண்டடிப்போமெண்டு, போர்த்துக்கட்டிக்கொண்டு (ஏப்ரல் மாதம் எண்டதால ஒரே குளிர்காத்துப் பாருங்கோ) இறங்கினன். அப்பிடியே எல்லா இடமும் சுத்திப்பார்த்துக் கொண்டு வந்தன். இடையிலை உணவுத்தொகுதியையும் கொஞ்சம் கவனிச்சன். Hot-Dog வேண்டிச்சாப்பிட்டன். ஐயைய்யோ சுடச்சுட நாய்-இறைச்சி எண்டு என்னைப்பற்றி தப்பாய் நினைச்சுப்போடாங்கோ ! அவிச்சுப்பதப்படுத்தின பண்டிறைச்சி போத்திலுக்குள்ளை இருக்கு. அதை சுடுதண்ணியிலை 3-4 நிமிசம் அவியப்போட்டிட்டு எடுத்து, மிளகு சோஸ் சேர்த்துச் சாப்பிடிறது. எங்கட நாட்டு வீதியளில நடந்துகொண்டு சாப்பிட்டால், ஆக்கள் ஒருமாதிரி பார்ப்பினம். இஞ்சை அதெல்லாம் சர்வசாதாரணம். கோட்சூட் போட்ட ஆக்களெல்லாம் ஒற்றைக்கையில சூட்கேசும், மற்றக்கையில ஏதாவது சாப்பிட்டுக்கொண்டும் வேலைக்குப் போவினம். உது எங்கட கலாச்சாரம்(?) இல்லைத்தானே! லட்சங்களோட வந்த 'குக்கர்' (பெண்கள் மன்னிக்கவும்) ஒரு மணித்தியாலத்துக்கு மேலாய் குக்கினதை அரை மணிததியாலமாய் (காலையுணவு) மூக்கு முட்ட சாப்பிட்டிட்டு, வேலையிடத் தில போய் நித்திரை முட்ட விழுகிறதுதானே (எல்லோரையும் சொல்லவில்லை) எங்களுக்கு விருப்பம். அப்பிடியே பாருங்கோ எல்லா இடமும் சுத்திப்பாத்திட்டு வீட்டை திரும்புவோம் எண்டுபார்த்தால் ஒண்டுமா விளங்கேல்லை. வலக்கைப்பக்கமாய் 2 உயர்ந்த கட்டடங்களை குறிப்பு வைச்சுக்கொண்டு நடந்தனான். திரும்பப் பார்த்தால் எல்லாப்

(22ஆம் பக்கம் பார்க்க)



# உளவியல் நவீனம்...

## அத்தியாயம்- 08

### பகுதி -43


அல்லது மூளைப் பாதிப்பு உள்ளவனோ அல்ல என்று கூறிய அவர் தான் கண்ட பிள்ளைகளில் ஆகக் கூடிய அளவில் நிராகரிக்கப்பட்டவனும் உணர்வுரீதியான இழப்புகளுக்கு உள்ளாக்கப்பட்டவனுமாக அவன் இருப்பதாகச் சொன்னார். உதவி தேவைப்படுபவர்களாக இருப்பது நானும் எனது கணவரும் தான் என்று அவர் சொன்னார். எங்கள் இரண்டு பேருக்குமே சிகிச்சையளிக்க வேண்டும் என்று கருத்துக் கூறினார். நாங்கள் பெற்ற அனுபவங்களிலேயே ஆகக்கூடிய அதிர்ச்சியை தந்தது அது தான். நானும் எனது கணவரும் போதியளவில் செயற்பட்டு வந்தோம் என்று எவருக்கும் தெரியும் நாங்கள் எப்போதுமே, தன்னிச்சையான கட்டுப்பாடற்ற சமூக வாழ்க்கைக்கு ஆசைப்பட்டவர்களல்ல. ஆனால் எங்களுக்கு இருந்த சில நண்பர்களும் தொழில் முறை சகபாடிகளும் எங்களை மதித்தார்கள் எங்களுடைய சொந்த தனிப்பட்ட வாழ்க்கையை எங்கள் வழியில் வாழ்வதற்கு நாங்கள் கொண்டிருந்த விருப்பத்தை மதிப்பவர்களாக இருந்தினம். நாங்களே சமாளிக்க முடியாத அளவிலான தனிப்பட்ட பிரச்சினைகள் எதையும் நாம் ஒருபோதும் எதிர்கொள்ளயில்ல.

"நாங்க டிப்ஸை மீண்டும் வீட்டுக்குக் கொண்டுவந்து எங்களால முடிஞ்ச அளவுக்கு அவன சிறப்பாகக் கவனிச்சம். ஆனா அது என்ர குடும்ப வாழ்க்கையை கிட்டத்தட்ட நாசமாக்கி விட்டுது."

"எங்கட இந்த அனுபவத்தை நாங்க ஒருத்தருக்கும் சொல்லயில்ல. எங்கட குடும்பங்களுக்குக் கூட நாங்க சொல்லயில்ல. பாடசாலைக்கு ஒருபோதுமே சொல்லயில்ல. ஆனா என்ர கணவர் அதிகம் அதிகம் விலகிச் செல்ல ஆரம்பித்தார். டிப்ஸ் பிறந்து ஒரு வருசத்துக்குப் பிறகு டொறத்தி பிறந்தாள். இன்னொரு பிள்ளை இருப்பது அவனுக்கு உதவும் எண்டு நான் நினைச்சன். ஆனா அதுகள் இரண்டுக்கும் ஒத்துப்போகயில்ல. ஆனா டொறத்தி முழு நிறைவான ஒரு பிள்ளையா இருந்தா. தவறு எங்களுடையதில்லை என்பதற்கு அவள் ஒரு சான்றாக இருந்தாள். பிறகு நீங்கள் டிப்ஸைச் சந்தித்த பாடசாலைக்கு அவன அனுப்பினம்.

"ஒரு உளவளம் குன்றிய பிள்ளை இருக்கிறதால ஏற்படுகிற துன்பத்தப் பற்றியோ, வேதனையைப் பற்றியோ ஆரும் அறியமாட்டினம். அவனோட கொஞ்சமாவது தொடர்பு பட்ட ஒரே ஆளா அவன்ர பேத்தி தான் இருந்தா. டிப்ஸ் பிறந்த பின்வந்த ஒரு மாச காலத்துக்கு அவ எங்களோடதான் இருந்தவ. நாங்க புளோறிடாவுக்கு போகுமட்டும் மாசத்துக்கு ஒரு தரம் எண்டமாதிரி மூண்டு வருசத்துக்கு வந்து பார்த்திட்டுப் போறவ. அதுக்குப் பிறகு வருசத்துக்கு இரண்டு தரம் வந்து ஒவ்வொரு மாசம் அளவில தங்கிப் போறவ.டிப்ஸ் எப்பவும் அவவை நினைச்சுக் கொள்ளுவான். அவ வந்தாவெண்டா அவவோட ஒட்டிக்கொள்ளுவான் அவபோன பிறகு அவவைப் பற்றி ஏங்கிக்கொண்டிருப்பான். அவ திரும்பி வரப்போற நாள அவன் எண்ணிக் கொண்டிருக்கிற மாதிரியிருக்கும்.

"டிப்சுக்கு என்னால முடிஞ்ச அளவுக்குச் செய்திட்டன். காசால எதெத வாங்கேலுமோ அதை எல்லாம் வாங்கிக் குடுத்தம் அது உதவும் எண்டு நாங்க நினைச்சம் விளையாட்டுச்சாமான்கள். இசை விளையாட்டுகள், பொத்தகங்கள். எல்லாத்தையும் வாங்கிக் கொடுத்தம். அவனுக்கு பொழுது போக்க உதவும், கல்வியூட்டும் அவன உற்சாகப்படுத்தும் எண்டு நாங்க நினச்ச பொருட்களால அவன்ர அறை நிரம்பிக் கிடக்குது. சில சமயங்களில வீட்டில இருக்கிற



அவன்ர அறைக்குள்ள விளையாடிக் கொண்டிருக்கையுக்க சந்தோசமாஇருக்கிறமாதிரி தெரிஞ்சுது. அவன் தனியா இருக்கையிக்க அவன் எப்பவுமே சந்தோசமாயிருக்கிறமாதிரி தெரிஞ்சுது. அதாலதான் டொறத்திய இஞ்ச கிட்ட இருக்கிற பாடசாலைக்கு அனுப்பினம். வார முடிவிலயும் பாடசாலை லீவுக்கும் அவள் வீட்ட வாறவள். ஆனா, அவள் வீட்டில இல்லாட்டி, அவன் கூடுதலாகச் சந்தோசப் படுகிற மாதிரி இருந்தது. அவள் பள்ளிக்கூடத்தில அதிக சந்தோசமாக இருக்கிறாள் என்று நான் நினைக்கிறன். இரண்டு பேருக்கும் ஒத்துப் போகுதில்லை. அவள் டிப்சுக்கு கிட்டப்போனால் அல்லது அவன்ர அறைக்குள்ள போனா, அவன் ஏதோ காட்டு மிருகம் தாக்குறமாதிரி அவளுக்குப் பாய்ந்து அடிப்பான்."

"இப்ப கொஞ்சக் காலமா அவன் துக்கமா இருக்கிற மாதிரி தோன்றுது. அவன் மாறி விட்டது போல் தோன்றுது. பிறகு, நேற்று என்ர கணவர் அவனைக் கூட்டிவந்த போது அவன் குழம்பிப் போயிருந்தான். இரண்டு பேருமே குழம்பிப் போய் இருந்தாங்க. டிப்ஸ் ஒரு முட்டாளைப் போல் புலம்புவதாக அவர் சொன்னார். அத அவர் டிப்சுக்கு முன்னாலேயே சொன்னார்" என்று சொன்னவள் உடைந்துபோய் கடுமையாக விம்மத் தொடங்கினாள். "பிறகு டிப்ஸ் என்ன டிப்ஸ் வெறும் விசரன் மாதிரி புலம்புறான் எண்டு சொன்னார். அதைக் கேட்ட டிப்ஸ் அறைக்கு குறுக்கா நடந்து வந்து கைக்கு அம்பிட்ட ஒரு கதிரையைத் தூக்கி எறிஞ்சான். பிறகு கோப்பி மேசையில் இருந்த கோப்பைகள் கையால வழிச்சு எறிஞ்சு போட்டு தகப்பனை பார்த்து 'உங்கள வெறுக்கிறன்... உங்கள வெறுக்கிறன்' எண்டு கத்தினான். பிறகு ஓடிவந்து அவருக்கு திருப்பித் திருப்பி காலால அடிச்சான். கொஞ்ச நேரம் இழுபறிப்பட்டாப் பிறகு அவனைத் தூக்கிக் கொண்டு போய் அவன்ர அறையுக்குள்ள விட்டுப் பூட்டிப்போட்டார். என்ர கணவர் திரும்பி வந்தபொழுது நான் அழுதுகொண்டிருந்தன். என்னால அழாம இருக்க முடியேல்ல. இப்பிடியான உணர்வு வெளிப்பாடுகள அவருக்குப் பிடிக்காதெண்டு எனக்குத் தெரியும். கண்ணீர் விட்டு அழுகிறத அவர் வெறுக்கிறவர் எண்டும் தெரியும். ஆனா அங்க நடந்தத என்னால தாங்க முடியேல்ல. 'டிப்ஸ் இப்ப மடையன் மாதிரி புலம்பயில்ல. அவன் உங்கள வெறுக்கிறன் எண்டுதான் சொன்னவன்' என்று அவரிட்டச் சொன்னன். என்ர கணவர் ஒரு கதிரையில் இருந்து தானே உண்மையில் அழத் தொடங்கினார். அதச் சகிக்கேலாம இருந்துது. இதுக்கு முதல் ஆம்பிள ஒருத்தர் அழுகிறத நான் ஒருபோதும் காணயில்ல. ஏதாவது ஒண்டு என்ர கணவரையும் கண்ணீர் விடச் செய்யுமெண்டு நான்கனவிலையும் நினைச்சிருக்கையில்ல. நான் பயந்துபோனன். திடீரென்று என்னத்திகில் பிடிச்சுக்கொண்டுது. ஏனெண்டா நான் எவ்வளவுக்கு பயந்து போயிருந்தனோ அந்த அளவுக்கு அவரும் பயந்துபோயிருந்த மாதிரி தெரிஞ்சுது.அந்த வேளையில முந்தி ஒருபோதும் இல்லாத அளவுக்கு நாங்கள் நெருங்கியிருந்த மாதிரி இருந்தது. திடீரென்று நாங்கள் இரண்டு பேருமே பயந்துபோயிருக்கிற தனிமையாயிருக்கிற மகிழ்ச்சியை இழந்துபோன வெறும் மனிதர்களாக ஆகிப்போயிருந்தம். எங்களைச் சுற்றி நாங்க எழுப்பிக்கொண்டிருந்த அரண்கள் எல்லாமே நொருங்கிப் போயிருந்தன. எங்கள கைவிட்டுப் போயிருந்தன. அது பயங்கரமாக இருந்தது. எண்டாலும் ஒரு ஆறுதலாகவும் இருந்துது. நாங்களும் சாதாரண மனிதர்களைப்போல இருக்கமுடியும்... நாங்களும் தவறு விடமுடியும்.... நாங்கள் தவறு விட்டுவிட்டோம் என்பதை ஏற்றுக்கொள்ளவும் முடியும் எண்டு உணர்ந்துகொண்டது பெரிய ஆறுதலா இருந்துது. இறுதியாக எங்களை நாங்களே தேற்றிக்கொண்டோம். டிப்ஸ் தொடர்பா நாங்க பிழைவிட்டு விட்டோம் போலத் தான் இருக்கிறது என்று அவர் சொன்னார். உங்களிட்ட வந்து டிப்ஸ்ஸைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் எண்டு கேட்கப்போறன் எண்டு அவரிட்டச் சொன்னன்" என்றவள் தன்கண்களிலே பயமும் பீதியும் நிறைந்த உணர்வுகள் வெளிப்பட என்னைப் பார்த்தாள். "இப்ப சொல்லுங்கோ... டிப்ஸ் உளரீதியாக பாதிக்கப்பட்டிருக்கிறானா?"

"இல்லை" என்று உடனடியாகவே பதில் சொன்னேன். அந்த 'இல்லை'யை அவள் கேட்க விரும்பியிருக்கக் கூடியதைவிட வலுவாகவே சொன்னேன். "டிப்ஸ் உளரீதியாக பாதிக்கப்பட்டிருக்கிறான் என்று நான் நினைக்கவில்லை" என்றேன்.

நீண்ட இடைவெளி ஒன்று நிலவியது. அதன் பின் ஆழமான பெருமூச்சொன்றை அவள் வெளிவிட்டாள். "அவன்... அவன்... குணமாகி மற்றப்பிள்ளைகளப்போல செயற்பட கற்றுக்கொள்வான் எண்டு நீங்கள்... நீங்கள்... நினைக்கிறீங்களோ?' என்று கேட்டாள். "நான் அப்படித்தான் நினைக்கிறன். ஆனா அதவிட முக்கியமானது என்னண்டா அந்தக் கேள்விக்கான விடையை என்னவிட அதிக துல்லியமாக உங்களால தரமுடியும் என்று நான் நினைக்கிறன். ஏனெண்டா நீங்கள் வீட்டில அவனோட தான் சீவிக்கிறீங்க, அவனோட கதைக்கிறனீங்கக அவனோட விளையாடுறனீங்க, அவன அவதானிக்கிறனீங்க. அநேகமா அந்தக் கேள்விக்கான ஒரு மேலோட்டமான பதில இப்பவே உங்களால சொல்ல முடியும் எண்டு நான் நினைக்கிறன்" என்றேன்.

ஆமென்பது போல் தலையை மெதுவாக அசைத்தாள் "ஓம்" என்ற அவளின் குரல் கிட்டத்தட்ட கிசுகிசுப்பாக ஒலித்தது.

(தொடரும்)




---

(16ஆம் பக்கத் தொடர்ச்சி)

பேரப்பிள்ளைகள் பள்ளிக் கூடம் போவார்கள். போய்ச் சேர்ந்தவர்களுக்கு தனிமை கொடுமை. பூட்டிய வீடு குளிரூட்டி சூடேற்றி- வானொலி தொலைக்காட்சி சிலருக்கு இவை இதமாக இருப்பதில்லை சிலர் மகிழ்ச்சியாக இருக்கின்றார்கள்.

ஓர் அம்மையாருக்கு பைத்தியமே பிடித்து விட்டது. பாவம் எந்த நேரமும் ஐயோ ஊரிலை என்றால் வயல் வெளியில் நடப்பேன் வெளி விறாந்தையில் படுப்பேன் சந்தைக்கு போவேன். என் வயலைப் பார்ப்பேன் என்று புலம்பிக் கொண்டே இருப்பார்.

முதியவர்களுக்கு எதிர் காலம் பற்றிய இனிய கற்பனை இல்லை. மரண பயம் வேறு உடலில் நோய்கள் இந்த நிலையில் இருப்பவர்கள் தனிமைப்படுத்தப் படும் ஒரு வாழ்க்கை வாழ்வது துயரம் தரும் செயல்தான். முடிந்த வரை அன்பு காட்டி ஆதரித்து அரவணைத்து காக்க வேண்டியது கடமை, கட்டாயம் என்று கூட சொல்லாம்.

எங்கள் கிராமத்தில் எத்தனையோ பேர் தனிமையாக இருக்கிறார்கள். அயல் அண்டையில் உள்ளவர்கள் ஏன் சில சுற்றத்தவர்களும் அன்பு காட்டி உதவி செய்து உள்ளம். நோகாமல் காத்துக் கொள்கிறார்கள். பிள்ளைகள் வெளிநாட்டுக்கு போனால் என்ன தம்பி தங்கச்சி காசு அனுப்புவினம் அதுகளும் உழைக்கத்தானே வேண்டும் என்று தங்களை தாங்களே தேற்றிக் கொண்டு இருக்கிறார்கள்.

சொந்த மண் சொர்க்கம் இந்த மண் எங்கள் மண் என்று மகிழ்ச்சியாக மனத்திருப்தியாக இருக்கிறார்கள்.

சில பாட்டன் பாட்டிமார் சொல்வது வெளியே சொல்லப்பயமாக இருக்கிறது. இந்தப் பாழ்பவார் போய்த் தொலைந்து விட்டால் எங்கள் பிள்ளைகள் கூட இஞ்சை வந்திடுங்கள் எங்கட தம்பி அதாவது தலை வர் வழி செய்வார் என்ற நம்பிக்கை அவர்களுக்கு இருக்கிறது.

---

(21ஆம் பக்கத் தொடர்ச்சி)

பக்கமும் உயரமாய்த்தான் கிடந்திச்சிது. எங்கட ஏ-9 எண்டாலும் பரவாயில்லை... குடியர், தடியர், வெடியர் வீடெண்டு அடையாளங்கள் வைக்கலாம். இதென்னடா கரைச்சல்! கோயில்லை துலைஞ்ச பையன மாதிரி ஆகிட்டிதே எண்டு யோசிச்சுக் கொண்டிருக்கேக்கிள்ளைதான், முன்னால எங்கட நிறத்தில 2 தம்பிமார் வந்திச்சினம். "தம்பியவை! ஆர் பெத்ததுகளோ தெரியாது, கடவுள் மாதிரி வந்தீயள். இந்த விலாசத்துக்கு என்னண்டு போறதெண்டு காட்டுவியளோ?", எண்டு நிண்ட வீட்டு விலாசத்தைக் காட்டினன். அவையள் ஏதோ கசமுசா எண்டு கையை அங்காலயும், இஞ்சாலையும் காட்டிச் சொல்லிச்சினம். எட தமிழ்ப்பொடியங்கள் எண்டு நினைச்சுக்கேட்டால், ஏதோ ஒருநீட்டுக்கு கதைச்சுக்கொண்டே போறாங்கள். பாதைதான் சொல்லப்படிது. ஆனால், வலது-இடதுக்கு என்னெ ண்டு தெரியாமல் என்ன செய்யியது. ஏதோ ஒருமாதிரி விளங்கின மாதிரி சிரிச்சுச்சமாளிச்சு அவையளை அனுப்பீட்டு யோசிச்சுக்கொண்டிருக்கேக்கிள்ளைதான் அங்கை வந்த பொலிஸ்காரரை உதவி கேட்டன். அவையள் பாஸ்போர்ட்டை வேண்டிப் பார்த்து, நாட்டுக்குப்புதிசு எண்டு விளங்கிக்கொண்டு தங்கட காரிலையே வீட்டடியில கொண்டு வந்து விட்டிச்சினம். வரேக்கிள்ளை எங்கட நிறத்தில கனசனங்களைக் காணக்கூடியதாய் இருந்திச்சிது. வீட்டை வந்து விசாரிச்சதில தான் விசயம் விளங்கிச்சிது. இந்தியா நெதர்லாந்தின்ரை ஆட்சிக்குக்கீழ இருந்த நேரம் சிறீராம் எண்ட இடத்துக்கு வேலைக்கு ஆட்கள் தேவையெண்டு கொம்பனிக்காரர் சனத்தைச்சேர்த்திருக்கினம். எட சிறீராம்! ஏதோ ஒரு இந்திய நகர மாய்த்தான் இருக்கோணும் எண்டிட்டு, நல்ல சம்பளக்கனவில ஆட்கள் சேர்ந்திருக்கினம். எல்லாரையும் தென்னமெரிக்காவில தங்கட கொலனி நாடான சூரினாம் எண்ட இடத்துக்கு அடிமையளா கப்பலில கொண்டுபோயிருக்கிறாங்கள். இந்தியாவில இன்னுமொரு ஊருக்கு வெளிக்கிட்ட ஆக்கள் பெருந்தூர கடற்பயணத்துக்கு ஈடுகொடுக்கேலாமல் கனக்க செத்தும் போயிட்டினம். அப்பிடி சூரினாமுக்கு ஏமாத்திக் கொண்டு போகப்பட்ட ஆக்கள் பிற்காலத்தில நெதர்லாந்துக்கு வந்திட்டினம் எல்லா இடமும் ஒரே பாஸ்போர்ட் எண்டதால பெரிய சிக்கல்களும் இருக்கேல்லையாம். அப்பிடியான இந்திய வம்சாவழியினர் 1 மில்லியன் அளவில ஹொலண்டில இருக்கினமாம். அரபு நாடுகளில இருந்து வந்த 4 வீதமான முஸ்லீம் சமூகமும் இருக்கினம். மற்றம்படி கத்தோலிக்க மதமும், புரொட்டஸ்தாந்து மதமும் சரிக்குச்சரி இருக்கிது. கூடவே மொத்த மக்களில மூண்டிலொரு பங்கு மக்கள் ஒரு மதமும் வேண்டாமெண்டு ஒதுக்கீட்டும் வாழினம். இந்த நாடு பாருங்கோ தான் ஆக்கிரமிச்சு வைச்சிருந்த பெரீய்ய நாடான இந்தோனேசியாவுக்கு சுதந்திரம் கொடுக்க வேண்டி வந்தாப்பிறகு, சொந்த வளங்களை அடிப்படையாகக் கொண்டு சுயபொருளாதாரத்தைக் கட்டியெழுப்போணும் எண்டு போட்ட திட்டங்கள் நிறைவேற்றி வெற்றி கொள்ளப்பட்ட விதம் இண்டைக்கும் மற்றைய ஐரோப்பிய நாடுகளால கனவு காணப்படிது. வேற என்ன பிள்ளையள்! இண்டைக்கு வெள்ளிக்கிழமை, வேலையால வந்த ஆக்கள் வெளிக்கிட்டுக்கொண்டிருக்கினம். பெல்ஜியம் போவோம் எண்டு கேட்டிச்சினம். சே! இந்த வயசில அனுபவிக்காமல், எப்பையாம் எண்டு நானும் வெளிக்கிட்டுக்கொண்டிருக்கிறன். பேந்து சந்திப்பம்!

**பாவலன் பதில்கள்** என்ற வாசகர்களின் கேள் விகளுக்கான எங்களின் பதில்களை உங்களுக்குத்தரும் நோக்குடன் இந்தப்பகுதிஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான கேள்விகளை கீழ் காணும் முகவரிக்கு நீங்கள் அனுப்பி வைக்கலாம்.

*பாவலன் பதில்கள்,*
*வெள்ளிநாதம்,*
*யாழ்சாலை, கிளிநொச்சி.*

# பாவலன் பதில்கள்



*பாவலா!*
*பைத்தியக்காரர்களுக்கும், பத்திரிகை நிருபர்களுக்கும் உள்ள ஒற்றுமை என்ன.*

*பிரியங்கா,*
*வவுனியா.*

இருவருமே வீதிகளில் அலையும் விதியைக்கொண்டவர்கள்.

*பாவலா!*
*இறந்துபோன எனது மனைவியின் கடைசி ஆசையை நிறைவேற்றவே மறுமணம் செய்கிறேன். அப்போதுதான் மனைவியின் "ஆத்மா சாந்தி அடையும்" இது எப்படியிருக்கிறது.*

*தர்சன்,*
*வட்டக்கச்சி.*

பாவம் இறந்த பின்பும் உங்களை அவர் நிம்மதியாக வாழவிட விரும்பவில்லைப் போலும்... விதி யாரைத்தான் விட்டது...!?

*பாவலா!*
*சினிமா உலகில் இருந்து இன்றைய சமூகத்தை மீட்க வழி ஒன்று கூறுங்கள்.*

*துஷாந்தி,*
*புளியங்குளம்.*

கடவுள் தான் காப்பாற்ற வேண்டும்...! ஆனால் அது சாத்தியமில்லை... இந்த வேளையில் ஒரு கவிஞனின் வார்த்தைகள் நினைவுக்கு வருகின்றன...

'மனமாற்றம் வருமென்ற மடமையினைக் கைவிட்டு
ஆற்றல்மிகு கரத்தில் ஆயுதங்கள் ஏந்துவதே
மாற்றத்திற்கான வழி மாற்றுவழி ஏதுமில்லை'

எல்லாப் பிரச்சினைகளுக்கும் இது பொருத்தமாக உள்ளதல்லவா.

*பாவலா!*
*சின்னத்திரை தொடர்கள் தொடங்கிவிட்டால் மாலையில் நான் வேலையால் வருவதைக் கூட கவனிப்பதாக இல்லை எனது மனைவி. மின்சாரம் பெறுவதை நிறுத்திவிட்டால் சம்சாரம் விவாகரத்து பெற்று விடுவாள் போல் நிலைமை உள்ளது என்ன செய்யலாம்.*

*க.கேதீஸ்வரன்*
*ஏழாலை.*

நல்ல காரியத்தை உடனே செய்யுங்கள்... மின்சாரத்தை நிறுத்திவிடுங்கள் - பல தொல்லைகள் நீங்கிவிடும்.

*பாவலா!*
*காதலிக்கும் போது நீ மட்டும் கிடைத்தால் போதும் என்கிற சில ஆண்கள் கலியாணத்தின் பின் சீதனம் கேட்டு கொடுமைப்படுத்துகிறார்கள் இதுபற்றி உமது கருத்து?*

*இ.ஷேனுஜா*
*உரும்பிராய்.*

காதலிக்கும் நீங்கள் மட்டும் எனக்கு துணையாக இருந்தால் போதும், வாழ்வே சொர்க்கமாகிவிடும் என்றுசொல்லும் சில பெண்கள் கல்யாணமானதும் நிஜமாகவே சொர்க்க வாழ்க்கைக்கான வசதிகளைக் கேட்டால் அவன் தான் என்ன செய்வதாம்?

*பாவலா!*
*சச்சின் - விஜய் இருவரில் உங்களுக்கு பிடித்தது யாரை?*

*சுபாசினி,*
*கிளிநொச்சி.*

முன்னவர் விளையாட்டரங்கில் விளையாடுபவர் பின்னவர் திரையரங்கில் விளையாடுபவர்... இருவரின் ஆட்டமும் சந்தோஷம் தருபவையே..!

*பாவலா!*
*ஜயந்ததனபாலவின் எதிர்காலம் பற்றி கூறமுடியுமா?*

*சிவா,*
*உருத்திரபுரம்.*

நான் ஐ.நா.வின் எதிர்காலம் குறித்து கவலைப்படுகிறேன்.

*பாவலரே!*
*பெற்றோரை மறக்கும் பிள்ளைகளுக்கு என்ன கூற விரும்புகின்றீர்.*

*யாழினி,*
*யாழ்ப்பாணம்.*

அவரலர் கடமையில் கண்ணாக இருங்கள் பெருமைகள் உங்களைத் தேடியே வரும் அவ்வளவுதான்.

*பாவலா!*
*பல வியாபார நிலையங்களில் மிகுதி ஒரு சில ரூபாய்களுக்கு இனிப்புகளை தருகிறார்கள் கேட்டால் சில்லறை தட்டுப்பாடு என்கிறார்கள் பின்னர் அதே இனிப்பை அந்த பெறுமதிக்கு பதிலாக கொடுத்தால் ஏற்க மறுக்கிறார்கள் இவர்களை என்ன செய்யலாம்.*

*தர்மினி,*
*கோணாவில்.*

சில்லறைப் புத்தி... சிலருக்கு மிக அதிகம்... இனிப்பாக கொடுத்தால் பலருக்கு கசப்பாக இருக்கும் என அவர்கள் அறிவதேயில்லை.

*பாவலா!*
*''ஊருக்கு தான் உபதேசம் எனக்கில்லை'' இப்படியானவர்களுக்கு உங்கள் உபதேசம் என்ன?*

*துஷான்,*
*வவுனியா,*

தேசம் உயரவேண்டுமெனில் உபதேசங்களைக் குறைக்க வேண்டும் என்ற கொள்கையுடையவன் நான்.. உபதேசியாக இருப்பதைவிட பரதேசியாக இருக்கவே விரும்புகிறேன்.




வரவர சினிமாப் பார்த்துத்தான் பொடியள் கெட்டுப் போறாங்கள்...

ஏன் மாஸ்டர் அப்பிடிச் சொல்லுறியள் படம் பாக்கிறதால நல்லவனா மாறினவன் இல்லையோ.

இருந்தா அது கதா நாயகனை நல்லவனாக் காட்டின காலத்திலதான்.

சும்மா போங்கோ மாஸ்டர் எம்ஜியார் காலத்து மனிசர் தானே நாங்கள். எம்ஜியார் விசிறி ஆனா அஞ்சுமணிக்குப் பிறகு போத்தலுங் கையுமா நாய் மாரித்தானே நிண்டநாங்கள்.

அதுசரி அப்ப அரையடிச்சாத்தானே தியேட்டருக்கும் போறது அப்பவும் அப்புவுக்குப்பயம். ஒளிஞ்சொளிஞ்சு செக்கன் ஷோபாக்கிறது.

இப்ப தியேட்டர் வீட்டில அலைச்சலில்லாமத்தானே பாக்குதுகள் உதென்னடா படிப்பில்லையே எண்டு கேட்டா விஜய் பாணியில 'அடங்கு' எண்டெல்லே சொல்லுறான். உதுக்குப் பிறகு நான் பேசாமப் போகவேண்டியதுதானே.

அது...! இப்பத்தயப் பொடியள் சொன்னா சொன்னபடி பெரிசுகள் நடக்கிறம். பிறகு அதுகளென்னண்டு திருந்திற.

திருந்திறதுக்கு அதுகள் என்ன பிழையே விடுதுகள், ஏதோ படத்தில பாக்கிற கதாநாயகன் மாதிரி- பெட்டையளுக்குப் பின்னால அலையிறது. புகைஊதுறது அடிதடியில இறங்கிறது. அங்கின பாட்டிவழிய எப்பன் குடிக்குதுகள். இதையெல்லாம் நிப்பாட்டி விட்டா அதுகளுக்கு வாழ்க்கையில என்ன பிடிப்பிருக்கப் போகுது.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –115



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினை வுப் பரிசு வழங்கப்படும்.

## படத்திற்கு மெருகூட்டுங்கள்–115

.......................................................................
.......................................................................
.......................................................................
.......................................................................

பெயர் : .......................................... ஈழநாதம்
முகவரி : .......................................... யாழ்சாலை,
.......................................... கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –114



**சு.ராஜசெல்வி,**
**சென்திரேசா பெண்கள்-கல்லூரி,**
**கிளிநொச்சி.**

## பரிசுக்குரிய வரிகள்

*வளம்கொளிக்கும் நம் வீடும் வற்றாத கிணறும்*
*உயர்பாதுகாப்பு வலய வலையினுள்ளே- நாம்*
*ஒருகுடம் தண்ணீருக்கே தவியாய் தவிக்கிறோம்- இருந்தும்*
*எம் தணியாத தாகம் தமிழீழத் தாயகமே.*

## பாராட்டுக்குரிய வரிகள்

*குழாய் நீரின்றிப் போனால்*
*குடிநீர் கூடயில்லையென எண்ணுகிறாயே*
*தங்கையோ தண்ணீருக்கு என்றும்*
*தமிழீழத்தில் பஞ்சமில்லை எனக்கொள்.*

சி.மதீஸ்,
புதுக்குடியிருப்பு.

*தங்கையே தண்ணீர் நிறைக்கவே இயலவில்லையா?*
*தளராத வலுவை உன் மனதில் நிறைத்து*
*தகர்த்தெறியடி உடலிலுள்ள இயலாமையை*
*தாரளமாய் மிக விரைவில் உன்குடங்கள் நிறையும்.*

திருமதி-சு.சிவாஜினி,
புதுக்குடியிருப்பு.

*கம்பி பிடித்து வளைந்து நிமிர்ந்து*
*தண்ணீர் எடுக்கும் சகோதரியே - நீ*
*அண்ணன் அணியில் சேர்ந்திருந்தால் அகதியாகியிராய்*
*மாறாக- எதிரிகளை அகதியாக்கியிருப்பாய்.*

தெய்.சதீஷ்பாபு,
கைதடி.


*சுனாமியின் கோரத்தால்- ஊரிழந்து*
*உறவிழந்து, நலன்புரி நிலையத்தில்- இன்று*
*குழாய்க்கிணற்றில், குடிநீர் அள்ளுகின்றாள்-*
*தனிமரமாய் பெண்ணிவள்.*

த.கோகுலன்,
கனகாம்பிகைக்குளம்.

*தங்கையே உன் விழிகள் யாரை தேடுதிங்கே*
*கைகடுக்க அசைத்தெடுத்த தண்ணீர் குடம் நிறைந்துவிட்டது*
*யார் தாகம் தீர்த்திட ஓடி வந்தாய்*
*தயங்காமல் எடுத்துக்கொண்டு உன் வீடு சென்றுவிடு.*

இ.நிர்மலாதேவி,
புதுக்குடியிருப்பு.

இந்தப் போட்டிக்கான நினைவுப்பரிசினை **அருச்சுனா புகைப்படக் கலையகம்** வழங்குகின்றது.
கிளிநொச்சி. புதுக்குடியிருப்பு



177D, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தில் இயங்கி வந்த

## சிறி கருமாரி நகையகம்

தற்போது புதிய இடத்தில்...

22 கரட் தங்க நகைகளை
செய்து பெற்றுக்கொள்ள
சிறந்த ஸ்தாபனம்

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்!

# சிறி கருமாரி நகையகம்

205/6, கஸ்தூரியார் வீதி, ராஜா தியேட்டர் கட்டடம், யாழ்ப்பாணம்
தொ.பேசி: 021-222 5385 (C-11475)

# திருமண அழைப்பிதழ்



அன்புடையீர்!
நிகழும் மங்களகரமான பார்த்திப வருடம் சித்திரை மாதம் 09 நாள் (22-04-2005) வெள்ளிக்கிழமை காலை 08.07 மணி முதல் 09.55 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில்

எமது சகோதரன்
திருநிறைச்செல்வன்
ஜெயச்சந்திரன்
(ஜெயராம்)
அவர்களுக்கும்

எமது புதல்வி
திருநிறைச்செல்வி
ஜெயவதனா
அவர்களுக்கும்

திருமாங்கல்யதாரணம் செய்ய பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு இல-153.ஆனந்தநகர். சேவியர்கடைச்சந்தி அருகாமை. கிளிநொச்சியிலுள்ள மணமகள் இல்லத்தில் நடைபெறத் திருவருள் கைகூடியுள்ளதால். அத்தருணம் தாங்கள் குடும்பத்துடன் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

இவ்வண்ணம் தங்கள் நல்வரவை நாடும்

திரு.திருமதி.வெ.இளங்குமரன்
திரு.திருமதி. ந.செல்வச்சந்திரன்
திரு.திருமதி. து.ஜெயகாந்தன்
திரு.திருமதி. து.நக்கீரன்
திரு.திருமதி. க.குகதாஸ்
திரு.திருமதி. மு.அழகராசா

இவ்வழைப்பைத்
தனிப்பட்ட
அழைப்பாக
ஏற்றுக்கொள்ளவும்

(இரு வீட்டார் அழைப்பும்)

திருமதி.ம.சந்திரநாககி
திரு.திருமதி. ம.மணிவண்ணன்
திரு.திருமதி. கி.அருளாநந்தன்
திரு.திருமதி. ம.நிதிவண்ணன்

# காணாமல் துடிக்கின்றோம் கண்டவர்கள் தெரிவியுங்கள்



## செல்வன் கணேஸ்வரன் சரண்ராஜ்
வயது – 17

கடந்த 26-12-2004 அன்று முல்லைத்தீவில் ஏற்பட்ட சுனாமி கடல் அனர்த்தத்தின் போது முல்லைப்பட்டினத்தில் வசித்து வந்த க.சரண்ராஜ் என்பவர் மயக்கமடைந்த நிலையில் நோயாளர் காவுவண்டி(அம்புலன்ஸ்)யில் ஏற்றப்பட்டதாக பலர் எமக்குத் தெரிவித்தார்கள். ஆனால் எல்லா வைத்தியசாலையில் தேடியும் இதுவரை எனது மகனைக் காணவில்லை. யாராவது இவர் நலன் கருதி வைத்தியம் செய்து கொண்டிருப்பின் இவரின் உண்மைநிலையினை எமக்கு தந்துதவுமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

தகவல் தரவேண்டிய முகவரி: க.கணேஸ்வரன்,
இலக்கம்-42
கரைச்சிக்குடியிருப்பு முகாம்
முல்லைத்தீவு.

# மீண்டும் யாழ்ப்பாணத்தில்...
# ஈழநாதத்தின் கிளைப்பணிமனை

தொடர்புகளுக்கு:
இல:31,வைமன் வீதி,யாழ்ப்பாணம்.
தொ.பே:021-222 7917

# ஏமாற வேண்டாம்

ASTRA Sun

போலிகளால் ஏமாறாதீர்கள்

அஸ்ட்ரா. சன் நூல்களை வாங்கும் போது இப்புதிய அம்சங்களை அவதானியுங்கள்



இதோ எமது புதிய உறைகள்



கோட்ஸ் இலச்சினையுடன் ஹொலோகிறாம் ஸ்டிக்கர்

தரமான தையல் நூல்களுக்கு ASTRA Sun

கோட்ஸ் திரட் லங்கா.
163, யூனியன் பிளேஸ், கொழும்பு 2.
தொலைபேசி : 2307358

வடக்கில் எமது ஏக விநியோகஸ்தர்

வைரமாளிகை
எண் 65, கண்டி வீதி, கிளிநொச்சி.
தொலைபேசி / தொலைநகல் : 021 222...

நியு சொப்பிங் சென்ரர்
இல 131/6, CKS ரோட், யாழ்ப்பாணம்.

# EXPOAIR
your friend in the skies...

எக்ஸ்போ எயாரில் பயணியுங்கள்...
யாழ்ப்பாணத்தைக்கண்டுகளியுங்கள்...
அனுபவம் வாய்ந்த நட்புறவு...
நம்பகத்திற்கு எக்ஸ்போ எயார்...



EXPO AVIATION(PVT)LTD.
1E,Stanly Road, Jaffna.
Tel: 021-222 3891/6297 077-2349999/8888
email:Jaffna@expoavi.com/reservations@expoavi.com

(C-10120)

...கை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது